சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 4 22-2-'42 Price 2 Annas.

குழந்தைப்பருவத்தில்
முக்கியமான சுகத்தைத் தரும்
வுட்வார்ட் வைத்தியனின்
"கிரைப் வாட்டர்"
என்னும் மருந்துத் திராவகம்
குழந்தைக்கு
ஆரோக்யத்தைத் தரும்.

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

சுதேசமித்திரன்

வாரப் பதிப்பு. - 22-2-'42

மியாமியில் வின்ட்ஸர் தம்பதிகள்.

சமீபத்தில் நாஸாவிலிருந்து வின்ட்ஸர் கோமகனும் அவரது மனைவியாரும மியாமிக்கு ஆகாய விமானத்தில் வந்திறங்கினர். ஆறு வார காலத்தில் சுமார் 10000 மைல்களுக்கதிகமாக யுனைடெட் ஸ்டேட்ஸிலும் கானடாவிலும் சுற்றிப் பார்க்க அவர்கள் திட்டம் போட்டிருக்கின்றனர். மோட்டாரிலிருந்து இறங்கி ஹோட்டலுக்குள் அவர்கள் நுழைந்தனர். அவர்களுக்குப் பின்னே ஒரு துப்பறிபவர் இருப்பதை படத்தில் காணலாம்,

(இ. என். பி.)

சிங்கப்பூர் மஹத்தான போராட்டத்திற்கும் பின் எதிரிவசமாகிவிட்டதை அவர் குறிப்பிட்டு, இனியும் இருக்கும் அபாயத்திலிருந்து தப்ப எல்லோரும் உதவ வேண்டுமென்று கூறினர்

இம்மாதம் 11-ம் தேதி சிங்கப்பூருக்குள் ஜப்பானியப் படை நுழைந்தது. அன்றைய தினமே மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆயினும் சிங்கப்பூரைக் கைவிடக்கூடாது என்று பலமான பாதுகாப்பு செய்யப்பட்டது: நகருக்குள் புகுந்ததினமே மலேயாவிலுள்ள கோட்டை முழுவதையும், நிபந்தனையில்லாமல் ஜப்பானியரிடம் பிரிட்டிஷ் சேனாதிபதி ஒப்புவித்துவிட வேண்டுமென்று கோரி ஒரு நோட்டீஸ் ஜப்பானிய விமானம் ஒன்றிலிருந்து கீழே வீசப்பட்டது. இதற்குப் பதில் கொடுக்கப்படவில்லை" மறு முறையும் இதே மாதிரி கோரப்பட்டது. நான்கு தினங்கள் மிகவும் உக்ரமாக சிங்கப்பூரில் போராட்டம் நடைபெற்றது. கடைசியாக 15-ம் தேதி மாலை சிங்கப்பூரில் யுத்தம் நிறுத்தப்பட்டு, பிரிட்டிஷ் படை சரண் புகுந்தது: பிரிட்டிஷ் படையின் தீரத்தை ஜப்பானியரும் பாராட்டினர்.

சிங்கப்பூருக்கு 5 மைல்களுக்கப்பால் புகிட்டிமா என்ற இடத்தில், போர்ட் மோட்டார் தொழிற்சாலையில், மலேயாவில் இருக்கும் ஜப்பானிய படைத் தலைவரும் பிரிட்டிஷ் படைத் தலைவரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

* * * *

"நார்மண்டி" கப்பல்

நியூயார்க் துறைமுகத்திலிருந்த, முன்பு பிரெஞ்சுக் கப்பலான "நார்மண்டி"யில் தீப்பிடித்துக்கொண்டது. இம்மாதம் 10-ம் தேதி காலை கவிழ்ந்தது.

"நார்மண்டி" கப்பலில் பிடித்திருந்த தீ அணைக்கப்பட்டது. மேல் மூன்று தளங்களில் மாத்திரமே சேதமிருந்தது. பக்கவாட்டாகக் கவிழ்ந்து கிடக்கும் கப்பல், தூக்கி நிறுத்தப்பட்டு ரிப்பேர் செய்யப்படுமெனக் கூறப்படுகிறது.

* * * *

பிரிட்டிஷ் சர்க்கார் அக்கரை

இந்திய சர்க்கார் பின் வரும் அறிக்கையை இம்மாதம் 12-ந் தேதி வெளியிட்டனர்.

யுத்தக் கொள்கைகளை வகுப்பதற்காக நிறுவப்பட்டிருக்கும் பஸிபிக் யுத்த சபையிலும், சாம்ராஜ்ய யுத்த சபையிலும் மற்ற குடியேற்ற நாடுகளைப் போல இந்தியாவுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க பிரிட்டிஷ் சர்க்கார் அக்கரை கொண்டிருக்கிறார்கள். அத்தகைய பிரதிநிதித்

சென்றவார நிகழ்ச்சிகள்

சிங்கப்பூர் சரண்

"மஹத்தான ஒரு தோல்வி நமக்கு ஏற்பட்டிருக்கும் சமயத்தில் நான் உங்கள் முன்பு பேசுகிறேன். அது பிரிட்டனுக்கும் சாம்ராஜ்யத்திற்கும் தோல்வியாகும். சிங்கப்பூர் வீழ்ந்து விட்டது. மலேயா முழுதும் எதிரியின் வசமாகி விட்டது. அங்கு நமக்கு இதர உபத்திரவங்களும் தலை காட்ட ஆரம்பித்திருக்கின்றன. இது வரை இங்கும் கீழ்ப் பிரதேசத்திலும் நாம் திருப்திகரமாக நடத்திவந்த போராட்டத்தின் அபாயம் இன்னும் தீர்ந்தபாடில்லை. பிரிட்டிஷ்காரர் தங்களது குணத்தையும் சிறப்பையும் நிரூபிக்கக் கூடிய சந்தர்ப்பங்களுள் இதுவும் ஒன்று: துரத்ருஷ்டம் சூழ்ந்த இந்த சமயத்திலும் வெற்றிக்காக முன் வர வேண்டும். அமைதியுடனும் திடமனதுடனும் இருந்து முன்பு போலவே, நாம் தப்ப வேண்டும். தோல்வியையும் பெருந்தன்மையுடன் வரவேற்று, நாம் நமது கக்ஷியை பலப்படுத்திக்கொள்ள முடியும் என்பதை மறுபடியும் எடுத்துக்காட்டுவதற்கான சந்தர்ப்பம் இது. நாம் மட்டும் தனித்திருக்கவில்லை; நமக்கு பெரிய சகாக்கள் இருக்கின்றனர்: மானிட கோஷ்டியில் 4-ல் 3 பங்கு நமக்கு உதவியாக நிற்கிறது. நாம் அனுஷ்டிக்கும் காரியத்தையும், நமது நடத்தையையும் தான் மானிட வர்க்கத்தின் எதிர்காலம் தழுவியிருக்கிறது. இதுவரை நாம் பின் வாங்கவில்லை. இனியும் நாம் பின் வாங்கமாட்டோம். நாம் ஒன்றுபட்டு, இவ் விபரீதத்திலிருந்து மீளுவோம்"-இம்மாதம் 15-ம் தேதி பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சில் இவ்விதம் ரேடியோ மூலம் பேசினர்.

அழகு மிகுந்த சிங்கப்பூர்.

"ஹரிஜன்" கட்டுரை

அந்நிய பாஷை

★ ★ **மஹாத்மா காந்தி**

எழுதியது

ஒரு நண்பரின் குற்றச் சாட்டுக்கு மஹாத்மா காந்திஜி எழுதியிருக்கும் பதில், தாய் பாஷையில் அபிமானம் கொண்டிருப்பவர் அனைவரும் படித்தறியவேண்டும். ஆங்கில பாஷையைப் பற்றியும், அதற்குறிய ஸ்தானத்தைப் பற்றியும், தாய் பாஷையை ஆதரிப்பது பற்றியும் மஹாத்மாஜி ஆர்வத்துடன் எழுதியிருக்கிறர்:

"இந்தியர் ஆங்கிலத்தில் பேசுவதோ, அல்லது அப்பாஷையை அப்யஸிப்பதோ, பாபகரமானது என்று காசியில் நீங்கள் பேசியதாக வெளியாகியிருக்கின்றது. இவ்வாறு வெறுக்கப்படும் பாஷையை நீங்கள் உங்களுக்கு அவசியமானபோது உபயோகிப்பது தகாது"-இவ்விதம் மஹாத்மாஜிக்கு ஒரு நண்பர் எழுதியதற்கு மஹாத்மாஜி 'ஹரிஜன்' பத்திரிகை மூலம் பதில் அளித்திருக்கிறர். அது வருமாறு:—

"முழுதும் அபத்தம்"

"பத்திரிகையில் பிரசுரமானது முழுதும் அபத்தம். பொய் பரவவாரம்பித்துவிட்டால் அதைத் தடுப்பது சுலபமல்ல. என்னைப் பற்றி இதே மாதிரி பல பொய் செய்திகள் வெளிக்கிளம்பின. சிறிது காலம் அவற்றைப்பற்றிப் பேச்சு; பிறகு என் பிரயத்தினம் சிறிதுமின்றி அவை தாமாகவே மறைந்தன. அதே போல் இதுவும் மறையும். ஆதாரமற்ற பொய் எவருக்கும் தீங்கிழைத்ததில்லை, இந்தக் கேள்விக்கு நான் பதில் கொடுப்பதன் காரணம் என் கௌரவத்தைக் காக்கவேண்டுமென்றல்ல. எனது கருத்தை ஸ்பஷ்டமாக்குவதற்காகத்தான். உண்மையாக நான் நடந்து கொள்ளவில்லை என்று கூறுவதே இந்த பொய்க்கு சரியான மறுப்பாகும். ஆங்கில பாஷையை நான் தாராளமாகப் பிரயோகிப்பது புதிதல்ல. இந்தக் குற்றச்சாட்டுக்கு இடம் கொடுத்து நம்பியிருக்கக்கூடாது.

நான் விரும்புவது

இங்கிலீஷ் பாஷையிலும் இங்கிலீஷ்காரரிடமும் எனக்கு ப்ரீதி உண்டு என்பதை எல்லோரும் அறிவார்களாக! ஆனல் என்னுடைய ப்ரீதி புத்தி சாதுர்யமானது; விவேகமானது: ஆகவே இரண்டிற்கும் உரிய ஸ்தானத்தை நான் அளிக்கிறேன். ஆங்கில பாஷை, தாய் பாஷையையோ அல்லது அகில இந்திய பாஷையான ஹிந்துஸ்தானியையோ காட்டிலும் மேலான நிலை அடைய நான் விடமாட்டேன், இங்கிலீஷ்காரரிடம் கொண்ட ப்ரீதி காரணமாக என் சகோதரர்கள் உரிமைக்கு பாதகம் ஏற்பட்டு வருவதைச் சஹித்துக் கொண்டிருக்க மாட்டேன். சர்வதேச விவகாரங்களில் ஆங்கில பாஷைக்கு உன்னத ஸ்தானம் இருப்பதை நான் உணர்ந்தவன். பல நாட்டினர் முன்னிலையில் நம் நாட்டுக் கட்சியை எடுத்துரைக்க வேண்டிய சிலருக்கு அந்த பாஷாபயிற்சியும் அவசியம் என்று நான் திட்டமாகக்கூறுவேன். மேனாட்டு அறிஞர்கள் எழுதிய புத்தகங்களையும் விஞ்ஞான நூல்களையும் நாம் படிப்பதற்கு அந்த பாஷை தான் உதவுகிறது. இவ்விஷயமாகக் கூட நான் ஒரு தனி ஏற்பாடுசெய்வேன். இத்தகைய புத்தகங்களை ஒரு சிலர் படித்து தாங்கள் கற்றதை இந்திய பாஷைகளில் அவர்கள் பிறருக்குத் தெரிவிக்கும்படி நான் பண்ணுவேன். ஆனல் ஒரு அந்நிய பாஷையை அப்யஸித்து அதன் மூலம் தங்களது அறிவை நம் நாட்டு சிறுவர்கள் விருத்திசெய்து கொள்வதை நான் ஆதரிக்கமாட்டேன். அநாவசிய உபத்திரவம் ஏற்படுவதை நான் தடுப்பேன்.

குற்றம் யார் மீது?

தற்போதைய நமது படிப்பு முறை இயற்கைக்கு விரோதமாயிருப்பதற்கு, அதற்குக் காரணமானவர்களிடம் தான் நான் குற்றம் காட்டுவேன்.

இந்த உலகத்தில் வேறு எங்கும் இம்மாதிரியான நிலைமை கிடையாது. இதனல் ஏற்படும் பாதகத்தை நாம் இப்போது உணர முடியாது. காலம் போக போகத்தான் அது புலப்படும். தினமும் நான் நம் நாட்டின் அவதியுறும் ஆயிரக்கணக்கான மக்களுடன் பழகுவதால் எனக்கு நம நாட்டிற்கு இழைக்கப்பட்ட தீமை எவ்வளவு மஹத்தானது என்பது தெரிகிறது!"



"ஆர்க் ராயல்" கப்பல் மூழ்கடிக்கப்பட்டது அக் கப்பல் மூழ்குமுன் வேறு ஒரு பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் அதன் பக்கம் போய், கப்பலிலிருந்தவரைப் பத்திரமாகக் கொண்டு வந்தது. (இ. என். பி)



நியூயார்க் துறைமுகத்தில் தீப்பற்றி சேதமடைந்த "நார் மணடி" என்ற கப்பல். (இ. என். பி.)

(முன் பக்கத் தொடர்ச்சி)

வம் அவசியமென்று கருதும்பட்சத்தில் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்குமாறு இந்திய சர்க்காரைக் கேட்டிருக்கிறார்கள்.

* * * *

"சுதந்திரமற்ற வாழ்வு"

சமீபத்தில் காசி சர்வகலாசாலை மாணவர் கூட்டத்தில் ஸ்ரீமதி ஸரோஜனி தேவி பின் வருமாறு பேசினர்.

உலகிலுள்ள நாடுகள் இன்று பெருத்த யுத்தம் புரிந்து வருகின்றன. எல்லையற்ற அழிவுக்கே அவை வழி தேடுகின்றன. உலகம் பூராவும் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது, சுதந்திரத்தில் ஆர்வம் கொண்டுள்ள தேசங்கள் அதைக் காப்பதற்காகப் போர் புரிகின்றன. இந்த நிலைமையில் அடிமை இந்தியா அவற்றிற்குச் சொல்ல என்ன இருக்கிறது?

இந்தியா கலை உணர்வு மிகுந்த நாடு. தர்மங்களை வளர்க்கும் நாடு. துயர் மிகுந்த உலகிற்கு அது விடுக்கக் கூடிய செய்தி ஒன்றிருக்கிறது. அது தான் சுதந்திர முழக்கம். இப்பொழுது இந்தியாவிலுள்ள சீனத் தலைவரும் அவரது மனைவியும் இங்கிருந்து சீனவுக்கு இதைத் தவிர வேறென்ன செய்தியைக் கொண்டு செல்வர்?

சுதந்திர மற்ற வாழ்வு வாழ்வாகுமா? உலகில் எது கிடைப்பதாக இருந்தாலும் சரி, அதற்காக நாம் சுதந்திரத்தை விட்டுக் கொடுக்க முடியாது. சுதந்திரம் பெற இந்தியாவிலுள்ள யுவர்களும் யுவதிகளும் உறுதி கொள்ள வேண்டும். எல்லாத் துறைகளிலும் சுதந்திரம் வேண்டும தவறு செய்வதற்குக் கூட சுதந்திரமிருக்க வேண்டும்.

உலகின் எதிர்காலம் வயோதிகரைப் பொறுத்ததில்லை. யுவரையே பொறுத்திருக்கிறது. மேனாடு பூராவும் உலகாயதத் தன்மை படைத்ததாகவும், கீழ் நாடுகள் ஆத்மீக தர்மத்தில் சிறந்து விளங்குவதாகவும் கூறுவது பெருத்த தவறு: தர்மம் இது மாதிரி நாடுகளுக்கிடையே பிரிந்து கிடக்கவில்லை. கூடிய சீக்கிரத்தில் புதிய உலக முறை ஏற்பட்டே தீரும். மாணவர்கள் படித்துவிட்டு எடுத்ததற்கெல்லாம் குறை சொல்லிக்கொண்டிருப்பதில் பலனில்லை. அவர்கள் சமூக சேவையில் இறங்க வேண்டும். சிதறுண்டு கிடக்கும் உலகை ஒன்று படுத்த வேண்டுமானல் அதற்காக அனைவரும் ஸேவை புரிய வேண்டும்: அப்பொழுது தான் புதிய முறை தழைக்க ஆரம்பிக்கும். ஸ்வராஜ்யமென்பது அதுதான்.

* * * *

என் தபால் பெட்டி

★

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் எழுதியது.

★

நாட்டில் பிராபல்யம் பெற்றவர்களது கையெழுத்துகளைச் சேகரிப்பது இப்போது வழக்கமாகியிருக்கிறது. சமீபத்தில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் காங்கிரஸ்கமிட்டி கூட்டத்திலிருந்து வெளியே வருகையில் ஒரு சிறுவன் அவரையண்டி அவரது கையெழுத்தைக் கோரிய சமயம் எடுத்த படம்.

கடிதம் எழுதும் வழக்கம்

சில வருஷங்கள் முன்பு வரை, தபால்காரன் வருகையைப்பற்றி நான் கவலைப்பட்டதே கிடையாது: சில பில்களும், ஏதோ ஒன்றிரண்டு சுற்றறிக்கையும், எப்போதாவது ஒரு சமயம் ஒரு நண்பரிடமிருந்து கடிதமும் தான் எனக்கு வருவது வழக்கம். கடிதப் போக்குவரத்தில் எனக்கு அசிரத்தை அதிகம். என் நண்பர்களைப் பற்றி நான் சதா மனதில் நினைப்பேனுயினும், அவர்களுக்குக் கடிதம் எழுதி என் எண்ணத்தை தெரியப்படுத்துவது கிடையாது. என் அத்ருஷ்டம் காரணமாக அவர்கள் என் மனோநிலையை உணர்ந்திருப்பவர்கள்! என்னிடம் காணப்படும் இத்தகைய பெரிய குறையையும் அவர்கள் அலக்ஷியமாகக் கருதி என்னுடன் சிநேகம் கொண்டிருக்கின்றனர்.

"நடுக்கம் எடுக்கும் நிலை"

சென்ற இரண்டு வருஷங்களாக இந்த திருப்திகரமான நிலை மாறிவிட்டிருக்கிறது. வீட்டுக்கு முன்புறமுள்ள தோட்டத்தில் தபால்காரன் வருவதைக் கண்டாலே எனக்கு நடுக்கம் எடுத்து விடும் ஸ்திதிக்கு நான் இப்போது வந்திருக்கிறேன், ஒளியாமல் கூறிவிடுகிறேன்! கடிதங்கள் ஏராளமாக என் மேஜையில் குவிந்து விட்ட பின்பு, அவை ஒவ்வொன்றுக்கும் பதில் எழுத எனக்கு நிர்ப்பந்தம் தோன்றுகிறது!

காரியார்த்தமான கடிதங்களுக்குப் பதில் எழுதுவதில் கஷ்டமிருப்பதில்லை: நண்பர்கள் எழுதும் கடிதங்களை சாவகாசமாகப் படித்துப் பதில் எழுதலாம் என்று தனியாக வைத்து விடுவேன்: இதற்கப்புறம் தான், என்னை திடுக்கிடச் செய்யும் கடமை தலை காட்டுகிறது: "தபால் மூலம் நட்பு சம்பாதிக்க விரும்புவோர்" (Fan-mail) எழுதும் கடிதங்களுக்குப் பதில் அனுப்புவது தான் அது: பிரதி தினமும் இத்தகைய கடிதங்கள் அபரிமிதமாக வந்து கொட்டுகின்றன.

பலவகைக் கடிதங்கள்

இந்த கடிதங்களை மூவகையாகப் பிரிக்கலாம்: பாராட்டுபவை ஒரு சில: எனதுபோட்டோவையோ கையெழுத்தையோ அபேக்ஷிப்பவை வேறு சில; கோபத்தைக் காட்டிலும் வருத்தத்தை அதிகம் தெரிவிப்பவை மற்றும் சில. என் போன்ற ஸ்திரீயிடம் முறையிட்டால், என் நல்ல குணம் மேலிட்டு நான் உதவுவேன் என்ற நம்பிக்கையைக் கொண்டவர் எழுதியவை அவை: ஆனால் ஸ்திரீயிடம் முறையிடுவதில் விருப்பமற்றவர்கள் அவர்கள்.

நம் இந்தியர் எழுதும் கடிதங்களில் பெரும்பாலும் உணர்ச்சியை எழுப்பவல்ல பதப்பிரயோகங்களைக் காணலாம்: இந்த கடிதத்தின் கருத்து என்ன என்பதைக் கண்டு பிடிப்பதற்குள், அநேகம் அழகிய வாக்கியங்களையும் சாதுர்யமான சிலேடைகளையும் படித்து முடித்தாக வேண்டும். கடைசி பாராவில் தான் சூக்ஷமம் கிடக்கும்.

ஒரு யுவர் எழுதியது

உணர்ச்சி மிகுந்த ஒரு யுவர் பின்வருமாறு எழுதுகிறார், "தேவதையே, தங்களது அழகு என்ற ஆலயத்தில் நான் பூஜை பண்ணுகிறேன். அழகு, தைர்யம், புத்திகூர்மை, வினயம், முதலியன யாவும் ஒருங்கே பொருந்திய ஒருவரைக் காண இவ்வளவு காலமாக நான் ஆவலுடன் இருந்து வந்திருக்கிறேன். இப்போது அவை யாவும் தங்களிடம் அமைந்திருப்பதை நான் காண்கிறேன். தாழ்மையுடன் நான் தெரிவிக்கும் வணக்கத்தை ஏற்றுக்கொள்ளவும்: தாங்கள் இதுவரை கோஷித்துவரும் உபதேசம் இந்த ஏழையின் உள்ளத்திலும் ஊன்றிவிட்டது என்பதைத் தெரிவிக்கிறேன்." பல பக்கங்கள் டைப் செய்யப்பட்ட இந்தக் கடிதத்தில் இதேமாதிரிதான் இதர பகுதிகளும் அமைந்திருக்கின்றன.

இதர கடிதங்கள்

மற்றொரு கடிதம் பின்வருமாறு:—"அன்பார்ந்த சகோதரி, நம்பிக்கையை இழந்த என் உள்ளத்தில் தங்களது வாக்கின் இனிமை மீண்டும் உத்சாகத்தை எழுப்பியிருக்கிறது; எனது அன்பையும் என் பாராட்டுதலையும் இதன் மூலம் தங்களிடம் சமர்ப்பிக்கிறேன்?

இதற்கடுத்த கடிதம் பின்கண்ட விதம்: "பெருமை பொருந்தியவரே, என் வாழ்க்கையைக் கவிழ்ந்திருந்த இருளைத் தங்களது ஆச்சர்யகரமான சக்தி அகற்றிவிட்டிருக்கிறது என்பதை நான் தங்களுக்குத் தெரிவிக்கவேண்டும். தங்களை ஒரே ஒரு சமயம் தான், சற்று தூரத்திற்கப்பாலிருந்து தர்சித்தேன். அது முதற்கொண்டு என்னுள் புதிய உணர்ச்சி உதயமாகிவிட்டது. லக்ஷணம் பொருந்தியவரே, தங்களது பாதங்களில் என்னை அர்ப்பணம் செய்துகொள்ள அனுமதியுங்கள்: தங்களது கட்டளையை நிறைவேற்ற சித்தமாயிருக்கும்......"

ஒருவர் அர்ப்பணம்

இன்னுமொரு கடிதத்தைக் கவனிப்போம். "கௌரவம் மிகுந்தவரே, பூமியிலிருந்து ஆகாசம் எப்படி எட்ட முடியாததோ, அதே மாதிரி என்னல் எட்ட முடியாதிருக்கும் ஒருவரை அண்ட நான் முயற்சி செய்வதை க்ஷமிக்கவும். பல பத்திரிகைகளில் தங்களுடைய கட்டுரைகளை நான் படித்திருக்கிறேன்: பல மாளிகைகளில் தங்களுடைய படத்தையும் நான் பார்த்திருக்கிறேன். தங்களுடைய கண்களில் காணும் சக்தி என் வாழ்க்கைக்கே புதிய அர்த்தத்தைக் கற்பித்திருக்கிறது. எந்த விதத்தாலும், எவ்வளவு எளிமையானதாயினும் சரி, தங்களுக்குச் சேவை புரியும் சந்தர்ப்பத்தையே நான் எதிர்பார்க்கிறேன்; நாம் பல நூற்றுண்டுகளுக்கு முன்பு ஜீவித்திருந்தால், எனது உயிரையே தங்கள் சேவைக்காகத் தியாகம் செய்திருப்பேன். தற்காலம், அம்மாதிரியான சந்தர்ப்பம் வாய்க்காது: ஆயினும் எனது ஆவி தங்களுக்கு அர்ப்பணம். இந்த ஏழைக்கு திருப்தி தருவீர்கள் என நம்புகிறேன்."

"அத்ருஷ்டவசம்"

இவை பல கருத்துகளைத் தெரிவிக்கும் கடிதங்கள்! பல புருஷர்களது போற்றுதலைப் பெற்றேன் என்று எண்ணுவதால் ஏற்படும் சந்தோஷம் எனக்கு இருந்ததாயினும், என் குடும்பத்தார் என்னைப் பார்த்துப் பரிகசித்தனர். என் பெரிய பெண்ணின் பிராயம் பதினைந்து: அடுத்தவர் இருவருக்கு முறையே பன்னிரண்டு பத்து வயதுகள் தான் பூர்த்தியாயிருந்தன? "பழைய நாளை"ச் சேர்ந்த தங்களது "அம்மா"வுக்கும் இளைஞர்களிடமிருந்து இத்தகைய கடிதங்கள் வருவதை நினைக்க நினைக்க, அவர்களுக்கு சிரிப்பு அதிகரிக்கிறது!

நவீன முறைகளைப் பின்பற்றும் பெண் பிள்ளைகள் இருப்பது அதிருஷ்ட வசம்தான் என்று நான் எண்ணுகிறேன். வாழ்க்கையில் ஒரே நிதானத்துடன் நடந்து கொள்வதற்கு அவர்கள் உதவுகின்றனர். எந்த விஷயத்திலும் நிஷ்பக்ஷபாதமாகப் பேசி, நடவடிக்கைகளில் குண தோஷம் காண்பவர்களும், தாயாருக்கு வரும் கடிதங்களைப் பார்த்து கல்மஷமின்றி வேடிக்கை பண்ணுவோருமான, சிறு பெண்களைப் பெற்ற தாயார், உணர்ச்சி மிகுதியால் ஒரு புருஷன் எழுதும் கடிதத்தைக் கண்டு மயங்கிவிடுவது சாத்தியமல்ல.

ஒரு கோபக்காரர்

மனதில் ஊன்றியிருப்பதை எடுத்துச் சொல்வது அவ்வளவு ரசமானதல்ல: சீக்கிரத்திலேயே சலிப்பு ஏற்படுகிறது. கவனத்திற்குரிய இதர கடிதங்களையும் குறிப்பிடுவது உசிதமாகும்: எதிர்பக்ஷமான சிலவற்றை எடுத்துக்கொள்வோம். ஒரு கோபக்கார புருஷர் பின் கண்டபடி எழுதுகிறார்:" தங்களைப் போன்ற ஸ்திரீகளால் தான் சமூகத்திற்குக் கேடு விளைகிறதென்பதையும் பல இந்தியக் குடும்பங்களில் கசப்பு ஏற்படுகிறதென்பதையும் தெரிவிக்க அனுமதி கோருகிறேன். ஐக்ய மாகாணத்தில் மந்திரி பதவி தங்களுக்கு அளிக்கப்பட்டது முதற்கொண்டே, பல ஸ்திரீகளது உள்ளங்களில் அத்ருப்தி தலை காட்டவாரம்பித்து விட்டது. ஒரு ஸ்திரீ வீட்டில் இருக்க வேண்டும்: பிரசங்க மேடைமீது ஏறக் கூடாது. ஒரு புருஷன் போல் தாங்களும் வாழ்க்கையை நடத்த முன் வந்திருப்பது முற்றிலும் விரும்பத் தகாத சம்பிரதாயத்தை ஆரம்பிப்பதாகும். நான் விவாகமானவன்: சென்ற பத்து வருஷ காலமாக என் மனைவி என் மனங்கோணுதபடி நடந்து வந்திருக்கிறாள். சமீபத்தில் அவளது மனோபாவம் மாறியிருக்கிறது. எங்களுக்குள் எதாவது அபிப்பிராயபேதம் ஏற்பட்டால் நான் என்ன சொல்கிறேன் என்பதைப் பொறுமையுடன் கேட்பது கூட கிடையாது: ஆனல் 'நான் உங்கள் அடிமையல்ல, நான் செய்வது உங்களுக்குப் பிடிக்கா விட்டால் நான் விஜயலக்ஷ்மியிடம் போய் விடுகிறேன்—ஸ்திரீகளின் உயர்வுக்காக அவர் உழைத்து வருகிறார். எனக்கு அவர் நிச்சயம் உதவுவார்' எனக் கூறி முடிக்கிறாள். என் மனைவி என்னை விட்டுச் சென்றால், அதன் பழி தங்களுடையது தான்......"

ஒருவர் விளக்கம்

மற்றொரு கடிதம் பின் கண்டவிதம் "ஒரு ஸ்திரீ வீட்டு வேலைகளை மட்டும் கவனிக்கவேண்டும் என்று கருதும் புருஷர்களில் நான் ஒருவன். அங்கு அவளுக்கு நன்மை செய்ய ஏராளமான சௌகர்யமும் வசதியும் இருக்கின்றன. ஆனல் புருஷனுடன் போட்டியிட்டு அரசியல் பிரபஞ்சத்தில் அவள் புகுவாளேயானல், எந்த காரியத்திற்கு நன்மையை நாடி அவள் அவ்வாறு செய்கிறாளோ அதற்கு கெடுதலைத்தான் அவள் அவ்விதம் தேடுகிறாள். நம் நாட்டு ஸ்திரீகள் முற்போக்கடைவதைப்பற்றி தாங்கள் பேசியதை நான் கேட்டிருக்கிறேன். தங்களுடைய லக்ஷியம் நிறைவேறுவதற்கு சாதகமான என்போன்ற புருஷர்களது உள்ளங்களில் நன்னம்பிக்கை ஏற்பட நீங்கள் பிரயத்தினம் பண்ணவில்லை. இதுவரை வீட்டில் சுகமாக வாழ்ந்து வந்த பல பெண்களுக்கு தாங்கள் நல்ல உதாரணமில்லை. இதை விளக்கிக் கூறுகிறேன். 17 வயது நிரம்பிய என் புத்திரி யோக்யதையும் கௌரவமும் மிகுந்த ஒருவனை மணக்க மறுக்கிறாள், நோயாளியான அவளது தாயாரின் முறையீட்டுற்குப் பின்கண்டவிதம் பதில் தருகிறாள். "பழையகாலம் மலையேறிவிட்டது. ஸ்திரீகளுக்கும் கடமை இருக்கிறது. நான் தேசசேவையில் ஈடுபடுவதற்காக மேலும் மேலும் படிக்கத்தான் வேண்டும். ஆகவே இப்போது நான் எதிலும் சிக்கமாட்டேன்." அவள் தங்களுடைய பெயரைக் குறிப்பிடவில்லை, ஆனல் அவளது அறையில் பல விதமான தங்களது உருவப்படங்கள் மாட்டப்பட்டிருப்பதால், அவளுக்கு இந்த எண்ணமும் இவ்வித உணர்ச்சியும் எங்கிருந்து வந்தன என்று கேட்பது அநாவசியமாகிறது."

"இது தகுமா?"

இதையும் படியுங்கள்! "தங்களுக்கு திருப்தி யில்லாத சில விஷயங்களை எடுத்துச் சொல்வதற்காக மன்னிக்கவும். எனக்கு இதைத்தவிர வேறுவழியில்லை. சிலதினங்களுக்கு முன்பு தாங்கள் எங்களது நகரத்திற்கு வந்து, ஸ்திரீகள் கூட்டத்தில், எந்த புருஷனும் ஆக்ஷேபிக்ககூடிய சில அபிப்பிராயங்களையும் கருத்துகளையும் விவரித்தீர்கள்! கருத்தடை முதலிய பல விஷயங்களைப் பற்றி ஒரு இந்திய ஸ்திரீ அவ்வளவு பஹிரங்கமாகப் பேசியது அவமானகரமானது. நாம் நமது ஸ்திரீகளை மிகப் புனிதமானவர்களாக பாவிக்கிறோம்; இந்த எண்ணங்களை பரவவிட்டு அவர்களைக் கெடுப்பதை நாம் நம்புவதில்லை. குடும்பத் தொகையைக் கட்டுப்படுத்துவது கடவுளிடம் தான் இருக்கிறது, இம்மாதிரி விதேசக் கருத்துகளை நாட்டில் வளர்த்து குடும்பங்களில் கலகம் தலை காட்டும்படி. தங்களை போன்றவர் செய்யக்கூடாது."

அவர்களது பீதி

இதே மாதிரி பலர் புதிய கருத்துகளையும் புதிய அபிப்பிராயங்களையும் தாக்கி எழுதுகின்றனர். இவை யாவும் தங்களையே பாதிக்கின்றன என்பதை அவர்களுள் எவ்வளவுபேர் உணர்ந்திருக்கக்கூடும்! இம்மாதிரி கடிதங்கள் எழுதத் தூண்டியது அவர்களுடைய பீதி அல்லவா? தங்களையும்மீறி பழைய நிலை மாறிவருகிறது, புதிய நிலையில் ஸ்திரீகள் தங்களுக்குரிய ஸ்தானத்தைப்பெறுவர், அவள் ஒரு தேவதை என்ற எண்ணம் விலகி, புருஷனுடன் சமமாக ஒத்துழைத்து அவனுக்கு அவள் உதவிபுரிவாள், அவள் ஆபாசத்தைக்களைந்தெறிந்து, ஸ்திரீபுருஷ சமத்துவம் பொருந்திய இல்வாழ்க்கையை இனிமையும் ஸ்வாரஸ்யமும் நிரம்பியதாகச் செய்வாள்—இவை அல்லவா அந்த பீதி!

உத்சாகப் படுத்தியவை

இது நிற்க, வாழ்க்கையில் எனக்கு வெறுப்பு ஏற்பட்டபோதும் என்னை உத்சாகப்படுத்திய கடிதங்களைக் கீழே தருகிறேன். இது ஒன்று:—"தங்களது நடவடிக்கைகளை நான் மிகுந்த சிரத்தையுடன் கவனித்து வருகிறேன்: அது எதிர்காலத்தில் நன்மை சம்பவிக்கும் என்ற நம்பிக்கையைத் தருகிறது. இந்த துரத்ருஷ்ட தேசத்தில் இருக்கும் பலர் போல் நானும் ஓர் இளம் விதவை: வாழ்க்கை எனக்கு விரசமாக இருக்கிறது. மனோதைர்யத்தையும் திடபுத்தியையும் தாங்கள் எனக்கு அளித்திருக்கிறீர்கள். தாங்களும் தங்களைப்போன்ற இதர உத்தம ஸ்திரீகளும் செய்யும் முயற்சி பலன் தராமற் போகாது என்ற எண்ணம் காரணமாக என் உள்ளத்திலிருக்கும் வேதனையை உதறித்தள்ளப்பார்க்கிறேன். நானும் என் தலைமுறையைச் சேர்ந்தவர்களும் கஷ்டத்திற்குட்பட்ட போதிலும், நமது பெண்கள் சுதந்திரமாகவும் சௌக்யமாகவும் ஜீவிப்பார்கள்...ஆகவே தாங்கள் மேற்கொண்ட காரியம் இனிது நடைபெறுமாக."

புதிய இந்தியா எவ்விதமாயிருக்கும்!

ஒரு சிறுமி தனது கஷ்டங்களைப் பற்றிப் பிரஸ்தாபித்து பின் கண்டபடி எழுதுகிறாள்; "சம்பிரதாயம் மூடநம்பிக்கை ஆகியவற்றின் கொடிய சேர்க்கையை நான் எவ்வளவு கடுமையாகக் கண்டிக்கிறேன் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஆனல் நான் செய்வது தான் சரி என்ற நம்பிக்கை எனக்கு உண்டு: இதற்குத் தங்களது மனமுவந்த ஆதரவு தேவையாகிறது. பல வருஷங்களாக தங்களைச் சந்திக்க ஆசைப்பட்டேன்: ஆனல் அது சாத்தியம் எனத் தோன்றவில்லையாதலால், அவகாசப்பட்டால் உத்சாகப் படுத்தி ஒரு வார்த்தையைத் தாங்கள் எனக்குத் தெரிவித்தால் போதுமானது! ' இந்த உதவியைத் தாங்கள் மறுக்கமாட்டீர்கள் என்பதும் எனக்குத் தெரியும். நான் கோராமலேயே தாங்கள் என் கனவுகளில் தோன்றி எனக்கு உதவி-புரிந்திருக்கிறீர்கள்."

நம் நாட்டின் பல பாகங்களிலிருந்து வந்து குவியும் இந்தக் கடிதங்கள் மூலம் நம் நாட்டின் உண்மை நிலையையும், வரப் போகும் ஸ்திதியைப் பற்றியும் நான் நன்கறிய முடிகிறது. சௌந்தர்யம் சோபிக்கும் புதிய இந்தியாவில் பெண் பிள்ளைகள், எல்லோரும் இன்புற்றிருக்கும்படியான விதத்தில் தங்களது பாத்தியதைகளைச் சேர்ந்து அனுபவிப்பார்கள் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன்!

[அடுத்த வாரம்—'என் விமான யாத்திரை']

தமது கையெழுத்தை அபேக்ஷித்த ஒரு நண்பரின் விருப்பத்திற்கு ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் இணங்குகிறார். சமீபத்தில் அவர் சென்னைக்கு வந்தபோது எடுத்தபடம்.

ஜஹனரா

"ஸஸாங்கமணி" எழுதியது

முதல் காட்சி-முதல் அங்கம்

அரண்மனையில் ஓர் அறை. மாலை. ஷாஜஹான், ஜஹனூர், தாரா, வைத்தியர், ரஹீம், சேவகன் தூதர்கள் முதலியோர் கூடி இருக்கின்றனர்.

ஷாஜஹான் படுத்துக்கொண்டிருக்க வைத்தியர் நாடி பார்க்கிறர். ஜஹனூர் ஓர் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருக்கிருள்.

ஜஹனூர்:—வைத்தியரே, தங்களுடைய பரீக்ஷையில் அவருடைய ஆரோக்கியத்திற்கு மனக்கிலேசம் உண்டாகும்படி ஏதாவது நேரிடுமா?

வைத்தியர்:—அப்படி ஒன்றுமில்லை. ஆனல் ஹ்ருதயம் தான் பலஹீனப்பட்டிருக்கிறது. ஆகவே அவரை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும். அம்பா, நான் இனி உத்திரவு பெற்றுக்கொள்கிறேன். அரசரும் கொஞ்சம் சாந்தி அடையட்டும். (போகிருர்)

(ஓர் சேவகன் வருகிருன்)

ஜஹனூர்:—என்ன விசேஷம்? ஏன் இவ்வளவு பரபரப்பு?

சேவகன்:—வங்காளத்திலிருந்து யாரோ ஓர் ஆள் வந்திருக்கிருர்.

ஜஹனூர்:—சரி, அவரை உள்ளே வரச்சொல்.

[சேவகன் செல்கிருன் வங்காள தூதன் வருகிருன்]

தூதன்:—பீகம் ஸாகப், தங்களுடைய சகோதரர் ஷூஜா வங்காளத்தை ராஜ்யத்திலிருந்து பிரித்துக்கொண்டு டில்லியின் மேல் படை எடுக்க ஏற்பாடுகள் செய்துகொண்டிருக்கிருர். இத்துடன் நில்லாமல் தமது பெயரில் மோகராக்களை அடித்துக்கொண்டும் தாம் தான் மொகலாய சக்கிரவர்த்தி என்றும் பறையடித்து விட்டார்.

ஜஹனூர்:— ஹா! என்ன? என் சகோதரன் ஷூஜாவா இப்படிச் செய்தார்? சரி, நீ செல். [தூதன் செல்கிருன்.] ஏன் அவர் புத்தி இப்படி மாறி விட்டதோ தெரியவில்லையே!

[ஜஹனூர் ஆலோசனை செய்கிருள். மறுபடியும் சேவகன் வருகிருன்.]

சேவகன்:—பீகம் ஸாகப், குஜராத்திலிருந்து மற்றொரு தூதன் தங்களைக் காண வந்திருக்கிருன்.

ஜஹனூர்:—சரி, உள்ளே வரச்சொல்.

[தூதன் வருகிருன். சேவகன் செல்லுகிருன்]

ஜஹனூர்:— என்ன விசேஷம்?

தூதன்:—பீகம் ஸாகப், நான் என்னவென்று சொல்வேன். தங்களுடைய சிறிய சகோதரன் மூரட், குஜரத்தில் பெரிய கலகம் மூட்டி தலை நகருக்கு அரசராகி விட்டார். [தூதன் செல்லுகிருன்.]

ஷாஜஹான்:—என்ன?

[ஜஹனூர் ஆரம்பிக்கும்போது, ரஹீம் வழிகாட்ட தாரா சோகத்துடன் பிரவேசிக்கிருன்.]

ஜஹனூர்:—அப்பா, ராஜ்ய காரியம் பெரிய மோசமாகி விட்டது. ஷூஜாவும் மூரட்டும் தங்கள் தங்கள் தலை நகரில் முடி சூட்டிக்கொண்டு விட்டார்கள். ஷூஜா தானே சக்ரவர்த்தி என்று பறையடித்து விட்டு டில்லியின் மேல் படை எடுக்க உத்தேசித்திருக்கிருனும்!

தாரா:—அப்பா, நானும் சில விஷயங்களை என் ஒற்றர் மூலம் தெரிந்து கொண்டிருக்கிறேன். ஜஹனூர் சொன்னவை யாவும் உண்மையே. தங்களிடம் இவ் விஷயத்தைக் கூருமலே நான் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துள்ளேன்.

ஷாஜஹான்:—ஹா! அப்படியா! ஷூஜாவுடன் போர் புரிய சேனைகளை அனுப்பி இருக்கிருயா? அவர்களுக்குத் தலைவன் யார்?

தாரா:—தந்தையே! உம்முடைய தேக அசௌகர்யத்தையே காரணமாக வைத்துக் கொண்டு தங்கள் எதிரிலேயே அவர்கள் செய்யும் அக்கிரமத்தை நான் முற்றும் வெறுக்கிறேன். ஷூஜாவுடன் போர் புரிய ஓர் பெரிய சேனையை அனுப்பியிருக்கிறேன். அவர்கள் வெற்றி பெற்று வருவது நிச்சயம். இது பற்றி தாங்கள் சிறிதும் அஞ்ச வேண்டாம். இதைப் பற்றி நான் செய்ய வேண்டியவை பல இருக்கின்றன. உத்திரவு கொடுங்கள். நான் சென்று வருகிறேன். ஜஹனூர், அப்பாவை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொண்டிரு.

(தாரா போகிருன்.)

ஷாஜஹான்:—மும்தாஸ்! மும்தாஸ்!! இவை யாவும் எனக்கு சரியான தண்டனையே, ஆம், தன் வினை தன்னைச் சுடும் என்பது போல் நான் என் தகப்பனர் இருந்த பொழுது, எவ்வாறு என்னுடைய சகோதரர்களுடன் சண்டையிட்டு அவர்களுடைய ரத்தத்தைப் பெருக்கி அரசனுனேனே, அது போலவே என் பிள்ளைகள் செய்வதுமல்லாமல் நான் வியாதியுற்றிருக்கும் போது என் கண் முன்பே என்னை இவர்கள் இம்மாதிரி அவமானம் செய்கிருர்கள். மொகலாய சாம்ராஜ்யத்தின் அதிபதி என்று எல்லோரும் புகழும்படி ஆட்சி புரிந்து வந்த எனக்கு இதை விட, வேறு அவமானம் என்ன இருக்கிறது? மும்தாஸ், உனக்கு, என் மேல் கருணை இல்லையா? பிள்ளைகளின் அட்டூழியத்தைப் பார்க்கவா என்னை இப் பூமியில் தனியாய் விட்டுச் சென்ருய்? மும்தாஸ், நானும் உன்னை பின்பற்ற ஆவலுடன் இருக்கிறேன். மும்தாஸ்! மும்தாஸ்!! இதோ வருகிறேன்! இதோ வருகிறேன்!!

[மூர்ச்சையாகி படுக்கையில் விழுகிருன்.]

சிவாஜி	—	மஹாராஷ்டிர தலைவன்
தானுஜி	—	சிவாஜியின் மந்திரி
ஷா ஜஹான்	—	மொகலாய மன்னன்
ஒளரங்கசீப்	—	ஷாஜஹானின் மூன்றும் குமாரன்
தாரா	—	ஷாஜஹானின் முதல் குமாரன்
அப்ஸல்கான்	—	பீஜபூர் சுல்தானின்சேனுபதி
ஷேயிஸ்டகான்	--	ஒளரங்கசீப்பின் சேனுபதி
ரஹமட்(என்ற) ரகுவீர்பட்	—	பிராமணனுயிருந்து மதமமாறியவன்.
கிருஷ்ணஜி பாஸ்கர்		ஒரு பிராமணன்
ரஹீம்கான்	—	சிப்பாய்த் தலைவன்
கரீம்கான்	}	முகமதிய சிப்பாய்கள்
ஸலீம்கான்	}	முகமதிய சிப்பாய்கள்
ஸர்கான்	}	முகமதிய சிப்பாய்கள்
துக்காராம்	—	சிவாஜியின் குரு
ஷிராஸ்	—	ஒரு பக்கிரி
ஜஹனூர்	—	ஷாஜஹானின் முதல் பெண்
ரோஷ்னூர்	—	ஷாஜஹானின் இரண்டாம் பெண்
மோதி ஜான்	—	அந்தரங்க பேடி.

இரண்டாம் காட்சி

கூடாரத்தின் வெளிப்புறம். காலை.

அவுரங்கஜீப் கூடாரத்தின் வெளிப்புறத்தில் உட்கார்ந்துகொண்டிருக்க, தாராவை சிப்பாய்கள் விலங்கிட்டு அழைத்து வருகிருர்கள்.

அவுரங்கஜீப்:— அண்ணு! தங்களை இங்கு வரவழைத்து மிகவும் சிரமத்தைக் கொடுத்தோம். தங்களை இக்கோலத்தில் காண நாங்கள் என்ன பாக்கியம் செய்தோமோ! பேஷ், தங்கள் எதிரில் நிற்கும் இச்சகோதரனை ஒரு சமயம் சிறையிடப் பார்த்தீர்கள். ஆனல் இப்பொழுதோ......!

தாரா:— அவுரங்கஜீப், ஓர் தாய் வயிற்றில் பிறந்து சகோதரர்களாய் இருந்தும், இப்படி நாம் சண்டையிடுவது நியாயமானதா? உலகம்தான் பொறுக்குமா?

அவுரங்கஜீப்:—என் விஷயத்தில் அது மிகவும் பொருந்தியிருந்ததா?

தாரா:— டேய்! மொகலாய சாம்ராஜ்யத்தில் இந்த அட்டூழியங்கள் பொறுக்கத்தக்கதா? சீ, நீயும் ஓர் சகோதரனு? ஓர் தாயின் சேய்களாக் இருந்தும், ஒன்ருய் உண்டும், ஒன்ருய் களித்தும், ஒரு படுக்கையில்

உறங்கியும் இருந்த நாள் எங்கே போயிற்று? நீ மன்னனுய் இருந்தால் என்ன? உன் சக்கிரம் சுழன்ருல்தான் என்ன? நீ எனக்குச் சிறியவன் தானே! கேவலம் சகோதரத்ரோகத்தால் அபகரித்த இந்த மொகலாய க்ரீடம் உன் தலையில் எத்தனை நாள் நீடித்திருக்கும்?

அவுரங்கஜீப்:—தங்களுக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுத்தோம். தங்கள் தேகத்திற்கு ஓய்வு கொடுக்க ஆக்ராவிலிருக்கும் ஓர் அறை மிகவும் உசிதமானது. அண்ணு, நீர் செய்தது அட்டூழியம் அல்ல, நான் செய்வது நியாயம் அற்றது. என்னை என் ராஜ்யத்திலிருந்து அழைத்து எல்லைப்புற மாகாணங்களுக்கு அனுப்ப யோசித்தது யாது காரணம்? அதனுல் என் மனம் உடைந்து நான் என் ராஜ்ய பாரத்திலிருந்து விலகிக் கொண்டது நியாயமானதா? இப்பொழுது நீர் சொல்லி வரும் சகோதர பாவம் அப்பொழுது எங்கே போயிற்று? சே! நீங்களும் ஓர் ராஜ்யத்திற்கு உசிதமானவராக விளங்கினீரே? ஒருவன் கையில் அகப்பட்டுக்கொண்டால், நியாயம், வாஞ்சை, குர்ஆன் எல்லாம் வந்துவிடும். நீங்கள் டில்லியில் செய்துவந்த அட்டூழியங்களை எல்லாம் மறந்தீரோ? தங்கள் மதத்தை மிகவும் சிரேஷ்டமாக மதித்து அதன் சாரம்சத்தை உணர்ந்து அதன்படி நடந்துகொண்டு வந்த மகான் அல்லவா நீர்? தன் மதத்தையும் தன் சுயநலத்தையும் தன் மதிப்பையும் உணராதவன் ஓர் மனிதனு? எப்பொழுது நீர் நெறி தவறினீரோ, மதாசாரப்படி நீர் எனக்கு விரோதி விரோதிதான்-கேவலம் பொருமையால் நீர் எனக்கு தீங்கு இழைக்க நினைத்தீர்! ஆனல் இப்பொருமைத்தீயில் எறியப்போகிறீர்—அல்லா ஹோ அக்பர்! ஷா இன்ஷா டில்லி பாதுஷா பகதூர்! இது தங்களுக்கு நினைவு இருக்கட்டும்?

தாரா:—ஏ சகோதர த்ரோகி! துஷ்டா! நீயே உன் ராஜ்யத்திற்கு தீங்கை விளைவிக்காதே. இந்த தாரா, நீ படித்து வைக்கும் அவமானத்திற்கு ஆளாகியும் எதற்கும் அஞ்சமாட்டான், என் சரீரத்தை வேண்டுமானுலும் சித்திரவதைசெய்யலாம். ஆனல், ஆனல்—நான் கொண்டுள்ள அன்பு எப்படிப்பட்டது என்று உனக்குச்சொல்லி என்ன பயன்? என்ன இருந்தாலும் நான் முகம்மதியர்களையும் ஹிந்துக்களையும் நம் தாதாவாகிய அக்பரைப்போல் பாவிப்பேன்! நியாயம்!! அநியாயம் ஒன்றையும் உணராது, கேவலம் மதம் ஜாதி கௌரவம் முதலியவைகளைப்பாராட்டிக்கொண்டு அன்னிய மதத்தினர்களுக்கு பல தீங்கை விளைவித்து நம் மதத்தை ஸ்தாபிக்கும்படி குரான் சொல்லி இருக்கிறதா?

அவுரங்கஜீப்:—இதோ பார், அண்ணு! நீ! என்னைத் தூஷிக்கலாம் என்னைச்சேர்ந்தவர்களையும் தூஷிக்கலாம். என் பிரஜைகளையும் கேவலமாய் மதிக்கலாம். ஆனல் என் தந்தையானுலும் தாயானுலும், வேறு யாராயிருந்தாலும் என் மதத்தைத்தூஷித்தால் அவர்கள் நாக்கை...ஆனல் நீர் என்னுடைய உடன் பிறந்தவர் ஆகையால் தங்களை சும்மா விட்டேன். ரஹீம்—

(ரஹீம் வணங்குகிருன்)

இம்மகானை செம்புள்ளி கரும்புள்ளியிட்டு நான்கு நாட்கள் அன்ன ஆகாரம் இல்லாத ஓர் அரபிக் குதிரையின் மேலேற்றி நம் தலைநகரின் வீதியில் அழைத்துச் செல்லுங்கள். கொண்டுபோங்கள் இவனை!

தாரா:—ஏ, சகோதர த்ரோகி! பாவமே உருவாக வந்த பாதகா! இதை மாத்திரம் கவனத்தில் வை. நீ என்ன கேடு கெட்டாலும் இம்மொகாலய ராஜ்யத்தை, தாதா ஜஹாங்கீருக்கு இருந்த செல்வாக்கையும் அவர் தகப்பனர் அக்பருக்கு இருந்த கௌரவத்தையும் மறந்து, இந்த சாம்ராஜ்யத்திற்கு விநாசத்தை கொண்டு வராதே, இதுவே என் வேண்டுகோள். இனி உன் முகத்தைப் பாரேன்,

[தாராவை இழுத்து செல்கிருர்கள்]

அவுரங்கஜீப்:—அவுரங்கஜீப், இனி நீயே இம் மொகலாய சக்ரவர்த்தி

(தற்செயலாய் தன் கத்தியைப்பார்க்கிருன்)

அ-ல-ம்-கீ-ர்—ஆம் இனி என் பெயரும் அலம்கீரே! ராஜபுத்ர வீரர்களின் கர்வத்தை அடக்கியும் சிற்ற அரசர்களுக்கு பயத்தை யுண்டாக்கியும் ஜனங்களை நடுங்கும்படி செய்தும் பரம்பரையாய் உயர்தரமாக மதித்து வந்த ஏ அலம்கிர், இனி உன்னை ஸ்வீகரித்து இருப்பவனும் அலம்கீரே.(யோசனைசெய்து)ஆம்,ஒழிந்தார்கள். உடன் பிறந்தவர்களாம் உடன் பிறந்தவர்கள்!ஏ அலம்கீர், முதலில் உனக்கு மூரட் இறையானுன். பிறகு ஷூஜாவை நீ வென்ருய்; தாராவைச் சிறையாக்கினுய். ஆனல் ஆனல்-ஒருவர்...இன்னும் ஒருவர் இருக்கிருர்! ஆம்...ஆம்...அக்கிழம்! இனி அக்கிழத்தால் இந்த சக்கிரவர்த்திக்கு என்ன பயன்? ஆம்...அதற்கு மாளிகை எதற்கு? யாரங்கே...(ஆள் வந்து சலாம்செய்கிருன்) அக் கிழத்தை ஆக்ரா கோட்டையில் அடேய்! அடைக்க உத்திரவு! (அவுரங்கஜீப் எழுதிகோடுக்கஆள் வாங்கி செல்லுகிருன்) துலைந்தார்கள். இம் மொகலாய சாம்ராஜ்யத்திற்கே இடையூருக இருந்தவர்கள். அலம்கீர், உன் திறமையே திறமை. உன்னைப் படைத்த எனக்கு வேறு என்ன வேண்டும்? இனி என் மதத்தை, இஸ்லாத்தை, மதிக்கவும், குரானைப் படிக்கவும், இனி நீ உதவுவாய். அன்னிய மதத்தினராய், ஹிந்துக்களாய் என்னுடைய பிரஜைகளாய் இருந்தாலும் என் மதத்தினராக வேண்டியது, இல்லையேல் இதோ என் கையிலிருக்கும் உனக்கு அவர்களின் ரத்தத்தை உறிய முழு உரிமை உண்டு. குரான் மேல் ஆணை! இனி ஜெஸியாவை விதிக்க வேண்டியதே! ரஹீம்(ரஹீம் சலாம் செய்கிருன்) மந்திரி வஸீரைப் பார்க்க வேண்டுமென்று சொல் (ரஹீம் போகிருன்) அலம்கீர், இனி பகைவர்கள் இல்லாமல் மொகலாய சாம்ராஜ்யத்தில் முடிவணங்காது பொன் முடி தரித்து சக்ரவர்த்தியாய் விளங்கப் போகிருய்.

(முதல் காட்சி முற்றிற்று.)

LOTUS BRAND SLATES

பூராவும் இந்திய தயாரிப்பு. உயர்ந்த ரகம், அழகிய வேலைப்பாடு. ஆர்டர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

ஒவ்வொரு ஜில்லாவில் ஸோல் டிஸ்டிரிபியூட்டராக இருக்க விருப்பமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோறப்படுகின்றன.

THE PREMIER TRADERS,
11-12, First Line Beach,
G. T., MADRAS.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

தற்கால நிலைமையை உத்தேசித்து விலைகளை மிகவும் குறைக்கப்பட்டிருக்கிறது.

புது மாதரி பெங்களூர் பட்டு சேலைகள்
நவீன ஜரிகை பார்டர் பனரஸ் சேலைகள்
அழகிய கரைகளுள்ள நாணய நூல் சேலைகள்
வேஷ்டிகள் :: அங்கவஸ்திரங்கள்

ரு. பழனியாண்டி பிள்ளை & சன்ஸ்,
"பழனி ஹவுஸ்" (சௌகார்பேட்டை சமீபம்) பி. டி., மதராஸ்.

FREE

ART PHOTO ALBUM

French Art Photos of beautiful young girls in charming poses are sent against -/5/- postage stamps with one album free. Limited albums left Order now lest you be disappointed

LONDON COMMERCIAL CO.
P. B. 165 (S M M.) LAHORE (INDIA)

(E. A. B.)

ஹிந்திக் கதை

ஒற்றையடிப பாதை

ஸ்ரீ கமலா காந்த வர்மா

எழுதியது

இக் கதையின் முதற் பதி சென்ற வாரம் வேளி யாகியது: "அன்பினால் ஸ்வர்க்கம் கிடைக்கிறது. ஆனால் அதைவிட மேலானதும், அதைவிடப் புனித மானதுமான ஒரு ஸ்தானம் இருக்கிறது: அதற்கு நீ போய்க்கொண்டிருக்கும் பாதை இதுதான்: சேவை!! எல்லோரும் அன்புடன் இருக்கலாம்: காதல் புரிய லாம்: ஆனால் சேவை எல்லோரும் செய்ய முடியாது. அன்பு புரிவது உலகின் ஸ்வபாவம்: ஆனால் சேவை ஒரு ஸாதனை: காதல் உள்ளத்தின் இனிமைகளின் கூட்டம். சேவை அதை விட விஸ்தாரமானது. காதல் தன்னையே லக்ஷியமாக்கி, தனக்கு ஒரு லக்ஷி யம் உண்டாக்கவேண்டியிருக்கிறது. சேவையில் தன்னை ஒரு ஸாதனமாக்கி, உலகைத் தன்னுடைய ஸாதனைக்கு ஒரு தபோ பூமியாகச் செய்யவேண்டி ஏற்படுகிறது. காதல் யக்ஞம்: சேவை தவம். காத லால் காதலன் கிடைக்கிறன். சேவையால் ஈசன் கிடைக்கிறன் .....காதல் மனிதத்வம்: சேவை தெய் வத்வம். உன்னுடைய ஆத்மா அமரத்வமானது. உன் உடல் பௌதிகமானது. ஆத்மாவுக்கும் சரீ ரத்திற்கும் உள்ள கதை அழியா துவந்துவமாகும்... சேவை செய்ய யோக்யதை வாய்ந்திருப்பது கடவு ளின் ஆசீர்வாதம்!"-எவ்வளவு அழகான கருத்துகளை, உணர்ச்சி ததும்பும் சிறு கதைகளை எழுதுவதில் நிபுண ரான ஸ்ரீ கமலா காந்த வர்மா, இந்த கற்பனைக் கதை யில் புகுத்தி யிருக்கிறர் பாருங்கள்! எவ்வளவு உன் னதமான போதனை ஒற்றையடிப் பாதைக்கு கிணறு உபதேசிக்கிறது! ஸ்ரீ அ. கி. ஜயராமன் மிகவும் நேர்த் தியாகவும் வாசகர் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் விதமாகவும் இக் கதையை மொழிபெயர்த்திருக்கிறர்.

லைவகறையில் ஸ்திரீகள் வருகிறார்கள். தண் ணீர் நிரப்பிக் கொண்டு செல் கிறார்கள். மத்யான வேளையில் வழிப்போக்கர்கள் இந்த மாந் தோப்புக்கு இளைப்பாற வரு கிறார்கள். இந்தக் கிணற்று நீரில் மாவு பிசைந்து சாப்பிடு கிறார்கள். பிறகு சிறிது நேரம் மரத்தடியில் படுத்திருந்துவிட்டு தன் வழியே செல்கின்றார்கள்: கிராமத்திலிருந்து சிறுவர்கள் மாந்தோட்டத்திற்கு வந்து பழங்களை பறித்துத் தின்று கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத் துக் கைகால்களைக் கழுவிக் கொண்டு செல்கின்றனர். எங்கு பார்த்தாலும் அதைப்பற் றிய பேச்சு! அதைப்பற்றியே சர்ச்சை! நான் என் துச்சமான நிலைமையை எண்ணி மனதிற் குள் ஆத்திரப்படுகிறேன்.

என் மனதிற்கு உலகம் என் னைப் பரிகாசம் செய்வதாகவும், ஆகாயம் என்னைத் திரஸ்காரம் செய்வதாகவும், பூமி என்னைச் சட்டை செய்யாமல் இருப்ப தாகவுமே தோன்றுகிறது.

என்னுடைய மதிப்பு ரேகா கணிதத்தின் ரேகைகளைப்போல் இருக்கிறது. நான் எல்லோருக் கும் இருக்கிறேன். ஆனால் எனக் காக ஒருவரும் இல்லை. நான் கூட எனக்காக இல்லை. கேவலம் உலகை ஒரு லக்ஷியம் வரை சேர்க்கும் ஒரு சாதனமாகவே ஜீவித்திருக்கிறேன். நான் இங் கிருந்து விலகியே தீரவேண்டும். எங்கேயாவது போகிறேன். ஆனால் கட்டாயம் போகவேண் டும். ஹிருதயத்திற்கு சாந்தியை வேண்டி வனம் வனமாகச் சுற்றுவேன்.

பூமியின் ஒரு கோடி முதல் மறு கோடி வரை விஸ்தார மான இடமெங்கும் தேடுவேன். எங்கும் சாந்தி கிடைக்காவிட் டால் பாலை வனத்தின் விசால மான மணற் பரப்பில் சென்று மறைந்து விடுவேன். அல்லது ஜனநடமாட்டமற்ற மலைத் தொடர்களின் குகைகளில் சென்று அழுவேன். ஆனால் இங்கே இருக்கமாட்டேன்!

அங்கிருந்து நான் விலக ஆரம் பம் செய்யலானேன். நடு இரவு. நிலவும் அந்தகாரமும் அமராயி யின் விருக்ஷத்தின் கீழ் ஆலிங் கனத்தில் கட்டுப்பட்டுத் தூங் கிக் கொண்டிருந்தன. எனக்கு அந்த இரவின் ஞாபகம் இன் னும் இருக்கிறது நேற்று நடந் ததைப் போல! நான் என்னு டைய கழிந்துபோன வாழ்க்கை யின் சிறு சிறு ஞாபகங்களையும் எண்ணிப்பார்த்துக் கொண் டிருந்தேன். இதற்குள் கிணறு "பகடண்டி" என்று கூப்பிட் டது.

அந்த நிசியின் மௌனத்தில் அந்தக்குரல் எதிரொலி த்தது. நான் திடுக்கிட்டேன், இவ்வளவு நாட்களுக்குப் பிறகு கிணறு என்னைக் கூப்பிடுகிறது. எனக்கு ஆனந்தம் பொங்கியது.

"ஏன்?" என்றேன்.

கிணறு சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டுபிறகு"பகடண்டி" என்றது,

ஒருக்கால் நான் சொன்னது அதற்குக் கேட்கவில்லையோ! எனக்கு ஆச்சரியம் ஏற்படலா யிற்று, இன்று ஏதாவது அபி நயம் நடக்கப் போகிறதா என்ன? நான் தணிந்த குரலில் "ஏன்" என்றேன்.

"பகடண்டி! உன்னிடம் ஒரு விஷயம் கேட்க விரும்புகிறேன்" என்றது கிணறு.

"கேள்" என்றேன்.

"ஒருக்கால் நீ இங்கிருந்து எங் காவது போகப் போகிறாயா?" என்று கேட்டது.

மின்னல் என்மேல் தாக்கி இருந்தால் கூட எனக்கு அவ் வளவு ஆச்சர்யம் ஏற்பட் டிருக்காது. இதற்கு எப் படித் தெரிந்தது? தெரிந்தென் னமோ போய்விட்டது! ஒப்புக் கொண்டு விடுவோமா? ஆனா லும் அதைப்பற்றி இதற் கென்ன? கணநேரத்திற்குள் நான் என்னென்ன நினைத்தேன் என்று எனக்கு தெரியாது. எத் தனையோ பாவங்கள் என் ஹிரு தயத்தைச் சூழ்ந்து கலக்கின. ஆனால் நான் என்னுடைய முழு நிலைமையையும். தடுத்து அலட் சியமான குரலில் "ஆமாம்" என் றேன்.

கிணறு சிறிது நேரம் மௌன மாக இருந்துவிட்டுப் பிறகு "நீ இந்த அமராயியிலிருந்து போகி றாய்!நல்லது! நான் ரொம்ப சந்தோஷப்படுகிறேன்!" என் றது.

நான் ஏதோ பதில் சொல்ல ஆரம்பித்தேன். உடனே அது என்னைத் தடுத்து "பொறு! என் வார்த்தையைக் கேட்டுக்கொள். நீ முதன் முதல் எப்பொழுது இங்கு வந்தாயோ அப்பொழுது நான் அடைந்த சந்தோஷம் வேறு யாரும் அடைந்திருக்க முடியாது! உனக்கு இதன் கார ணம் தெரியுமா?" என்றது.

நான் ஒன்றும் பேசவில்லை.

அது மீண்டும் "நானே ஒரு நாள் சொல்ல வேண் டும் என்றிருந்தேன். நீயே தானா கச் செல்ல நிச்சயம் செய்து விட்டாய். இது இன்னும் நன்மையாயிற்று" என்றது.

நான் மனமில்லாமல் "உலகத் தில் நடப்பவைகளெல்லாம் நன் மையாகத் தான் நடக்கின்றன" என்றேன்.

"பகடண்டி! நீ இங்கிருந்து போகிறாய். கருத்து இது தான். நீ ஒருபொழுதும் திரும்பி வர மாட்டாய். நீ செல்லுமுன் என் ஹிருதயத்தின் ஒருவார்த்தை, வெகு காலமாக இருந்த ஒரு வார்த்தை. அதைச் சொல்கி றேன்! கேட்பாயா?" என்றது.

என் ஹிருதயத்தில் இரு தாரைகள் பெருகலாயின. ஒன்று சம்சயம். மற்றொன்று ஆச்சரியம். ஆயினும் சம்ச யத்தை விட எனக்கு ஆச்சர் யமே அதிகம் உண்டாயிற்று. நான் என்னை அடக்கிக் கொண்டு "சொல்லிவிடு" என் றேன்.

கிணறு சொல்லலாயிற்று. "எனக்கு அதிகமாகச் சொல்ல வேண்டியது ஒன்றும் இல்லை. இரண்டொரு வார்த்தைகள் தான். நான் உன்னிடம் ஒரு பொழுதும் சொன்னதில்லை. அதற்குக்காரணம் இது வரை சந்தர்ப்பம் வராதது தான். நீ இப்பொழுது செல்கிறாய். இப் பொழுது சமயம் வந்துவிட்ட தென்று தெரிகிறது. அதனால் சொல்கிறேன்" என்று சொல் லிச் சற்று நிறுத்தி மீண்டும் தன்னுடைய ஸ்வபாவமான தர் சன முறையில் சொல்ல ஆரம் பித்தது.

முதல் விஷயம் இதுதான். "உன்னிடம் எனக்கு அளவற்ற காதல் இருந்தும் நான் ஏன் அதை வெளியிட வில்லை? எனக்கு ஞாபகம் இ-

கிறது. நீ என்று ஆகாயத்தின் ஜோதி மார்கத்தைப் போல், முதன் முதல் இந்த அமராயிக்கு வந்தாயோ அன்றே நான் வட தாதாவிடம் "தாதா! இது யார்?" என்று கேட்டேன். தாதா வேடிக்கையாக "உன் நாட்டுப்பெண்" என்றார். நான் வியப்படைந்து போனேன். அன் றிலிருந்து இன்றுவரை ஒரு யுகம் கழிந்து விட்டது. எத்தனை வஸந்த காலம், எத்தனை மழை காலம், வந்தன, இந்த அமராயி யின் அடர்ந்த நிழலில் நாம் இரு வரும் எவ்வளவு கதைகள் கேட் டிருப்போம். எத்தனை பாட்டு கள் கேட்டு மகிழ்ந்திருக்கிறோம். எத்தனை தடவை நமக்குள் சண்டையிட்டிருக்கிறோம். நமது கழிந்து போன வாழ்க்கையின் சிறு சிறு சம்பவங்கள் கூட என் ஞாபகச் சித்திரத்தில் அழியாத ரேகைகளாக பதிந்திருக்கின் றன. அந்த கோணல்மாணலான கோடுகளைச் சேர்த்தால் என்ன அக்ஷரம் உண்டாகிறதோ, அதன் ஒரே அர்த்தம் இதுதான்.

"இந்த அமராயியில் இருக் கும் இந்த மெல்லிய பகடண்டி யின், வரண்ட வாழ்க்கையில் உள்ள நிர்த்தாரணம் ஒரு யுகத் தின், அல்லது ஒரு தேசத்தி னுடையதல்ல, அது வையம் முழுவதும் அனந்த காலம்வரை திசை விளக்காக இருக்கும். அது இல்லாமல் போகட்டும்; ஆனால் அதனுடைய கதை யுகயுகங்கள் வரை, கற்பனை உலகத்தின் பர ந்த வானிடை, ஸதீத்வத்தின் ஆதர்சமாகி, வானவிளக்கைப் போல் ஜ்வலித்துக்கொண்டிருக் கும். ஆயினும் இவ்வளவிருந்தும் கூட, இன்றுவரை நான் உன் னிடம் ஒரு பொழுதும் ஒன்றும் ஏன் சொல்லவில்லை? இதுமாத் திரமல்ல! நான் இன்று வரை உன்னிடம், அலட்சியமாகவும், கொடுமையாகவுமே இருந்து வந்திருக்கிறேன்; தன்னலமான ஒரு உபேட்சை. யோசிக்கவேண் டிய ஒரு விரோதம்! இதைத் தவிர வேறு ஒன்றும் ஞாபகம் இல்லை. நான் உனக்கு இன்னும் ஏதாவது தர முடியுமா இல் லையா? ஆனால் ஏன்? ஒரே ஒரு காரணம்தான். பகடண்டி; நான் உன்னை அறிவேன், உன் உள் ளத்தையும் நன்றாக உணர்ந் தேன். நான் உன் வாழ்க்கையை தர்சன ரூபமாக அத்யயனம் செய்துகொண்டிருந்தேன். உல கின், எந்த நன்மையை வேண்டி உன் வாழ்க்கை, நிர்ணயிக்கப் பட்டிருக்கிறதென்பதை நான் அறிவேன். எந்த நன்மையை உத்தேசித்து, உலகத்தின் சிரு ஷ்டி சக்தி உன்னை சொர்கத்தி லிருந்து கொண்டு வந்து, இந்த அமராயியின்பசும் புற்களுக்கும், பசுந்தளிர் இலைகளுக்கும் நடு வில் தவழவிட்டிருக்கிறதென் பதையும் நான் அறிவேன், உன் னுடைய பிறவிக்கு எது அந்த ரங்கமான காரணம், எந்த வழி யில் சென்று நீ அதை நன்றாக அடைவாய் என்பதையும் நான் அறிவேன். எந்த மகத்தான உத்தேசத்துடன் நீ ஜனித் திருக்கிறாயோ அதையும் நான் அறிவேன்; ஆசையிருந்தும் கூட நான் உனக்கு எந்த உதவியும் செய்ய முடியாது. ஆனால், ஆமாம்! ஒரு விஷயம்! ஒன்று செய்யமுடியும். பாடகன் தன்னுடைய ஸ்வரங்களைஆரோ கண அவரோகணத்தினால் நட மாடச் செய்து சமத் தில் கொண்டுவந்து நிறுத்து கிறான். கேட்பவர்கள் அவ னுக்கு ஒரு உதவியும் செய்ய முடிவதில்லை; ஆயினும், அந் தக் கட்டத்தில் ஒரு முறை தலை யசைக்கிறார்கள். ஸ்வரங்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பி வந்து விடுகின்றன. எல்லோ ருடைய சிரங்களும் ஆடுகிறது.

பகடண்டி, உன்னுடைய வாழ்க்கையின் உயர்ந்த லட்சி யங்களை நீயே தான் தனியாக நிர்வகிக்க வேண்டும், ஆனால் என்று உன்னுடைய வாழ்க்கை யின் கீத ஒலி திரும்பி பீட் டிற்கு வருகிறதோ, அன்று அந்த கீதத்தில் நான் மூழ்கி சிரக்கம்பம் செய்வேன். இது ஒன்றுதான் என்னால் செய்யக் கூடியது. உன்னுடைய ஜீவன சங்கீதத்தின் சமத்தில் என்னைத் தியாகம் செய்துவிடுவேன்: அவ் வளவுதான்!

"அன்பினால் சுவர்க்கம் கிடைக்கிறது. ஆனால் அதைவிட மேலானதும், அதை விடப் புனிதமானதுமான ஒரு ஸ்தானம் இருக்கிறது. அதற்கு நீ போய்க்கொண்டிருக்கும் பா தை இது தான்! சேவை! எல்லோரும்அன்புடன் இருக் கலாம். காதல் புரியலாம். ஆனால் சேவை எல்லோரும் செய்யமுடியாது. அன்பு புரி வது உலகின் ஸ்வபாவம், ஆனால் சேவை ஒரு ஸாதனை. காதல் உள்ளத்தின் இனிமைகளின் கூட்டம். சேவை அதை விட விஸ்தாரமானது; காதல் தன் னையே லக்ஷ்யமாக்கி, தனக்கு ஒரு லக்ஷியம் உண்டாக்க வேண்டி இருக்கிறது. சேவை யில் தன்னை ஒரு சாதனமாக்கி, உலகைத் தன்னுடைய ஸாத னைக்கு ஒரு தபோபூமியாகச் செய்யவேண்டி ஏற்படுகிறது. காதல் யக்ஞம்! சேவை தவம்! காதலால் காதலன் கிடைக் கிறான். சேவையால் ஈசன் கிடைக்கிறான். பிறவியிலிருந்து நீ சேவையின் பாதையிலே யே இருக்கிறாய். இப்பொ ழுதும் படிப் படியாக அதி லேயே முன்னேறி வருகி றாய்; உன்னுடைய மார்க் கத்தில் பெரிய தடையாக நிற் கக்கூடியது காதல் தான்! காதல் மனிதத்வம். சேவை தெய்வத்வம். உன்னுடைய ஆத்மா அமரத்வமானது. உன் உடல் பௌதிகமா னது. ஆத்மாவுக்கும் சரீரத் திற்கும் உள்ள துவந்துவம் உலகின் ஒரு அழியாக்கதை யாகும்.

"வஸந்தம் தன் மதுக்கலசத் தைப் பூமியில் கொட் டும் போதும்,மாரி வனத்தில் பசு மையை வாரித்தெளிக்கும்போ தும் சரத் காலத்தின் வெண்ணி லவு உலவும் போதும், ஆத்மா வின் ஸாதனையிலிருந்து சரீரத்தின் சிறு கனவு துளி கள் துளிர்க்கின்றன. ஸாம வேதத்தின் மதுர கம் பீரத் தொனியில் மேக மல்லாரி யின் ஸ்வரம் தொனிக்கிறது, ஸோம ரஸத்தில் கரும்புத் துளி கள் சொட்டுகின்றன. கைலாசத் தில் வசந்தம் வருகிறது. இது பழைய கதை, யுக யுகாந்தரங் களாக இதே நடந்து வருகிறது. ஆயினும் எல்லோரும் அதை மறந்து விடுகின்றனர். கண்கள் சீக்கிரம் மூடி விடுகின்றன. தவத்தின் நிர்மலமான காலையில் அன்பின் அருண உஷை ஜ்வலிக் கிறது. ஸாதனையின் பனிக்கட்டி உருகுகிறது! ஹிருதயத்தின் ஏகாந்த ஸ்தானத்தில் எதனு டைய நிழலோ நுழைகிறது! விழிப்பில் ஆலசியம் வந்து விடு கிறது. சொப்பனத்தில் உணர் ச்சி போய் விடுகிறது. பிறகு கண் விழித்தவுடன் அவை ஒன்றும் இருப்பதில்லை! பிறகு புதுக் கதை ஆரம்பமாகிறது. புது யாத்திரை ஆரம்பமாகிறது. புது புறப்பாடு ஆகிறது. இவ் விதமாகத் தான் இந்த உலகம் செல்லுகிறது.

ஆத்மாவிடன் சரீரத்தின் எல்லா குணங்களையும் விட பெரியது! சம்சயம்! எப் பொழுது உலகில் சிலர் சிலரை காதலிக்கின்றனரோ —எல்லோ ருக்கும் யாராவது ஒருவர் தன் னுடையவர்களாக இருக்கிறார் கள்! காதல் புரிவதுஜீவன்களின் இயற்கை யதிகாரம்—பின் நான் —நான் மாத்திரம் ஏன் அத னிடமிருந்து வஞ்சிக்கப்பட வேண்டும்? இது வாழ்க்கையின் அமரப் பிரச்னைகள்! சாச்வத மான கேள்விகள்!

ஆனால் உண்மை என்ன? இதை அறிய ஜனங்கள் சிறு முயற்சி தான் செய்கின்றனர். காலுள்ளவர் பூமியில் நடக்கின் றனர்! ஆனால் சிறகுள்ளவர் கள் பூமியில் நடந்தால் அது அவர்கள் சக்தியை துஷ்பிர யோகம் செய்ததாகும். ஆகாயத் தில் பறப்பதற்காக கடவுளால் படைக்கப்பட்டவர்கள் பூமியில் நடப்பதை தனது மேன்மைக்கு தகுதியற்றதென அதை தனக் குத் தானே மறக்க வேண்டும்.

காதல் புரிய எல்லோரிடமும் யோக்யதை இருக்கிறது. ஆனால் சேவை செய்யும் யோக் கியதை சிற்சிலருக்குத்தான் கிடைக்கிறது. சேவை செய்ய யோக்கிதை வாய்ந்திருப்பது தண்டனையல்ல! அது கடவுளின் ஆசீர்வாதம். உலகைப் படை த்த 'கடவுள் உலகத்தார் பாஷையில் யாரை அவர் துக்கமுடையவர்களாக ஆக்குகிறாரோ, அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு மஹத்தான அபிப்பிராயத்தை நிறைத்திருக் கிறார். சக்தியின் ஒரு அமர குணத்தை வைத்திருக்கிறார். சாந்தியற்ற ஒரு புயலையும் வைத் திருக்கிறார். இதை அவர்கள் அறியாமல் இருக்கலாம். உலக மும் அறியாமல் இருக்கலாம். ஆயினும் அதிலென்ன!

பகடண்டி! நீ கடவுளின் அம் மாதிரி ரசனையின் ஒருவள்! நீ ஒருவளாக இருந்து ஒருவருக் காக வாழ்ந்து ஒருவருக்காக இறக்க நிர்மாணிக்கப்பட வில்லை. நீ ப்ருதிவிக்கு ஒரு மஹத்தான உபதேசத்தை எடு த்துவந்திருக்கிறாய்! ஆனியின் அனலும் வெப்பத்திலும் ஐப் பசியின் அடர்மழையிலும், மாசி யின் மண்டு பனியிலும் நீ இம் மாதிரி படுத்திருந்து கணக்கற்ற மனிதர்களை வீட்டிற்கும், வெளி க்கும் கொண்டு சேர்க்கவேண்டி இருக்கும்.

நாகரீக வளர்ச்சிக்கும், வாழ்க் கையின் சௌக்யத்திற்கும், உல கின் நன்மைக்கும், நீ பெரியதி லும் பெரியதான தியாகத்தைச் செய்யவேண்டி வரும், உனக்கு ஒருவருமில்லை. ஆகையால் எல் லோரும் உன்னுடையவர்கள். நீ யாருடையவளும் அல்ல; ஆகையால் நீ எல்லோருக்கும் உடையவள். நீ உன் வாழ்க்கை யை அனுபவிக்க முடியாது. நீ உலகின் அக்ஷய விபூதி.

'இதற்கு முன் நான் உன்னி டம் ஒன்றும் சொன்ன தில்லை. காரணம் பகண் டடி! நான் உண்மையைச் சொல்வதற்கு மன்னித்துக் கொள்! உன் ஆத்மா தூங்கிக் கொண்டிருந்தது. உடல்தான் விழித்துக்கொண்டிருந்தது! நீ யார்? எதற்காக வந்திருக் கிறாய் என்பதை நீ அறிய வில்லை! நீ உலகில் பழைய வழி யிலேயே போக விரும்பினாய்! இன்று எந்தக் காரணத்தினால் வேண்டுமானாலும் இருக்கட் டும். நீ உன் தற்கால வாழ்க்கை யில் சந்தோஷமற்றிருக்கிறாய்! உனக்கு உன்னிடம் வெறுப்பு ஏற்படுகிறது! இன்று நீ ஆனந் தத்தில் குதிக்கச் சென்று கொண்டிருக்கிறாய்! உலகில் ஏதோ செய்ய சென்றுகொண் டிருக்கிறாய்! உன் ஆத்மா விழிப்படைந்துவிட்டது! இந்த விஷயங்களைச் சொல்ல எனக்கு இன்றுதான் தருணம் கிடைத் தது. பகடண்டி!நான் உன்னிடம் நட்புகொள்ளவில்லை என்று எண்ண வேண்டாம்! அதைவிட அதிகமாக நான் உன்னை பூஜை செய்கிறேன்! ஆயினும் என் தன்னலத்தை உன் பாதையில் நிறுத்தி உன்னுடைய ஆத்ம

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம்

கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

கவலைவேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

மிஸஸ் ச. கோ. இ.
கரதர்மீரா சாயபு,
ஹெட் நர்சரி தோட்டம், சேலம் S.
ஒட்டு மாங்கன்களும், பழச்செடிகளும், இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகளுமிருக்கின்றன. கேட்லாக் இனாம்.

ஜானகியின் மறு மணம்

★

சிறு கதை - "கிச்சு"

கருகப்ப முதலியாரால் தன் பெண் ஜானகி தன் இளைய மனைவி பாகீரதியினிடம் படும் அவஸ்தையைக் கண்டு சகிக்க முடியவில்லை. ஜானகி பால்யத்திலேயே விதவையாய்ப்போய்விட்டாள். அது முதற்கொண்டே அவளை சாக்கடி வேலை செய்யும்படிக்கு பாகீரதி செய்துவிட்டாள். உட்கார்ந்தால் குற்றம்; எழுந்தால் குற்றம் என்று ஒன்றுமில்லாத விஷயத்திற்கெல்லாம் அவளை கண்டபடி வைய்ய ஆரம்பித்தாள். ஒரு நாள் ஆற்றங்கரையிலிருந்து ஜலம் கொண்டு வரும்பொழுது கூடத்தில் கொஞ்சம் சிந்திவிட்டது. "ஏண்டி கீழே சிந்தினே! இந்த பூண்டை அடிக்கடி கூடத்தில் நடமாடுகிருள். இவள் கால் சறுக்கி கீழே விழுந்து காலை ஒடித்துக்கொள்ளட்டும் என்று தானே சிந்தினே, இவ்வளவு கெட்ட எண்ணமாடீ உனக்கு?" என்று ஓங்கி இரண்டு முதுகில் வைத்தாள். இந்த சப்தம் வாசல் திண்ணையில் உட்கார்ந்திருந்த கருகப்ப முதலியார் காதில் விழுந்தது. அவர் கண்களில் ஜலம் வந்தது. தன் பெண்ணை பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுவது அல்லது வேறு கல்யாணம் பண்ணிக்கொடுத்து விடுவது என்று தீர்மானித்தார்.

2

மேற்படி சம்பவம் நடந்து ஒருவாரம் கழித்து கருகப்ப முதலியாருக்கு ஒரு கடிதம் வந்தது, கருகப்ப முதலியாருக்கு படிக்கத் தெரியாததால் தெருக்கோடியிலிருந்த கர்ணத்தினிடம்கொண்டுபோய் கொடுத்து படிக்கச் சொன்னார். அதில் ஜானகியின் ஓரகத்தி இறந்து பதினைந்து நாளாகிவிட்டதென்றும் அவளுக்கு வேறு வார்சு இல்லாதபடியால் அவள் சொத்து இரண்டு வேலி நிலத்தையும் ஜானகிக்கு உயில் எழுதி வைத்திருக்கிருளென்றும், அந்த உயிலை தான் தயாரித்ததாகவும் மேல் நடவடிக்கை தான் எடுத்துக்கொள்ளலாமா என்றும் பட்டணத்திலிருந்து ஒரு வக்கீல் கடிதம் எழுதியிருந்தார்.

இந்தக் கடிதத்தை படித்தவுடன் கர்ணத்திற்கு ஒரு யோசனை தோன்றியது. அதே யோசனை அவனுக்கு மட்டுமல்ல, அந்த ஊர் நாட்டாண்மைக்காரனுக்கும் இந்த சமாசாரம் காதில் பட்டவுடன் தோன்றியது. ஜானகியோ பதினைந்தாம் வயதைத் தாண்டி பதினரும் பிராயத்தை எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தாள். சந்திர பிம்பம் போன்ற வதனம். சதா அவள் கைகளுக்கு வேலை கொடுக்க ஆசைப்பட்டதுபோல் அடிக்கடி அவிழ்ந்து அவிழ்ந்து விழுந்த குதி கால் வரையில் தொங்கும் கூந்தல்; இவையெல்லாம் அவர்கள் மனதில் வேலை செய்ய ஆரம்பித்தன. இரண்டு பேரும் ஒருவரை மாற்றி ஒருவர் முதலியார் வீட்டை முற்றுகை போட ஆரம்பித்தனர். தங்கள் எண்ணங்களைப் பட்டவர்த்தனமாகவெளியிடவும்முன்வந்தனர். ஆனால் முதலியார் ஒருவருக்கும் பிடி கொடுத்து பேசவில்லை, பெரிய மீன் ஏதாவது தன் வலையில் விழாதா என்று இருந்தார்.

'சரிதான், நமக்கு ஜானகியை கல்யாணம் செய்து கொடுக்க இஷ்டமில்லை. நாட்டாண்மைக்காரன்தான் உசத்தி என்று நினைத்துக்கொண்டிருக்கிருர் முதலியார்' என்று கர்ணம் நினைத்தான். கர்ணத்திற்கு சொத்தேயில்லை. மாசம் கர்ணத்தில் வருகிற பதினைந்து ரூபாயில் தான் சாப்பாடெல்லாம், நாம் எப்படியாவது ஜானகியைக் கல்யாணம் செய்து கொண்டு விட்டால் கவலையின்றி இருக்கலாம் என்ற எண்ணம் கர்ணம் மனதில் தோன்றியது. தன்வெட்டி முனியனைக்கூப்பிட்டு "முனியா! நீ எத்தனை நாள் வெட்டியாக இருக்கிறதாக எண்ணம்? கர்ணமாக வேண்டும் என்கிற எண்ணமே உனக்கு இல்லையா?" என்றான் கர்ணம்.

"நீங்கள் மனசு வைத்தால் நான் மாட்டேன் என்பேனு?" என்றான் வெட்டி.

"சரி, நான் இந்த வேலையை விட்டுவிட்டு என்ன பண்ணுகிறது என்று நினைச்சே! நான் கர்ணம் வேலையை விடுகிறதானல் நீ எனக்கு ஒரு காரியம் செய்யவேண்டும். அதற்கு சம்மதமா?" என்றான் கர்ணம்.

"நீங்கள் எது செய்யச் சொன்னலும் நான் செய்யத் தயார் தான்" என்றான் வெட்டி. கர்ணம் என்னமோ குசுகுசுவென்று சொன்னான்.

3

மேற்படி சம்பவம் நடந்து இரண்டு மணி நேரம் கழித்து முனியன் நாட்டாண்மைக்காரன் வீட்டிற்குப் போனான்.

"என்னடா முனியா? என்ன விசேஷம்?" என்று கேட்டான் நாட்டாண்மைக்காரன்.

"எல்லாம் உங்களைத்தான் அண்டி வந்திருக்கிறேன். நான் வெட்டி வேலையை விட்டுவிடப் போகிறேன். ஏதாவது வேலை நீங்கள் பண்ணிக்கொடுத்தீர்களானல் தேவலை" என்றான் வெட்டி.

"ஏன் உனக்கு இந்த வெட்டி வேலை பிடிக்கவில்லையா?"

"வேலையைப்பற்றி ஒன்றுமில்லை இந்த கர்ணம் பண்ணுகிற அதிகாரம்தான் எனக்குப் பிடிக்கவில்லை. வாயில் வந்தபடி பேசுகிருர். அதுவும் இப்ப இரண்டு நாளாக பண்ணுகிற அட்டகாசம்தான் சகிக்கமுடியவில்லை, ஜானகியைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறேம் என்று ஒரு ஆகாச கோட்டை கட்டிக்கொண்டிருக்கிருர்"

"இவன் பண்ணிக்கிறத்தை நான் பார்த்துவிடுகிறேன்" என்றான் நாட்டாண்மைக்காரன் மீசையை முறுக்கிக்கொண்டே.

"அந்த பீடை ஜானகி உங்களுக்கு வேண்டாம்னு. அது அடங்காப் பிடாரீன்னு. அது உங்களைச் சந்தியிலே சிரிக்க அடித்துவிடுமே, ஏதோ சொத்து வரப் போகிறது என்று சொல்லுகிருர்களே என்று மயங்குகிருப்பலே இருக்கு, சொத்து ஒன்றுமில்லை."

"சொத்து ஒன்றுமில்லையா? என்ன உளருகிருய்?"

"ஒருவருக்கும் சொல்லாதேயுங்கோ. நான் நேற்றைய சாயங்காலம் முதலியார் வீட்டிற்கு போயிருந்தேன். எல்லாரும் உள்ளே குசுகுசுவென்று பேசிக்கொண்டிருந்தார்கள். நான் வந்தது அவர்களுக்கு தெரியாது. பட்டணத்து வக்கீலிடமிருந்து கடிதம் வந்திருந்தது. முதலியாரின் மச்சினி ஊரிலிருந்து வந்திருந்தாள். அவள் தான் அந்த கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். காட்டுமன்னார்குடி கருகப்ப முதலியார் பெண் ஜானகிக்கு தான் எழுதிய கடிதத்தை தப்பித்தவறி போஸ்ட் மாஸ்டர் ராஜமன்னார் குடிக்கு அனுப்பிவிட்டாரென்றும் ராஜமன்னார் குடியில் கருகப்ப முதலியார் என்று ஒருவரும் அவருக்கு ஜானகி என்று ஒரு பெண் இருந்தபடியாலும் எல்லாம் ஒத்துக் கொண்டன வென்றும் தனக்கு ராஜமன்னார்குடி கருகப்ப முதலியார் பெண்ணின் ஓரகத்தியைப்பற்றி ஒன்றும் தெரியாது என்றும் எழுதியிருந்தார்." என்றான் வெட்டி,

நாட்டாண்மைக்காரன் முகம் சுண்டியது. பத்து நிமிஷம் யோசனை பண்ணினன்.

"இந்த விஷயம் கர்ணத்திற்கு தெரியுமா?"

"நான் சொல்லுவேனு? இவ்வளவு அகம்பாவம் படைத்தவர் நன்ருக ஏமாந்து போகட்டுமென்று அவரிடம் சொல்லவில்லை. இந்த விஷயத்தை ஒருவரிடம் நான் மூச்சி பெரியவில்லை."

"சபாஷ்!" என்றான் நாட்டாண்மைக்காரன்.

பணம் பத்தும் பண்ணும்: இரண்டு வேலி நிலத்திற்காக விதவா விவாகத்திற்கும் துணிந்தார் கர்ணம்; இதற்குப் போட்டி: போட்டியைத் தவிர்க்க கர்ணம் ஒரு கட்டுக் கதையைக் கிளப்பினர்: கட்டுக்கதை நிஜமாகவே மாறிவிட்டது: கர்ணத்திற்கு அது தெரியாது. கருகப்ப முதலியார் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்ட பின் தெரிந்தது? கர்ணம் அதற்கப்புறம் என்ன செய்தார்? அவரது மனே நிலை என்ன? சமாளித்துக் கொண்டது எப்படி?

4

மேற்படி சம்பவம் நடந்த அடுத்த நாள் காலை முதலியார் வாசலில் நின்று கொண்டிருந்தபொழுது தெருவோடு நாட்டாண்மைக்காரன் அவரைக் கவனிக்காதது போல் போனன். அவன் போய் அரை மணிக்கெல்லாம் கர்ணம் வந்தான். வர வழியில் ஜானகிக்கு சொத்து ஒன்றுமில்லை என்று தெருவில் ஜனங்கள் பேசிக்கொண்டிருந்தது அவன் காதில் விழுந்தது. சரி தான். நாம் முனியன் மூலமாய் கட்டிவிட்ட கதையை அந்த நாட்டாண்மைக்காரன் ஊர் பூராவாகவும் தமுக்கு அறைந்து விட்டான் என்று நினைத்தான்.

"முதலியார்வாள்! எங்கேயாவது வெளியில் போய்விட்டு வரலாம்" என்று கர்ணம் கூப்பிட்டான். முதலியாரும் சாயவேஷ்டியை போட்டுக்கொண்டு கிளம்பினர்.

"முதலியார்வாள்! எனக்கு ஒரு விஷயத்தில் வருத்தம். ஒரு விஷயத்தில் சந்தோஷம். ஊரில் எல்லோரும் ஜானகிக்கு சொத்து ஒன்றும் வரவில்லை என்று சொல்லிக் கொள்வது, காதில் விழுந்தது. அதில் வருத்தம் தான்"

ஊரில் ஏதோ அசுயைக்காரன் இதுமாதிரி வதந்தி கிளப்பிவிட்டிருக்கிருன் என்று முதலியாருக்கு தெரியும். அதுவரையில் நல்லது என்று நினைத்தார்,

(8-ம் பக்கம் பார்க்க)

அபார சக்திவாய்ந்த டானிக்!
S.K.M.
Dr. N. V. ஸ்ரீராமாச்சார்லுவின்
ஸித்தகல்ப
மகரத்வஜம்
60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.
விவரத்திற்கு எழுதவும்:
மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,
த, பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915ஞ) 289, எஸ்ப்ளனேட், மதராஸ்.

முன்னேற்றத்தைத் தடுக்க விரும்பவில்லை! நான் உன் சோதனையில் என்நிழலை பரப்பி அதை மலினமடையச் செய்ய விரும்பவில்லை. உன் சங்கீத அலைகளில் அபஸ்வரமாக வந்து அதை வீணுக்க விரும்பவில்லை! நான் வெகு உல்லாசத்துடன் உனக்கு இங்கிருந்து விடை கொடுக்கிறேன்! செல்! உலகில் எங்கு நீ அதிகத்திலும் அதிகமாக உபயோகப்படுவாயோ அங்கு செல்! அங்கு சென்று உன் வாழ்க்கை ஸார்த்தகமடையட்டும்! இதுதான் எனது விருப்பம்! இதுதான் எனது சந்தேசம்! இதுதான் என்னுடைய...மன்னிக்க வேண்டும்...ஆசீர்வாதம்!

இன்னும் ஒரு விஷயம் மாத்திரம் சொல்லிவிடுகிறேன்! என் ஹிருதயமற்ற தன்மையை மறந்துவிட வேண்டும்! முடியுமானல் மன்னித்துவிடு! எனக்கும் ஹிருதயம் இருக்கிறது! அதிலும் கொஞ்சம் ரஸம் இருக்கிறது! ஆனல் அறிந்தே நான் அதை உலர விட்டுவிட்டேன்? அதைக் கண்களில் வர விடவில்லை! உதடுகளிலேயே துடைத்து விட்டேன்! உன் கடமைப்பாதையை என் கண்ணீரால் நனைக்க விரும்பவில்லை. பகடண்டி! என் வேதனையை அறிய முயற்சி செய். அறிய முடியாவிட்டால்!..........பிறகு எல்லாவற்றையும் மறந்து விடு!

உலகம் உன்னை வழிபார்த்துக்கொண்டிருக்கிறது. அனந்தம் உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது! செல்! உன் கடமையை நிறைவேற்று! உலகம் உன்னை மிதித்தால் வருந்த வேண்டாம். மறந்து போனல் நழுவ விட வேண்டாம்! மறந்து போன வழிப்போக்கர்களை வீடு சேர்ப்பது, வீட்டைவிட்டு விதேசம் செல்ல விரும்புகிறவர்களை, அவர்களுக்குச் சகாயம் செய்வது, உயிருள்ளவரை சந்தோஷமாக இருப்பது, இது போதும்! ஒரு பொழுதும் யாருக்காகவும் அழ வேண்டாம்! இன்னெரு விஷயம்! உன் உள்ளத்தில் எப்பொழுதாவது பிரேம பாவம் உண்டானல் முயற்சி செய்து, உன்னுடைய முழு பலத்தினலும் அதை உதறிவிடு! உதற முடியாவிட்டால் அங்கிருந்து வெகு தூரம்...வெகு தூரம் சென்று விடு!

பகடணடி! விடைபெற்றுக் கொள்! நீ உன் ஜோதிர் மயமான எதிர்காலத்தில், இருள் சூழ்ந்து கழிந்த காலத்தை ஆழ்த்தி விடு! எல்லாவற்றையும் மறந்து விடு! வடதாதா, ராமியின் கிணற்றைக்கூட மறந்து விடு! இதை மாத்திரம் ஞாபகம் வைத்துக்கொள்! நீ யார்? எதற்காக வந்திருக்கிருய்? போதும்! செல்! கடவுள் உனக்குப் பலமளிப்பார்!"

கிணறு மௌனமாயிற்று. நடு இரவின் கனவில் கூட அதன் வார்த்தைகள் ஒலித்துக் கொண்டிருப்பதைப் போல் தோன்றுகிறது! அந்த சப்தம் இன்னும் கூட உள்ளத்தில் எதிரொலிக்கிறது! நான் ஒன்றும் சொல்ல முடியவில்லை! யோசிக்கவும் முடியவில்லை. மயக்கம்போன்ற ஒரு உணர்ச்சி: அதனுடைய கடைசி சப்தம் "போதும்-செல். கடவுள் உனக்குப் பலமளிப்பார்" என்ற வார்த்தை நடுநிசியின் சூன்ய அந்தகாரத்தில் மின்னல் எழுத்துக்களால் எழுதப்பட்டது போல் காணப்பட்டது!

சரியாக ஞாபகம் வரவில்லை. எவ்வளவு நாட்களாயிற்று! ஒரு யுகம் கழிந்துவிட்டது! என் கண்களின் முன் அந்த காட்சி இன்றும் நடம் புரிந்துகொண்டிருக்கிறது! செவிகளில் இன்னும் அந்த வார்த்தைகள் ரீங்காரமிட்டுக்கொண்டிருக்கின்றன!

இப்பொழுது நான் ராஜதானியின் ராஜ மார்க்கம்! இரு புறம் சகிகளைப் போல் 'புட்—பாத்' இருக்கின்றன. வெய்யிலிலும் மழையிலும் என்னைக் காக்க இருபுறமும் விருக்ஷங்கள் இருக்கின்றன. வெளிச்சத்திற்காக மின்சார விளக்குக் கம்பங்கள் நிற்கின்றன! ஆனந்தத்திற்கு எவ்வளவு பொருள்கள் இருக்கின்றன! தினம் எனக்கு சிங்காரம் நடக்கிறது! என்னுடைய போஷணைக்கு ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவிடப்படுகின்றன! ராஜ மகிஷியைப் போல் எனக்கு உபசாரம் நடக்கிறது! கண்ணுக்கெட்டிய வரை நான்தான் இருக்கிறேன்!

அதிகாரத்திற்குக் குறைவில்லை! நான் நகரத்தின் மூச்சு! அதன் ரத்தம் என்வழியாக நாற்புறமும் ஓடுகிறது! நான் நாகரீகத்தின் ஸ்தம்பம்! ராஜ்ய நிர்வாகத்தின் பிராணன்! எவ்வளவு கஷ்டம்! யோசிக்கக்கூட அவகாசம் இல்லை, ஜன சமுத்திரத்தின் கணக்கற்ற அலைகள் புரண்டு ஓர்புறமிருந்தும் மறுபுறம் வெளிப்படுகிறது. நான் 'ஹும்' என்றுகூட சொல்வதில்லை. இவ்வளவு கூட்டத்தில் என்னுடையவர்கள் என்று சொல்ல யாரும் இல்லை! ஒரு கணத்திற்காகக் கூட எனக்கென்று யாரும் இல்லை. என்னுடைய புழுங்கும் வாழ்க்கையைக் கண்டு அனுதாபம் தெரிவித்து ஒரு சொட்டுக் கண்ணீர் விடக்கூடியவர்கள் யாரும் இல்லை! ஆயினும் நான் சஞ்சலமடையவில்லை! சந்தோஷமாக இருக்கவே முயற்சி செய்கிறேன். வேதனையின் கனலை புன்னகையின் சாம்பலால் மூடுகிறேன்! உதடுகளால் ஹிருதயத்தை மறைத்து வைத்திருக்கிறேன்! முடிந்தவரை அது என்ன சொன்னதோ அதைச் செய்து வருகிறேன்! ஒன்று மாத்திரம் முடியவில்லை! — 'அதை என்னல் மறக்க முடியவில்லை.'

அமராயியின் நிழலில் அந்தப் புல்லிலும், தழையிலும் அந்த வாழ்க்கை! பக்ஷிகளின் கானம்! கொடிகளின் சண்டை! வடதாதாவின் கதைகள்! இன்னும்.....இன்னும்.....வேறென்ன சொல்வேன்? எத்தனை விஷயங்கள் இருக்கின்றன மறக்க முடியாமல்! என் வாழ்க்கை சங்கீதத்தின் சுருதி திரும்பி சமத்திற்கு வருகிறது! ஆனல் திரும்பிச் செல்லும்போது யாரும் தலையசைப்பதில்லை!

இது பழைய கதை! யாருக்கு என்ன தெரியும்! ஒரு சமயம் நான் இப்படி இருக்கவில்லை என்பது!

பதினேரு மணிக்கு



இப்பொழுது மணி பதினென்று. காலை வேளைக்குப் பிறகுண்டான சோர்வைப் போக்க டீ அருந்தும் சமயம் இதுவே. புருஷர்களும் ஆபீஸுக்குப் போய், குழந்தைகளும் பள்ளிக் கூடம் சென்றபின், நீங்கள் தனியாயிருக்கும் சமயம் இதுவே. "இனிது இனிது ஏகாந்தமினிது" என்ருர் ஒரு கவி, ஆனல் ஒரு கெட்டில் டீயும் பக்கத்திலிருக்க வேண்டும் இவ்வேகாந்தம் இனிமையாயிருக்க.

★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினல், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.



இந்தியன் டீ
அருந்துங்கள்.
புத்துயிரளிக்கும் உயரிய பானம்
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது
IK 157

பாபாலாலின்
இணையற்ற வைரங்கள்
உத்திரவாதமுள்ள நகைகள்
பாபுலால் & கம்பெனி,
"RAMAKOTI BLDG."
ராட்டன் பஜார், பி. டி., மதராஸ்.
நாம், பழைய 216, சைனபஜார் கட்டிடத்திலிருந்து மேற்கண்ட இடத்திற்கு மாற்றியிருக்கிறேம் என்பதைக் கவனிக்கவும். ஞாயிற்றுக்கிழமை பகல் 1 மணிவரைதான் கடை உண்டு.

பிள்ளையார் பிடிக்கப் போய்...

சிறு கதை - "நியாயவாதி" எழுதியது

1

துரை ராஜு துப்பறியும் நவீனங்களை எழுதுவதில் தேர்ச்சி பெற்றவன் என்று பெயர் வாங்கி விட்டான். அவனது கதைகளை ஏற்றுக் கொள்ளாத பத்திரிகைகள் எதுவும் இல்லை: அவன் கேட்ட சன்மானத்தைக் கொடுக்க பிரசுரகர்த்தர்கள் தயாராக இருந்தனர். படிப்போரது கவனத்தை கவரும் தன்மையான சக்தி கொண்ட அவனது சிறு கதைகளுக்கும் நாவல்களுக்கும் நல்ல கிராக்கி இருந்ததில் யாதொரு அதிசயமுமில்லை. எழுத்தாளர் உலகத்தில் அவனுக்கு ஒரு கௌரவமான ஸ்தானம் இருந்தது.

இப்படி ஆரம்பத்திலேயே நல்ல பெயர் எடுத்த அவனுக்கு வருவாய் விஷயத்தில் யாதொரு கஷ்டமுமில்லை. அவனது வாழ்க்கை இனிமையாயும் அமைதியாயும் நடைபெற்றது, கொலைகளையும் திடுக்கிடும் சம்பவங்களையும் அவன் கற்பனை உலகத்தில் கண்டானேயன்றிவேறல்ல. அவனது தினசரி வாழ்வு மெதுவான பாதையில் சென்று கொண்டிருந்தது.

மனமொத்த மனைவியையும் கருத்துக்கிசைந்த நண்பனையும் ஒருவன் பெற்றால் அவர்களை விட பெரிதோர் பேறு வேறென்ன வேண்டும்? அந்த விஷயத்தில் துரைராஜு அதிர்ஷ்டசாலி. அவனது உள்ளத்தை கவர்ந்த மங்கை அவனுக்கு வாய்த்திருந்த வாழ்க்கைத் துணைவி. அவ்ளது அழகும் இனிமையையும் அவனை அவளுக்கு அடிமையாக்கியது. அவளும் அவன் மீது அபாரமான ப்ரேமையைக் காட்டினாள். அவ்விருவரது தாம்பத்திய இன்பத்தைப்பற்றி அதிகம் விவரிப்பானேன்?

துரைராஜுவின் நண்பன் சுகுமாரனுக்கு ஏறக்குறைய அவனது பிராயந்தான். தொட்டில் பருவ முதல் அவ்விருவரும் அன்னியோன்னியமாய் பழகினவர்கள். பள்ளிக்கூடத்திலும் சரி விளையாட்டு மைதானத்திலும் சரி, அவர்கள்பிரியாத கூட்டாளிகளாய் இருந்தனர், இருவரது ஆத்மாக்களும் ஒன்று. உடலங்களே வேறு என்று சொல்லும் படியானது அவர்களது நட்பு.

சுகுமாரன் தனம் மிக்க குடும்பத்தில் பிறந்தவன். பெயருக்கேற்றரூபசம்பத்தையுடையவன் நல்ல கல்விமான். திரண்ட ஐசுவரியவந்தனை அவன் யாதொரு உத்தியோகத்திலும் அமரவில்லை. தன்னுடைய சொத்துக்களை பரிபாலிப்பதிலும் தனது குடிகளின் க்ஷேமாபிவிருத்தியை கவனிப்பதிலுமே அவன் மிகுந்த சிரத்தையைக் காட்டினான்: அத்தகைய குணவானை தனது நண்பனாகப் பெற்றதில் துரைராஜு கொண்ட பெருமை இவ்வளவு அவ்வளவன்று, தன்னுடைய மனைவியுடன் சுகுமாரன் தாராளமாய் பழகுவதைக் கண்ட அவனது மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையில்லை.

2

அன்று துரைராஜு ஒரு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த ஒரு கட்டுரையில் ஈடுபட்டிருந்தான். அது ஒரு மாஜி போலீஸ் உத்தியோகஸ்தரால் எழுதப்பட்ட கட்டுரை. "ஆழந் தெரியாமல் காலிட்டுக் கொள்ளுதல்" என்ற தலைப்பைக் கொண்ட அது போலீஸாரது முறைகளிலும்,குற்ற ஆராய்ச்சி செய்யும் உண்மைத் துப்பறிபவர்களது முறைகளையும், அறியாத ஆசிரியர்களது கற்பனைக் கதைகளில் காணப்படும் அபத்தங்களை விவரித்ததுடன் அவர்களது அறியாமையையும் மதியீனத்தையும் பரிகசித்திருந்தது.

"க்ஷவரத் தொழிலின் நுட்பங்களை நாவிதனே அறிவான்; மரத்தால் அற்புதங்களை செய்ய வல்லவன் தச்சனே. அவ்விதமே குற்ற ஆராய்ச்சியைப் பற்றி பிழையுற எழுதக் கூடியவன் அதில் அனுபவம் பெற்ற போலீஸ் உத்தியோகஸ்தனே அல்லது துப்பறியும் நிபுணனேயன்றி வேறல்ல." என்ற முடிவுரை கொண்ட அக் கட்டுரை துரைராஜுவின் தீவிரமான சிந்தனையை எழுப்பியது. அவனுடைய புத்தகங்களை பற்றி அக் கட்டுரையில் பிரஸ்தாபிக்கப்படாவிடினும் அவனைப் போன்ற ஆசிரியர்களை அது மொத்தத்தில் தாக்கியிருந்தது. இது அவனுக்கு ஆத்திரத்தை மூட்டியதாயினும் அதில் கூறப்பட்ட காரணங்களில் சிறிதேனும் பிழை கூற முடியாது என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

அக் கட்டுரையை ஒரு போதனையாக எடுத்துக் கொள்ள விரும்பிய அவனுக்குச் சடேரென்று ஒரு எண்ணம் தோன்றியது. அவன் எழுதிக் கொண்டிருந்த ஒரு துப்பறியும் நாவலில் துப்பறிபவன் தோன்றும் கட்டம் ஆரம்பமாகும் நிலைமையில் இருந்தது. அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஒரு உண்மைத் துப்பறிபவனது அனுபவத்தை அதில் சேர்ப்பதே சிலாக்கியம் என்று அவன் நினைத்தான்.

"ஆம், அது தான் சரி. ஒரு உண்மைத் துப்பறிபவனது அனுபவங்களையும் முறைகளையும் நான் இது வரையில் நேரில் உணர்ந்ததில்லை. இந்த தடவை அவற்றை பரீக்ஷை செய்து அவற்றை எனது நாவலில் புகுத்தியும் விடுவேன்" என்று அவன் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

அவனுடைய வீட்டுக்கு அரை மைல் தூரத்திலுள்ள கடைத் தெருவில் ஒரு மாடி வீட்டின் வாசலில் "துப்பறியும் நிபுணர் துரைசிங்கம்" என்ற வர்ணம் தீட்டப்பட்ட எழுத்துக்களைக் கொண்ட கரும்பலகை தொங்கியது. அதை அவன் பலதடவை பார்த்திருக்கிறான். ஆனால் அந்த துரைசிங்கம் யார் என்பதையோ அவரது முறைகளை பரீக்ஷை செய்ய வேண்டும் என்பதையோ பற்றி அவன் அது வரையில் நினைத்தது கிடையாது.

ஆனால் அந்த தடவை துரைசிங்கத்தின் காரியாலயத்துக்குச் சென்று அவரது தொழில் முறைகளைக் கவனிக்க வேண்டும் என்று தீர்மானித்தான் துரைராஜு. அது ஒரு அதிசயமான பொழுது போக்காக இருக்குமென்று அவன் கருதினான். அச்சமயம் அவனது மனைவி ஊரில் இல்லை. பெங்களூரில் உள்ள தனது பிறந்தகத்துக்கு அவள் சென்றிருந்தாள். அவனது நண்பன் சுகுமாரனும் அவனிடம் வரவில்லை. தன்னந்தனியனாயிருந்த அவனுக்கு பொழுது போவது சிரமமாய் இருந்தது.

3

துரைசிங்கத்துக்கு வயது ஐம்பதுக்கு மேல் இருக்கும் எனினும் அவரது தேகக் கட்டு தளர வில்லை. அவரது கண்களில் கூர்மை மழுங்க வில்லை.

மலர்ந்த முகத்துடன் அவர் துரைராஜுவை வரவேற்றார். "வரவேண்டும் துப்பறியும் ஆசிரியரே! தங்களுக்கு என்னால் செய்யக்கூடியது ஏதேனும் உண்டோ?" என்று கேட்டார்.

"நான் தற்சமயம் ஒரு துப்பறியும் நாவல் எழுதிக்கொண்டிருக்கிறேன். அதில் வரும் துப்பறிபவன் என் கதாபாத்திரர்களில் சிலர் மீது மோகூல் செய்யும் சந்தர்ப்பத்தை விவரிக்க உத்தேசித்திருக்கிறேன். தங்களைப் போன்ற நிஜ துப்பறிபவர்களது முறைகளை நான் உணர்ந்து அவற்றை என் கதையில் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். இந்த நோக்கத்துடன் தான் நான் தங்களிடம் வந்தேன்" என்று துரைராஜு தனது கருத்தை வெளியிட்டான்.

துரைசிங்கத்தின் முகம் மலர்ந்தது. 'நல்லது தங்களது வரவினால் நான் பெருமை யடைந்தேன். எனது முறைகளை தாங்கள் அறிய விரும்புகிறீர்களல்லவா? தங்கள் விரும்பும் பக்ஷத்தில் தங்களுக்குத் தெரிந்த ஒருவர் மீது மோகூல் செய்து அவரது நடவடிக்கைகளை கவனித்து தங்களுக்கு ஒரு ரகசிய அறிக்கை அனுப்புகிறேன். இது சம்மதமா?" என்று வினவினார்.

துரைராஜு திருப்தியுடன் புன்னகை செய்தான்; "அது தான் சரி. நான் ஒருவரது விலாசத்தைக் கொடுக்கிறேன். அவரது நடவடிக்கைகளின் மீது மோகூல் செய்து தங்களது அறிக்கையை அனுப்புங்கள்" என்றான்.

துரைசிங்கம், "இன்றே அதை ஆரம்பிக்கிறேன். இன்றைக்கும் நாளைக்கும் அந்த ஆஸாமியின் நடவடிக்கைகளை கவனித்து, அவற்றைப் பற்றிய தகவல்கள் நாளைக்கு அடுத்த நாள் தங்களுக்குச் சேரும்படி செய்கிறேன். அந்த ஆஸாமியின் விலாசம் என்ன?" என்று வினவினார்.

"சுகுமாரன், லக்ஷ்மி விலாஸம், அடையார்" என்று துரைராஜு கூறினான். அந்த விலாஸத்தைக் குறித்துக்கொண்ட துப்பறிபவர், "நல்லது, நாளைக்கு அடுத்த நாள் பகலில் எனது அறிக்கை தங்களுக்குக் கிடைக்கும். முன் பணமாய் எனக்கு செலவுக்கு 50 ரூபாய் வேண்டும்" என்றார். அந்தத் தொகைக்கு ஒரு செக்கெழுதிவிட்டு துரைராஜு தன்து வீட்டுக்குத் திரும்பினான்

4

வீட்டுக்கு வந்தபின் அவன் டெலிபோனில் தனது நண்பனைக் கூப்பிட்டான். ஆனால் சுகுமாரன் தனது பங்களாவில் இல்லை என்று அவனது வேலைக்காரன் கூறினான்.

"சுகுமாரன் எங்கே போயிருக்கிறார்?"

"சற்று நேரத்துக்கு முன் அவர் மோட்டாரில் புறப்பட்டார். அவசரமாய் வெளியூர் போவதாயும் வருவதற்கு இரண்டு நாட்கள் பிடிக்கும் என்று சொன்னார்" என்றான் சுகுமாரனின் வேலைக்காரன்.

துரைராஜுவுக்கு சிரிப்பு வந்தது. அவனது மனக்கண் முன்னால் துப்பறியும் துரைசிங்கத்தின் ஆள் தனது நண்பன் சுகுமாரனைப் பின் தொடர்ந்து செல்லும் காட்சி தோன்றித் தோன்றி மறைந்தது. பாவம்! சுகுமாரனுக்கு என்ன தெரியும்! தன்னை நிழல்போல் தொடர்ந்து வரும் ஆளை அவன் எப்படி அறியக்கூடும்? தன்னுடைய காரியங்களில் கவனம் செலுத்தும் துப்பறிபவனை அவன் எப்படி தெரிந்துக் கொள்ளக்கூடும்?

தன்னுடைய நண்பனுடைய அலுவல்களை கவனிக்கும்படி ஒரு துப்பறிபவனை ஏவுவது விரும்பத்தககதல்ல என்ற எண்ணம் துரைராஜுவுக்குத் தோன்றவில்லை. பின்னர் இவ் விஷயததை, உணர்ந்துகொண்டால் சுகுமாரன் வியப்பும் மகிழ்ச்சியும அடைவான் என்று அவன் நினைத்தான்.

மறு நாள் அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. பெங்களூரில் இருந்த அவனது மனைவியால் எழுதப்பட்ட அக்கடிதம் அவள் மறு நாள் பிற்பகலில் அங்கு வந்து சேருவதாக அவனுக்கு அறிவித்தது.

மீண்டும் அவன் சுகுமாரனது வீட்டுக்கு டெலிபோன் செய்தான். சுகுமாரன் வெளியூரிலிருந்து திரும்பவில்லை என்று செய்தி அவனுக்குக் கிடைத்தது.

"இன்றையப் பொழுது கழிய வேண்டும். நாளைக்கு துப்பறிபவனது அறிக்கை வந்து விடும். அதைப் படித்து விட்டு சுகுமாரனை திகைக்கவைப்பேன். என் மனைவியும் திரும்பிவருவாள்' அவளும் அதைப் படித்து அதிசயப்படுவாள்!? என்று துரைராஜு தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்.

5

மறுநாள் பகலில் துரைராஜுக்கு துப்பறியும் துரைசிங்கத்தின் அறிக்கை கிடைத்தது. அதைக் கொண்டு வந்த வேலைக்காரனிடம் துரைசிங்கம் அனுப்பியிருந்தப் பட்டியல்படி அவருக்குப் பாக்கியாயிருந்த 50 ரூபாயையும் அனுப்பி விட்டு அதைப் படிக்கலானான்.

என்ன ஆச்சரியம்! துப்பறிபவரது ஆள் சுகுமாரனை நிழல் போல் தொடர்ந்து சென்றிருக்கிறான் என்பதில் சந்தேகமேயில்லை. மோட்டாரில் சுகுமாரன் தனது பங்களாவை விட்டுக் கிளம்பினானே இல்லையோ, அதே சமயம் அந்த மனிதனும் மற்றொரு மோட்டாரில் அவனைப் பின் தொடர்ந்தான். தன்னுடைய மோட்டாரைத் தானே ஓட்டிய சுகுமாரன் தன்னை மோகூல் செய்த மனிதனைக் கவனிக்கவேயில்லை.

அஸ்தமனசமயம்; சுகுமாரன் அரக்கோணம் வந்து சேர்ந்தான் என்று அறிக்கை கூறியது ரயிலின் வருகையை அவன் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தான். எனினும் அவன் ரயில் ஸ்டேஷனுக்குள் போகவில்லை. வெளியே இருந்ததை உணர்ந்த துப்பறிபவனும் தூரத்தில் காத்துக் கொண்டு இருந்தான்.

ரயிலும் வந்தது. பெங்களூரிலிருந்து புறப்பட்டு வந்த அந்த ரயிலிலிருந்து இறங்கின ஒரு அழகிய ஸ்திரீ-அவளுக்கு வயது இருபதுக்கு மேல் இராது—சுகுமாரன் இருந்த மோட்டாருக்கு வந்தாள். (அவளைப்பற்றிய வர்ணனையும் அவள் அணிந்த புடவை நகைகளை இவற்றைப்பற்றிய விவரங்கள் அறிக்கையில் கொடுக்கப்பட்டிருந்தன.)

சுகுமாரனைப் பார்த்தவுடன் அவள் புன்னகை செய்தாள். அவனோ சொல்லொணாத ஆர்வத்துடன் அவளது கரங்களைப் பற்றி அவற்றை தன் கண்களில் ஒற்றிக்கொண்டு அவளை மோட்டாரில் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டான். மறுவினாடி மோட்டார் புறப்பட்டது.

ஐந்து மைல்களுக்கப்பாலுள்ள அழகிய தோட்டமாளிகையில் அந்த மோட்டார் நின்றது: அது சுகுமாரனின் வஸந்த மாளிகை. அவன் தன்னுடன் வந்த அழகிய ஸ்திரீயை அழைத்துக்கொண்டு அந்த மாளிகைக்குள் பிரவேசித்தான்.

அங்கே இருந்தது ஒரே வேலைக்காரன் தான். அவன் அவர்களது தேவைகளை கவனித்தான். அன்றிரவை சுகுமாரனும் அவனது காதலியும் இன்பகரமாய்க் கழித்தனர் என்பதைப்பற்றி சிறிதும் சந்தேகம் இல்லை.

மறுநாள் பூராவும் காதலர்கள் அங்கே கேளிக்கையாய் இருந்தனர், அவர்கள் நந்தவனத்தில் ஏகாந்தமாய் இருந்த பொழுது துப்பறிபவன் சாமர்த்தியமாய் அவர்களுக்குப்பின்னால் உள்ள புதரில் ஒளிந்து கொண்டு அவர்களது பேச்சைக் கவனித்தது ஒரு ஸ்வாரஸ்யமான விஷயமே. அவர்களது சம்பாஷணை பின்வருமாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

சுகுமாரன்:—கண்மணி மோகனா! நீ எப்பொழுது புறப்பட வேண்டும்?

மோகனா:—நாளைக்கு மத்தியானம் நான் வீட்டுக்கு திரும்புவதாக எழுதியிருக்கிறேன்.

சுகுமாரன்;—அந்த மட்டும் நான் அதிர்ஷ்டசாலிதான். இன்றிரவை நாம் கவலையின்றி கழிக்கலாமல்லவா?

மோகனா:—(அவனை முத்தமிட்டுக்கொண்டு) நீர் பேராசைக்காரர்.

சுகுமாரன்;—கண்மணி, இன்றிரவு கழிந்து விடுமே என்ற ஏக்கமே என் சுகத்தைக் கெடுத்து விடும்போல் இருக்றது. என்ன செய்வது?

மோகனா:—இன்னும் இதைப் போன்ற எத்தனையோ சந்தர்ப்பங்கள் நமக்குக் கிடைக்கப் போகின்றன. அன்பரே, நீர் ஏன் வருத்தப்பட வேண்டும்.

சுகுமாரன்:—உன் கணவன். என்னமோமடையன் தான். இப்படித் திருட்டுத் தனமாய் நாம் சந்தித்து விட்டு பிரிவது எனக்குப் பிடிக்கவேயில்லை.

மோகனா:—என்ன செய்வது? என்விதி அப்படி போலும்! கணவனைப் பெற்றபின் காதலனை அடையும் பெண்களுக்கு என்னைப் போன்ற கதிதான்.

அன்றிரவு அவ்விருவரும் ஒரே மஞ்சத்தில் சயனித்திருந்தார்கள் என்ற விஷயத்தையும் துப்பறிபவன் தெளிவுப்படுத்தியிருந்தான்.

அடுத்த நாள் மோகனாவை அரக்கோணம் ஸ்டேஷனில் கொண்டுவிட்டு, அவளை சென்னைக்கு புறப்படும் பெங்களூர் எக்ஸ்பிரஸில் ஏற்றி விடுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அறிக்கையைப் படித்து முடித்த பின் துரைராஜு திக் பிரமை பிடித்தவன்போல் உட்கார்ந்திருந்தான். ஒரு கொடிய சொப்பனவஸ்தையை அனுபவிப்பவன் போல் தோன்றிய அவன் அப்படி எத்தனை நேரம் உட்கார்ந்திருந்தான் என்பது தெரியாது. அறைக் கதவு திறக்கப்பட்டதை அவன் கவனிககவில்லை. அவன் முன்பு அவனது மனைவி மோகனா தோன்றினாள்.

"என்ன இப்படி உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று பரிவுடன் வினவிய அவளை வெறித்து நோக்கிய அவள் கணவன், "பிசாசே! சீ! என்முன் நில்லாதே! சண்டாளி! துரோகி!" என்று கூவிக்கொண்டே அவளைக் கீழே தள்ளினான். மேஜை மீது இருந்த ஒரு கத்தியால் அவள் நெற்றியைக் குத்தினான். அவளது கூச்சலைக் கேட்டு ஓடி வந்த வேலைக்காரன் கத்தியைப் பிடுங்கி அவளது கணவனை தடுத்திராவிடில் அவள் உயிர் அக்கத்திக்கு இரையாயிருந்திருக்கும் என்பது நிச்சயம்.

ஆனால் பாவம்! துரைராஜுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது. அவனது எஞ்சிய இருண்ட வாழ் நாட்களை அவன் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் கழிக்கும்படி நேரிட்டது,

துப்பறியும் துரைராஜுவின் அனுபவம் படிப்பவருக்கு ருசிகரமானது. அவனும் சுகுமாரனும் மிகுந்த நண்பர்கள். சுகுமாரனது நடவடிக்கையைத் துப்பறிய முற்பட்டதன் விளைவு என்ன? அதனால் வெளியான ரகஸ்யம் என்ன?

பிரகாசம் கம்பெனியாரின் உயர்தரமான அல்லாய் கோல்டு நகைகள்.

சவரன் பொன்னுக்கு ஒப்பான பிரகாசமும், பல பளப்பும் உள்ளது. 5 வருஷம் உத்திரவாதமுள்ளது.



வளையல் ஜோடி 1க்கு ரூ. 3.
கழுத்து சங்கிலி „ „ 7.
வங்கி ஒட்டியாணம் (பெரிய சைஸ்) 1க்கு ரூ. 20.
(கேட்லாக் இனும்.)

R. S. பிரகாசம்&கோ., 187, சைனுபஜார் ரோட், ஜி. டி., மதராஸ்.

சிறந்த மூன்று ஆயுர்வேத ஔஷதங்கள்

(வியாதி விபரம் தபால் பில்லையுடன் எழுதி சிகிச்சை பெறுக.)

சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்

கவர்ன்மெண்டில் வைத்ய நிர்வாஹ ஸபைகளில் மெம்பரும், கவர்ன்மெண்டுவைத்திய பட்டதாரியுமான வைத்தியரத்ன பண்டிட் யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Examiner in Medicine & Clinics,)

(Govt. Diploma Examination, Etc)

(In Govt. of India medical Dress.)

மஹா பில்வாதி லேகியம்

பித்தம், வாந்தி, அன்னத்துவேஷம், அஜீர்ணம், உப்புஸம், புளியேப்பம், தலைச்சுற்றல், பித்த மயக்கம், பித்த.வாயு, பலஹீனம், மலச்சிக்கல் இவைகளை தக்ஷணமே கண்டித்துவிடும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூ. 3 வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

"மார்க்கட்டில் விற்கப்படும் இந்தியன் பற்பொடிகளுக்குள் ஆனந்த பற்பொடி ஒன்றுதான் மிக்க பிரவித்தியுடன் எங்கும் பெயர்பெற்ற தென்பதற்குக் கொஞ்சம்கூட சந்தேகமே இல்லை" என்று சென்னை ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்து இருக்கிறார்கள். எல்லா ஷாப்பு வியாபாரிகளிடமும் கிடைக்கும். போலிகளைக்கண்டு எமாராதீர்கள். நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது. கேட்லாக் இனும்.

வைத்தியஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மைலாப்பூர் : : மதராஸ்.

CATARACT

and all Eye diseases cured radically by COCONAUT Brand LOTUS Honey World-wide Reputed and Tested. ½ Dram Re. 1 4. 1 Dram Rs. 2

ULCERINE

A sovereign remedy for all sorts of Boils. Piles, Sinus, Fistulls, Carbuncles, Gangrenes, Foul-ulcers operated wounds, etc. Bottle Rs. 1-4 For these products All India Karachi Congress & Lucknow Govt. Exhibitions awarded medals Free details from :-

DADHA & Co., P. T. Madras.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங். Dr S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort. Bombay. Phone 21343.

காந்தி ஜோஸியர்



ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3. ஆருடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1. வி. பி. செலவு அணா 5. ஜனனகால விவரம் or எழுதும் நேரம், சுமார் வயது தேவை.

ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.

சிறுவர் கதை

★

முரடனுக்கு வாய்த்த மனைவி

★

" சிவன் "

சந்திரன் ரொம்பவும் புத்திசாலி. அவன் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று ஹடம் பிடிப்பவன். அவனுக்கு வாய்த்த மனைவியோ ரொம்பவும் சாது. களங்க மற்ற ஹிருதயம், மாசற்ற மேனி; மேலும் ரூபவதி. இவள் அழகில் மயங்காதவர்கள் அந்த தெருவில் யாரும் இல்லை. இவள் அழகைக் கண்டு தான் என்னமோ சந்திரன் இவளைக் கலியாணம் செய்து கொண்டான். வாழ் நாளில் பல வருஷங்கள் கழிந்து விட்டன. சந்திரன் ஷோக்குப் பேர்வழி அல்ல. நவ நாகரீகம் என்ருலே அவனுக்கு ரொம்பவும் வெறுப்பு. பழைய காலத்து மனிதர்களைப் போல் வாழ்பவன்.

அன்று வைகுண்ட ஏகாதசி. அவன் குடியிருக்கும் வீதியில் மக்களெல்லாம் அன்று குதூகலமாக புதிய ஆடைகளை உடுத்திக் கொண்டு ஆண்டவன் ஆலயத்துக்குச் செல்வதும், சிறு சிறு பிள்ளைகளெல்லாம் கையில் திண் பண்டங்களை வைத்துக் கொண்டு தின்பதும், வீதியெல்லாம் கோலத்தால் அலங்கரித்திருப்பதும் பார்ப்பவர்களுக்கு பரமா

னந்தமாயிருந்தன. இக் காட்சிகளைக்காணும் சந்திரனுக்கு ஒரே ஏக்கம் உண்டாகியது. தனக்கும் ஒரு குழந்தையில்லையே? குழந்தை பிறந்து என்றைக்கு இந்த மாதிரி தெருவில் விளையாடப் போகிறது? நாம் என்று பார்க்கப் போகிருேம்? என்ற கவலை அவன் ஹிருதயத்தைப் பிளந்தது. அவனறியாமல் அவன் ஆத்மா விம்மியது. அவன் கண்களில் பிரகாசம் மங்கியது. ஹிருதயத்திலிருந்து கிளம்பும் மூச்சு அவன் மூக்கையே கிழித்து விடும்போலாகியது.

ஏகாதசியன்று சந்திரனும் விருதம் இருந்தான். அவன் மனைவியும் விரதம் இருந்தாள். பலகாரம் செய்து சாப்பிட்டுவிட்டு அன்றைய பகல் பொழுதைக் கழித்தார்கள். இரவை கழிக்க வேண்டுமே? அதிலும் கண் விழித்திருக்க வேண்டும்? என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தான். பக்கத்து வீட்டு சில ஸ்திரீகள் வந்து சந்திரனுடைய பெண்ஜாதியை கண் விழித்திருப்பதற்காக சினிமாவுக்கு கூப்பிட்டார்கள். அந்த ஊரில் டோரா சினிமா போட்டிருந்தார்கள். அதில் ஏகாதசியை முன்னிட்டு இரவு காட்சிக்கு சாவித்திரி கதையைக் காண்பிப்பதாக விளம்பரம் பண்ணியிருந்தார்கள்.

சந்திரன் தன் மனைவியுடன் சினிமாவுக்குச்சென்ருன். அவன் பிள்ளையாய்ப் பிறந்து சினிமாவுக்கு அதற்குமுன் போனதே கிடையாது. அது எந்த மாதிரி இருக்குமென்பதே தெரியாது. அன்று எல்லோரும் போகிறதிலுைம் தன் மனைவி மனதை திருப்தி செய்வதற்காகவும், ஏகாதசி இரவும் கண் விழித்த மாதிரியிருக்கும் என்று நினைத்து தான், தன் மனைவியை சினிமாவிற்கு அழைத்துக் கொண்டு போனுன்.

படம் காட்டப்பட்டது. யமதர்மராஜன்காட்சி காட்டப்பட்டது. அதில் நரக லோகக் காட்சி தத்ரூபமாக ஜோடிக்கப் பட்டிருந்தது. இதைப் பார்த்த பெண்களெல்லாம் திகிலடைந்தனர். பிறகு சாவித்திரி தன் பர்த்தாவின் உயிருக்காக யமனுடன் வாதாடும் கட்டத்தைக் காண்பித்தார்கள். இதைக் கண்ட பெண்களெல்லோரும் கண்ணீர் விட்டனர். பிறகு சினிமாவும் முடிந்தது. எல்லோரும் தம் தம் வீட்டுக்கு ஏகினர். சந்திரனும் தன் மனைவியையுடன் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

சந்திரன் மனைவியின் பெயர் கமலா. கதையில் பெண்கள் தன் கனவனை விட்டு, பிற புருஷரிடத்தில் செல்வோருக்கு நரக லோகத்தில் பழுக்கக்காய்ந்த இரும்புத் தூணை கட்டிக் கொள்ள வேண்டுமென்று காண்பித்தது அவள் ஹிருதயத்தில் நன்கு பதிந்திருந்தது. அதை நினைக்கும் போது அவள் உள்ளம் நடுங்கும். தானும் வாழ்க்கையில் தவறி விட்டோமே, தானும் நரக லோகத்தில் அந்த தூணை கட்டிக் கொள்ள வேண்டுமே என்று ஏங்குவாள். தன்னை யறியாமல் பிதற்றிக் கொண்டு தான் எங்கு செல்கிருேம் என்று அறியாமல் பாட்டை வழியே சென்ருள்.

சந்திரன் சினிமா விட்டதிலிருந்து, தன் மனைவி ஒரு வாட்டமாக இருக்கிருளே, ஒருவேளை சினிமாவைப் பார்த்து பயந்து விட்டாளோ என்று அவளை அழைத்துக் கொண்டு வந்து வீட்டில் சேர்ப்பித்தான்.

சந்திரன் மனைவி கமலா தன் கணவனைப் பார்த்து "நாதா, சினிமா பார்த்திலிருந்து எனக்கு என்னமோ பயமா இருக்கிறது. பாபம் செய்தவர்களை அப்படிதான் தண்டிப்பார்களா? ஐயோ என்னையும் அப்படிதான் செய்வார்களோ?" என்ருள்.

கணவன்:—"உன்னை அந்த மாதிரி செய்ய மாட்டார்கள். நீ அந்த் மாதிரி நடந்தால் தானே"

மனைவி, "ஐயோ, நான் தவறி விட்டேன் நான் பாபி, விபசாரி, கொண்ட கணவனுக்கு துரோகம் செய்தவள். பக்கத்து வீட்டு புருஷனேடு விபசாரம் செய்தவள். எனக்கு அந்த தண்டனை தான் சரியானது" என்று கூறி அலறினுள்.

சந்திரனுக்கு கோபம் கிளம்பி விட்டது. கண்கள் சிவக்க, கைகள் துடிக்க, "அடி சண்டாளி! என்ன சொன்னுய்? எனக்கா துரோகம் செய்தாய்? எனக்கும் என் குடும்பத்துக்கும் பெரிய அபகீர்த்தியை விளைவித்தாய். நீ இருந்தும் ஒன்று தான். இல்லாமலும் ஒன்று தான். உனக்கு அங்கு தண்டனை இல்லை. நான் இங்கு கொடுக்கிறேன் பார்" என்று அவள் கழுத்தை ஒரே அமுக்காய் அமுக்கி விட்டான்.

கமலா தான் செய்தது துரோகம் என்று நினைத்திருந்தாள்: அதற்கு தன் கணவன் செய்தது சரியான தண்டனை தான் என்று முக மலர்ச்சியுடன் உயிர் விட்டாள்.

சந்திரனுக்குக் கோபம் தணியவில்லை: தான் மாத்திரம் இருப்பதா என்று அவனும் தூக்கு போட்டுக்கொண்டு இறந்தான். இருவர் உயிரும் அந்த ஏகாதிசி புண்ய நாளில் சாந்தியடைந்தது.

அவள் அறியாமையால் தவறி நடந்து விட்டாள். தன் கணவனிடத்திலும் சொல்லி விட்டாள். கணவனும் மனைவி விபச்சாரியானதை நினைத்து கோப மிகுதியால் அவளைக் கொன்றுவிட்டான். இது யார் மேல் குற்றம்? முரடனுக்கு வாய்த்த மனைவி முட்டாள் தானே!



உண்மை உறுதிக்கும் உத்திர வாதம்.

—:—

"ஷண்முகம் பிராண்டு"

ஸ்டீல் டிரங்கு & சூட்கேஸ்கள்

தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.

ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்
தயாரிப்பவர்:- சி. ஞானசுந்திர நாயகர்,
P. 3094. 341, எஸ்பிளனேட், மதராஸ்.

ஸேத் ஜம்னுலால் பஜாஜ்

காங்கிரஸ் சரித்திரத்தில் காந்தி சகாப்தம் ஆரம்பித்த சந்தர்ப்பம மிகவும் முக்கியமானது: பஞ்சாப் அக்கிரமம் நடந்த சமயம்: கிலாபத் இயக்கம் வலுத்த காலம்: அப்போது மஹாத்மா சத்யாக்ரஹத்தையும் ஒத்துழையாமையையும் அனுஷ்டிக்க முன் வந்தார். அஹிம்சா தர்மத்தை உபதேசித்தார். அவரது பரிசுத்தமான வாழ்க்கை போதனையைப் பரிமளிக்கச் செய்தது: மாசற்ற நடத்தை மண்டலம் முழுதிலும் மதிப்பு பெற்றது! நாட்டார் நன்றியறிவுடன் அவரை மகாத்மா என்றழைத்தனர். எங்கு பார்த்தாலும் உள்ளக் கொதிப்பு: ஆனல் காந்திஜி சாந்தமூர்த்தியாகவே சோபித்தார். நாட்டின் விடுதலைக்கு உன்னதமான வழியைக் காட்டினுர்: பணக்காரர்களும் பாமர மக்களும் ஒனறுபட்டு தேசப்பணியில நாட்டம் காட்டமுற்பட்டதற்குக் காரணமானுர். மற்றுமொரு விஷயம்: 1920-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் முதல் தேதி லோகமான்ய பால கங்காதர திலகர் காலமானுர்: திலகர் காலம் தீர்ந்தது: அன்றைய தினம்தான் காந்திஜீயின் காலமும் பிறந்தது. நாடெங்கும் சத்தியாக்ரஹ இயக்கமும் அந் நாளே ஆரம்பித்தது.

பெரியாரின் உயர்வு

மகாத்மா தலைமை ஏற்றுக் கொண்டது நாட்டின் பெரும் பாக்கியமாகும்! ஏனெனில் அவரது சத்யாகரஹ இயக்கம் அநேகரை அவரிடம் ஆகர்ஷித்தது. நிதி மிகுந்து நிர்விசாரமாயிருந்தவர்களும் நாட்டின் க்ஷேமத்தில் கவலை காட்டினர்: மகாத்மாவுக்கு பக்க பலமாக இருக்கப் பேரு வகையுடன் முன் வந்தனர் பலர். இவர்களுள் முக்கியமானவர் ஸேத் ஜமனுலால் பஜாஜ், இவ் வுத்தமர் சென்ற வாரம் வர்தாவில் தேகவியோகமானுர்: அந்திம காலம் வரை நம் நாட்டின் நிதிபோல் விளங்கினுர்: அவரே ஒரு நிதி என்றும் கூறல் பொருந்தும்; நாட்டின் நிதியை நன்கு நிர்வகித்தார். தாராள மனது: கள்ளங் கபடற்ற உள்ளம்: ஆடம்பரமின்றி கடமையைச் செய்வதில் கருத்து கொண்டவர்: எளிய வாழ்க்கையில் விருப்பம்: பெரு நிதி படைத்தும் பேராசை கிடையாது: செல்வமிருந்தும் செறுக்கில்லாதவர். கிராமப் புறத்தில் மோஹம் கொண்டவர்: தொழிலில் நிபுணராயினும் தேசீயத்தில் அதிக அக்கரை காட்டினுர். மகாத்மாஜீயின் நிர்மாண திட்டத்தை உண்மையாகாவே கடைபிடித்தவர் ஸேத் பஜாஜ்தான். அவர் செய்து வந்த சேவையின் சிறப்பு வெளியாருக்குத் தெரியாது. நாட்டில் அவர் பெரிய ஸ்தானம் வகித்தவர். ஆனுல் அதை எல்லோரும் அறியார். ராஜீயத்தில் புகுந்து சட்டசபைகளில் பிரவேசித்து பிரகாசிக்க பஜாஜ் விரும்பவில்லை. வர்தாவில் மாட்டுவண்டியை அவர் உல்லாசமாக ஓட்டிச் செல்வதைப் பார்த்தவர் பலர் தங்களது பிரமிப்பைத் தெரிவிக்கின்றனர்! அந்தியகாலம் வரை அனைவருக்கும் அன்பாகவே இருந்தார்.



ஸேத் ஜம்னுலால் பஜாஜ்

பிறப்பு வளர்ப்பு

ஜெயப்பூர் சமஸ்தானத்தில் பிறந்தார் பஜாஜ். ஸிகாருக்கருகே காஸி கா பாஸ் என்ற கிராமத்தில் தான் 1889-ம் வருஷத்தில் ஜனனம். பெற்ரேர் பெரிய பணக்காரர்கள்; ஆயினும் பஜாஜ் ஐந்து வயது சிறுவனுயிருக்கும் போதே வர்தாவில் இருந்த ஸேத் பஜாஜின் பேரப் பிள்ளையாக ஸ்வீகாரம் கொடுக்கப்பட்டார்; அவரை ஸ்வீகாரமாக ஏற்றுக்கொண்ட ஸேத் அந்நாளில் பெரிய தொழில் நிபுணர்: மத்ய மாகாணத்தில் பிரசித்தி பெற்றவர்; பல மில்களுக்குச் சொந்தக்காரர்: பருத்தி ஏற்றுமதி பண்ணியவர். நான்காம் பாரம்வரை மராத்தி பள்ளியில் பஜாஜ் படித்தார்: ஆங்கிலமும் அப்யசித்தார்: 12-ம் வயதில் ஸ்ரீமதி ஜானகிபாயை மணந்தார். ஸேத்

பஜாஜ் பிறகு அதே தொழிலில் ஈடுபட்டார்: பொறுப்பை திறமையுடன் நிர்வகித்தார்: புத்தி சாதுர்யத்தையும் காட்டினுர்: பதினேழாம் பிராயம் பூர்த்தியான சமயம் ஸ்வீகாரப் பாட்டனுருடன் சண்டை பிறந்தது: சொத்து கொடுக்காமல் விரட்டுவேன் என்ருர்: இஷ்டப்பட்டால் கோர்ட்டுக்குப் போகலாம் என்றும் சொன்னுர். பஜாஜ் இச்சமயம் காட்டிய பொறுமை ஆச்சர்யமானது: கௌரவத்தையும் சுய மதிப்பையும் விடவில்லை: இதற்குப் பதில் அனுப்பினுர்: உரிமையை இழக்க சம்மதித்தார்: தமக்கு ஸ்வீகாரச் சொத்தில் பாத்தியதை கிடையாதென்று ஒரு பத்திரத்தை எழுதிக்கொடுத்தார்: ஏழ்மையை வெறுக்கவில்லை. இதனுல் பாட்டனுர் மனம் மாறியது. மீண்டும் பஜாஜை அழைத்து ப்ரீதி காட்டினுர். 1908-ல் அவர் காலமானுர்: 6 லக்ஷ ரூபாய் விட்டுச் சென்ருர் பிறகு பஜாஜ் லக்ஷக்கணக்கில் சேர்த்துக் குவித்தார். நாளடைவில் மதிப்பும் வளர்ந்தது: மேன்மையும் உயர்ந்தது, ஸர்க்காரின் பஹுமானமும் கிடைத்தது: 'ராய் பஹதூர்' பட்டத்தை 1918"ல் அளித்தனர்: கௌரவ மாஜிஸ்திரேட்டாக 1908-ல் நியமித்தனர். இந்த நிலைமை நீடித்திருந்தால் ஸேத் பஜாஜின் வாழ்க்கையே மாறியிருந்திருக்கும்! மேலும் பல அலங்காரப் பட்டங்களைப் பெற்றிருந்திருப்பார்!

★ கே. எஸ். ஆர். ★

மனே நிலை மாறியது

நாட்டின் அத்ருஷ்டம் காரணமாக அவரது வாழ்க்கையிலும் மனேநிலையிலும் வெகுசீக்கிரத்தில் மாறுதல் ஏற்பட்டது: மஹாத்மாஜி தென் ஆப்ரிக்காவிலிருந்து வந்தது முதற்கொண்டே ஸேத் பஜாஜ் அவரிடம் மதிப்புகொண்டார்: 1917-ல் நடந்த காங்கிரஸ் கூட்டத்திற்கும் போயிருந்தார்; மகாத்மாஜி காட்டிய வழியை சிரத்தையுடன் சீர்தூக்கிப் பார்த்தார்: நாட்டின் ஏழ்மை நிலைஒருபுறமும்,மகாத்மாஜியின் தூய்மையான நடத்தை மற்ருெரு புறமும் சேர்ந்து அவரை தேச சேவையில் ஈடுபடுத்தின. ஜலியன்வாலாபாக்கில் நடந்த கொடுமை பஜாஜின் உள்ளத்தில் ஒரு புது உணர்ச்சியை உண்டாக்கியது. பட்டம் பதவிகளைத்துறக்க ஆசை பிறந்தது: பொதுமக்களின் சுகதுக்கங்களை பகிர்ந்துகொள்ள ஆவல் ஏற்பட்டது: தமது செல்வத்தை சேவை செய்வதற்குத் தகுந்த சாதனமாகக் கொண்டார்: மிகுந்த சந்தோஷத்துடன் முன் வந்தார்: காந்திஜீ கக்ஷியில் சேர்ந்தார்: கொள்கையும் கருத்தும் ஆதரவு பெற மாகாணம் முழுதும் சுற்றி யலைந்தார்: தன்னலமற்றவரின் தியாகம் சென்றவிடமெல்லாம் தீபம் போல் பிரகாசித்தது. 1918-ல் நாகபுரி கமிஷனர் அவரை வரவழைத்து ஸர்க்காருக்கு எதிராக நடப்பதற்குக் காரணம் கேட்டபோதும் அவர் தலை குனியவில்லை.

வரவேற்பு கமிட்டித் தலைவர்

1920—ம் வருஷம் நாகபுரியில் காங்கிரஸ் மஹாசபை கூடியது: வரவேற்பு கமிட்டித் தலைவராக ஸேத் பஜாஜ் இருந்தார். தமது மனதில் தோன்றியதைப் பட்டவர்த்தனமாக எடுத்துச்சொன்னுர். காந்தியத்தைத் தாம் ஆதரிப்பதன் காரணத்தை விளக்கிக் காட்டினுர்: கல்கத்தா காங்கிரஸ்நிறைவேற்றிய மூவகை பஹிஷ்கார தீர்மானத்தை அங்கீகரிக்கவேண்டும் என்ருர்: அஹிம்சையிலும் சத்யாக்ரஹத்திலும் தமக்கிருக்கும் நம்பிக்கையை விஸ்தரித்துக்கூறினுர்: அத்ருப்தியுள்ளவர்களுக்கு சமாதானம் சொன்னுர். ஸ்ரீமான் ஸி. விஜயராகவாச்சாரியார் தலைமையில் கூடிய முக்கியத்துவம் வாய்ந்த இக்காங்கிரசில்

ஸேத் பஜாஜ் செய்த பிரசங்கம் மிகவும் விசேஷமானது. இதிலிருந்து சில பகுதிகளை எடுத்துக்காட்டுவது பெரியாரின் பெருமையைப் புலப்படுத்தும்:

"இந்தியப் பொதுமக்கள் கொண்டிருக்கும் விழிப்பையும் நான் குறிப்பிடவேண்டும். இந்த விழிப்பு எத்தகையது என்பதை நம்மில் அநேகர் உணரவில்லை என்று நான் சந்தேகிக்கிறேன். படித்த இந்திய சமூகத்தின் தலைவர்களுக்கு ஒரு எச்சரிக்கை கொடுக்கிறேன். இந்த விழிப்பின் ஆழத்தை அறியாமல் இருந்து, சிரத்தையுடன் தியாகம் புரியவும், நம் தேச முன்னேற்றத்திற்கான சேவையில் இறங்காமலும் அவர்கள் இருக்கும் வரை ஜனங்கள் அவர்களிடம் எந்நாளும் நம்பிக்கை கொள்ளமாட்டார்கள். இயக்கத்தின் வெற்றி தோல்வியைப்பற்றி அவர்கள் சிந்திக்கக்கூடாது. கல்கத்தா காங்கிரசின் தீர்மானத்தைப் புறக்கணிப்பது நாட்டிற்கு நன்மையைப் பயக்காது. ஆகவே நீங்கள் உங்கள் கடமையையும், பொறுப்பையும் உணர்ந்து, கௌரவத்துடனும் தீரத்துடனும் முன் வரவேண்டும்.

முதலாளிகளுக்கு முறையீடு

"இதற்கப்புறம் நான் தொழிலில் ஈடுபட்ட எனது சகாக்களுக்கு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்: இதுவரை ராஜீயத்தில் சிரத்தையில்லாமல் தேசமுன்னேற்றத்தைப் பற்றி கவலை கொள்ளாமல் அவர்கள் இருந்து வந்திருக்கின்றனர். தங்கள் தாய் நாட்டிற்கு அவர்களும் கடமைப்பட்டவர்கள் என்பதையும், இந்த நெருக்கடியான சமயத்தில் அவர்கள் தைரியமாக சேவையில் இறங்கவேண்டும் என்பதையும் நான் வெளியிடக்கோருகிறேன். பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அவர்கள் அதிக பணம் குவித்திருக்கலாம்: ஆனால் தேசத்தில் சந்தோஷம் அதனால் நிலவவில்லை என்பதை, ஆர யோசித்துப் பார்த்தால் அவர்களே அறிவார்கள். பிரதிதினமும் ஏழ்மையும் வறுமையும் நாட்டில் அதிகரித்துவரும்போது தான் அவர்களது அபிவிருத்தி பெருகியது. அந்நியநாட்டு வர்த்தகம் காரணமாகத் தாங்கள் லக்ஷக்கணக்கில் தனம் குவிப்பதைப்பற்றி பெருமைப்படும் போதும், இவ்வாறு தாங்கள் பணம் குவித்துக்கொண்டே போவது காரணமாக, ஒரு தினம் நல்ல சாப்பாடு கிடைத்தால் அது ஸ்வர்க்கபோகத்திற்கு சமமாகும் என்று எண்ணும் ஸ்திரீ புருஷர் குழந்தைகள் உட்பட 30 லக்ஷம்பேர் நாட்டில் இருந்து தவிக்கின்றனர் என்பதையும் அவர்கள் மறந்துவிடக்கூடாது. இது சோதனை காலம்: நமது வாழ்க்கையை நன்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடிய தருணமும் இதுதான். இந்த தேசீய யக்ஞத்தில் பங்கெடுத்துக் கொண்டு, பழைய அசிரத்தையையும் கோழைத்தனத்தையும் உதறித் தள்ளுவதுதான் உங்கள் எதிர்காலத்திற்கும், வெளிநாட்டு வர்த்தகத்திற்கும் உதவும் என்பதை சிந்தித்துப் பார்த்தால் நீங்களே கண்டு கொள்வீர்கள்.

"இந்த யாகம்"

"நீங்கள் இன்று கடமையைச் செலுத்தத் தவறினால் பிற்கால சந்ததியாரின் பழிக்குப் பாத்திரமாவதுடன், இழிவுக்கும் நாம் ஆளாவோம். உங்கள் செல்வத்தை இந்த யக்ஞத்தில் அர்ப்பணம் செய்ய முன் வந்தால் இது சுடர் விட்டெறிந்துபிரகாசிக்க ஹேது ஏற்படும். இந்த பெரிய யாகத்தில் தியாகம் அதி அவசியமாகும்: சுயநலமின்றி சேவை புரிந்தால் தான் ராஜீயப் போராட்டம் பயன் பெறும்! சத்தியம், நம்பிக்கை, பக்தி— இவைதான் நமக்குப் பலம் தர வேண்டும். நிலைமையை நிதானித்துப் பார்க்கும் போது என் நம்பிக்கை அதிகரிக்கிறது: இந்த இயக்கம் மேன்மையுறும் என்பது நிச்சயம். தமது ஆத்ம சக்தியினாலும் நீண்ட தவத்தினாலும், சத்தியத்திலிருந்து வழுவாமலும், எளிய வாழ்க்கையாலும், நிர்ப்பயமான ஸ்வபாவத்தினாலும் நிகரற்றசேவாபக்குவத்தினாலும், தன்னலமின்மையாலும், மக்களின் உள்ளத்தில் ஒப்புயர்வற்ற மதிப்பு பெற்றிருக்கும் ஒரு மஹான் இவ்வியக்கத்திற்கு தலைமை வகித்து, தமது பரந்த அனுபவத்தை நாட்டிற்கு அளிக்க, முன் வந்திருப்பதே இதற்கு அத்தாக்ஷி."

சமீபத்தில் நடந்த அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஸேத் ஜம்னுலால் பஜாஜ் கலந்துகொண்டார். இடதுபுற ஓரத்தில் ஸேத்ஜி உட்கார்ந்திருப்பதைக் காணலாம். (ஜி எஸ்.எ.)

தாராள மனது

காந்திஜீ காங்கிரஸ் பொக்கிஷதார் பதவியை ஸேத் ஜம்னுலாலுக்குக் கொடுத்தார். அவரும் கடைசி வரை மகாத்மா தம்மிடம் வைத்த நம்பிக்கையைப்பழுதின்றி பாதுகாத்தார். நாட்டின் நிதியை நன்கு பரிபாலித்தார். லக்ஷாதிகாரியின் லக்ஷியமும், ஜனங்களின் க்ஷேமத்தையே ப்ரதீக்ஷித்தது. 1921ல் திலகர் ஸ்வராஜ்ய நிதிக்கு வசூல் ஆரம்பமாயிற்று: அதற்கு முதன் முதல் ஒரு லக்ஷ ரூபாய் மிகுந்த தாராள மனதுடன் ஸேத் பஜாஜ் கொடுத்தார். தங்கள் தொழிலைத் துறந்து தேசப்பணியில் இறங்கும் நியாயவாதிகளுக்கு அது உதவவேண்டும் என அவர் கோரினார். நாட்டில் கிளர்ச்சி நீடித்தது; சத்யாக்ரஹ இயக்கம் வலுத்தது: 1922-ம் வருஷாரம்பத்தில் மஹாத்மா சிறைப்பட்டார்: காரியக்கமிட்டியின் பொறுப்பு அதிகரித்தது: அப்போது கதர் அபிவிருத்தி காரியம் ஸேத் ஜம்னுலாலிடம் விடப்பட்டது. அவரிடம் 5 லக்ஷ ரூபாய் ஒப்படைக்கவும் முடிவு செய்யப்பட்டது: இந்த சமயம் தொழிலை விட்டு விலகிய வக்கீல்களின் சகாயத்திற்காக, மறுபடியும் அவர் ஒரு லக்ஷ ரூபாய் நன்கொடை உதவினார். சட்ட மறுப்பு இயக்கம் நடத்துவதைப்பற்றி விசாரிக்க ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. அதில் ஸேத் பஜாஜ் ஸ்தானம் பெற்றார்: ஆனால் அலுவலைக் கவனிக்க அவகாசம் இல்லை: ஆகவே நாடு முழுதும் சுற்றிபார்க்க முடியவில்லை: காலி ஸ்தானத்திற்கு ஸ்ரீகஸ்தூரிரங்கய்யங்கார் நியமிக்கப் பட்டார். மற்ற மெம்பர்கள் டாக்டர் அன்ஸாரி, மோதிலால் நேரு. ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி, ஹக்கிம் அஜ்மல்கான்.

காரியக் கமிட்டியிலிருந்து பிரிந்தது

1923-ம் வருஷம் நாட்டின் நிலைமை தெளிவாக வில்லை. ஆயினும் பாபு ராஜேந்திரப்பிரசாத், ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார், ஸேத் ஜம்னுலால் பஜாஜ், ஸ்ரீ. தேவதாஸ் காந்தி ஆகிய நால்வரும் தேச முழுதும் சஞ்சாரம் செய்தனர். திலகர் ஸ்வராஜ்ய நிதிக்குப் பணம் திரட்டினர்: நன்கொடையும் ஏராளமாக வந்து சேர்ந்தது: தொடர்ந்த முயற்சி மிகுந்த திருப்தியைத் தந்தது. 1923-ம் வருஷம் மே மாதம் பம்பாயில் காரியக்கமிட்டி கூடியது: அப்போது இக்கமிட்டியார் தங்களது யாதாஸ்தை அதன் முன்பு சமர்ப்பித்தனர். இதற்கப்புறம் அகில இந்திய காங்கிரஸ்கமிட்டி கூட்டம் நடைபெற்றது. கயா காங்கிரஸில் நிறைவேறிய சட்ட சபை பஹிஷ்கார தீர்மானத்தைப் பிரசாரம் பண்ணுவது அவசியமில்லை என்று விதிக்கப்பட்டது. ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும் பாபு ராஜேந்திரப் பிரசாத்தும் இதை எதிர்த்தும் பயனில்லை. கடைசியில் கமிட்டியில் தீர்மானம் நிறைவேறியவுடன் காரியக்கமிட்டி மெம்பர்களில் ஆறு பேர்கள் தங்களது ஸ்தானத்தை ராஜீநாமாச் செய்தனர். அவர்கள் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியார், ஸர்தார் வல்லபாய் படேல், பாபு ராஜேந்திரப் பிரசாத், ஸ்ரீப்ருஜ்கிஷோர் பிரசாத், ஸ்ரீ ஜி. பி. தேஷ்பாண்டே, ஸேத் ஜம்னுலால் பஜாஜ் ஆகியோர்தான். இந்த ராஜீநாமாக்கள் முதலில் அங்கீகரிக்கப்படவில்லை.

உயர்ந்த ரக பாக்குகளை மைசூரிலிருந்து தருவித்துக் கொள்ளுங்கள்.
உங்களுடைய தேவைக்கு உடனே எழுதவும்:
பூபாலம் R. சந்திரசேகரய்யா & கம்பெனி,
பாக்கு வியாபாரிகள்,
ஷிமோகா. (மைசூர்சமஸ்தானம்)

சாந்தி: ஸேத் ஜம்னுலால் பஜாஜ் தேக வியோக மான பின்பு எடுத்த படம் (பி என் கே)

நாகபுரி சத்யாக்ரஹம்

இதற்கு சற்று முன்பு மற்றொரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. அது நாகபுரி தேசீயக்கொடி சத்யாக்ரஹம் ஆகும். நாகபுரியின் தேசீயக் கொடியை எடுத்துக் கொண்டு ஊர்வலம் போகக் கூடாது என்று போலீஸ் தடையிட்டனர். 1923-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 13-ந் தேதி சில தொண்டர்கள் இவ்வுத்திரவை மீறினர். அவர்கள் உடனே கைது செய்யப்பட்டனர். அவ்வளவுதான்! சத்யாக்ரஹ இயக்கம் ஆரம்பித்தது: அடுத்த மாதம் முதற்கொண்டு பிரதிதினமும் பத்து தொண்டர்கள் சிறை செல்ல முன் வந்தனர். மத்தியமாகாண ஸர்க்கார் பிடிவாதமும் மாறவில்லை: தேசீயக் கொடிகளைப் பறக்கவிடும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஸர்க்கார் மான்யம் கிடைக்காதென்றனர் அவர்கள். இருந்தும் என்ன? இது இயக்கத்தை வலுக்கத்தான் செய்தது. இம்மாதம் முடியுமுன் 350 பேர் கைது: இந்த நிலையில் பெருநிதி படைத்த பஜாஜ் பஹிரங்கமாக முன்வந்தார்: சத்யாக்ரஹம் செய்தார்: செல்வாக்கு அதிகரித்தது. ஜூன் மாதம் 17-ம்தேதி அவரை அதிகாரிகள் உள்ளே அடைத்தனர். அன்றையதினமே தடையுத்தரவை இரண்டுமாத காலத்திற்கும் அமுலாக்கினர். ஒருவாரத்திற்கப்புறம் விசாரணை ஆரம்பமாகியது. ஜூலை மாதம் 10-ம் தேதி தண்டனையும் விதிக்கப்பட்டது. 18 மாதக் கடுங்காவலும் 3000 ரூபாய் அபராதமும். அபராதத்தை வசூலிக்க ஸேத்ஜியின் மோட்டார்காரை ஸர்க்கார் ஏலம் போட்டனர்: நாகபுரியில் அதை வாங்குபவர் ஒருவரும் கிடையாது: அவ்வளவு மதிப்பு அவருக்கு அங்கு! கடைசியில் கத்தியவாரில் கொண்டு போய் விற்றனர். ஸேத் வழிகாட்டியது மேலும் பலர் சத்யாக்ரஹம் புரியத் தூண்டியது. ஆயிரம் பேருக்கு மேல் சத்யாக்ரஹம் புரிந்தனர். இது நிற்க, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் ஸேத்ஜியைப் பாராட்டியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது: இயக்கம் வலுக்க வலுக்க அதிகாரிகளின் கவலை அதிகரித்தது: மத்ய மாகாண சட்ட சபையில் இதை நிறுத்துவதற்கு வழி தேடப்பட்டது. ஆகஸ்டுமாதம் 17 ம் தேதி தான் இந்த இயக்கம் நின்றது. அதிகாரிகள் உண்மையை உணர்ந்ததே இதற்கு உதவியது.

காந்திஜி சிஷ்யர்

பின்னர் பல வருஷங்கள் கழிந்தன! ராஜீய முற்போக்கில் அநேகர் சிரத்தை காட்டினர்: சட்ட சபைப் பிரவேசம் முதலியவற்றில் நாட்டம் கொண்டனர்பலர். ஆனால் ஜம்னுலால் மட்டும்காந்திஜி கடைபிடித்த மார்க்கத்திலிருந்து சிறிதளவுக்காவது வழுவவில்லை. காந்திஜியையே பரிபூரணமாக ஆதரித்தார். அபிப்பிராயபேதம் தாண்டவமாடிய அந்த காலம் எல்லாம் அவர் ஆக்க வேலைகளில் ஆர்வம் கொண்டார். வகுப்பு சமரஸம், ஹரிஜன முன்னேற்றம், கதர் அபிவிருத்தி, தீண்டாமை ஒழிப்பு—இம்மாதிரி விஷயங்களில் விசேஷ சிரத்தை பூண்டார். நாட்டின் பல இடங்களிலும் உண்மையான பணி செய்வதற்கு வசதி ஏற்படுத்தினார். காந்தி சேவாசங்கத்தை ஸ்தாபித்தார்: அகில இந்திய நூல் நூற்போர் சங்கத்தை நிறுவினார். அகில இந்திய கிராமத் தொழிற் சங்கத்தைத் துவக்கி வைத்தார். தாம் சேகரித்த செல்வத்தைத் தங்கு தடையின்றி செலவழித்தார். தமது மரணகால பரியந்தம் சுமார் 20 லக்ஷ ரூபாய்க்கு மேல் அவர் நாட்டிற்காக வழங்கியிருந்திருக்க வேண்டும். வர்தாவில் தங்கியிருப்பது: நாகபுரியில் தொழில் நடத்துவது: இவ்வாறு அவர் தம் காலத்தைக் கழித்துவந்தார். வர்தாவுக்கருகில் சேவாக்ராமத்தை மஹாத்மா வாசத்திற்காக நிர்மாணித்துக்கொடுத்தார்: இதற்கப்புறம் சபர் மதியிலிருந்துசேவாக்ராமத்திற்கு வந்தார் அந்த சிரேஷ்ட புருஷர். இது நடந்தது 1930-ம் வருஷ உப்பு சத்யாக்ரஹத்திற்குப்பின்பு. இந்த உப்பு சத்யாக்ரஹத்தின்போது இரண்டாம் விசை இந்த செல்வந்தர் சிறை சென்றார். இதே வருஷம் மூன்றும் முறையும் இவர் தண்டனையேற்றார். காரியக்கமிட்டிமெம்பர் என்ற ஹோதாவில் சிறை புக நேர்ந்தது: சிறிதும் தயக்கமின்றி முன் வந்தார்: நிர்ப்பந்தத்தை நிந்திக்கவில்லை: இந்த நிர்ப்பந்தம் பிறந்திராவிட்டால் நிர்மாணவேலைக்குநலம் மேலும் நிறைந்திருக்கும்!

பொறுப்பு மிகுந்தது

மறு வருஷம் மேமாதம் மகாத்மாஜி, ஸர்தார் படேல், ஸேத்பஜாஜ் ஆகிய மூவரும்முஸ்லிம்தலைவர்களைச்சந்தித்துப்பேசி சமரஸம் கொண்டுவரும்படி காரியக்கமிட்டியாரால் கோரப்பட்டனர்: இதனால் பலன் ஏற்பட்டதாகக் காணோம். இதே வருஷம் தீண்டாமை ஒழிப்புக் கமிட்டியும் உயிர் பெற்றது: காரியத்திட்டத்தை வகுத்து நடத்த ஸேத் பஜாஜ் அதிகாரம் பெற்றார். பொறுத்தமான இடத்தில் பொறுப்பு புகுத்தப் பட்டதும், பிரயோஜனமும் பலனும் விரைவில் பிறந்தன. 1934-ம் வருஷம் இரண்டாம் சட்ட மறுப்பு இயக்கம் ஆரம்பித்தது: தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராய் சிறை வாசத்தை வர வேற்றனர்: தலைமையும் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்றப்பட்டு வந்தது. காங்கிரஸ் தலைமை தாங்கிய ஸர்தார் வல்லபாய் படேல் சிறை செல்ல நேர்ந்தது. இந்த சமயத்தில் அவருக்கப்புறம் காங்கிரஸ் தலைமைப் பதவியை ஏற்று, அடுத்த காங்கிரஸ் மஹாசபைக் கூட்டம் வரை பொறுப்பை நிர்வகிக்க வேண்டும் என்று ஸேத் ஜம்னுலால் பஜாஜ் கோரப் பட்டார். இவ்வாறு சிறிது காலம் ஸேத் பஜாஜ் தலைமை வகித்தார்.

ஜயப்பூர் தகராறு

தாம் பிறந்த ஜயப்பூர் சமஸ்தானத்தில் 1938-ம் வருஷம் தகராறு தலை காட்டியது: ஸர்க்கார் பிரஜைகளை விரோதித்தனர்: ஸிகார் சமஸ்தானத்துடன் சண்டை பிறந்தது: பொது ஜனப் பிரதிநிதிகளது வேண்டுகோளைத் திரஸ்கரித்தனர்: இரு திரப்பாருக்கும் மனஸ்தாபம் முற்றியது: இந்த சமயத்தில் இவ்வருஷம் டிசம்பர் மாதம் ஸேத் பஜாஜ் ஜயப்பூர் போனார்: அந்த இயக்கத்தில் கலந்து அதை ஆதரிக்கச் சென்றார்: உள்ளே பிரவேசிக்கக் கூடாது என்றனர் அதிகாரிகள் அவரிடம்: அதையும் மீறி சமஸ்தானத்திற்குள் புகுந்தார். இரு முறை அவரை அப்புறப்படுத்தினர்: "இரண்டு விசைகள் கால் பந்து போல் உதைத்தனர்" என்றார் மஹாத்மாஜி இதைப் பற்றி வெகு வேடிக்கையாக; இதனால் பஜாஜ் பின் வாங்கவில்லை. அவரைக் கைது செய்தனர், பிரஜா மண்டலத்தாருக்கு இது வெற்றிகரமாகவே முடிந்தது: இறுதியில் அவர்களது கக்ஷி இதனால் ஜயித்தது: கோரிக்கைகள் யாவும் ஒப்புக் கொள்ளப்பட்டன:பின்னர் விடுதலையடைந்த ஸேத் ஜம்னுலால் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவு ஏது? 1940ம் வருஷ முடிவில் பேச்சு சுதந்திரத்தை வற்புறுத்தி மகாத்மாஜி ஒரு இயக்கத்தை ஆரம்பித்தார்: யுத்த நிலை காரணமாகத் தோன்றிய இந்த இயக்கத்தில் காரியக் கமிட்டி மெம்பர்கள், அகில இந்திய கமிட்டி மெம்பர்கள். சட்டசபை மெம்பர்கள் முதலிய பலர் ஈடுபட்டனர்: அநேகர் சிறைவாசத்தை யேற்றனர். அவர்களில் ஸேத் ஜம்னுலாலும் ஒருவர்: குறிப்பிட்ட காலம் சிறையில் இருந்தார். வெளியே வந்ததும் பழையபடி நிர்மாண வேலையில் ஊக்கம் கொண்டார். சமீபத்தில் நடந்த காங்கிரஸ் காரியக்கமிட்டி கூட்டத்திலும், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திலும் ஸேத்ஜி கலந்து கொண்டார். காந்திஜி விரும்பியபடி கோ சம்ரக்ஷணை கைங்கர்யத்தை மேற் கொண்டது தான் நாட்டிற்கு அவரது கடைசி கடமை!

தர்ம மூர்த்தி

ஸேத் பஜாஜின் மரணம் எதிர்பாராதது: திடீரென சம்பவித்தது. சுமார் 22 வருஷ காலம் காங்கிரஸ் பொக்கிஷத்தைப் பரிபாலித்தும், காங்கிரஸ் காரியக்கமிட்டியில் ஸ்தானம் வகித்தும் வந்த ஸேத் பஜாஜ் பிரிவு நாட்டிற்கு மஹத்தான நஷ்டமாகும். வர்தாவில் ஸ்ரீ லக்ஷ்மீநாராயணர் கோவிலை ஹரிஜனங்களுக்காகக் கட்டினார்: நல்ல பணம் படைத்திருந்த போதிலும் நாட்டின் பணியில் பெரும் பகுதியைப் போக்கினார். சுக வாழ்வு வாழ்ந்து, பல போகங்களை அவர் அனுபவித் திருந்திருக்கமுடியும்: ஆனால் மக்களில் பெரும்பாலோர் அல்லல்பட்டு அவதியுறும்போது சுய நலத்தைப் பெரிதாகப் பாவிப்பது ஆத்ம திருப்தி தராது என்று கருதினார். எல்லாவற்றிற்கும் மேலாக பணக்காரர்களின் கடமையையும் அவர் சுட்டிக்காட்டினார்: செல்வத்தின் நிலையாமையை உணர்ந்து நித்ய சுகம் பெற உவப்பு கொண்டார்: சமூகந்தான் பெரிது, பணம் பெரிதல்ல என்பதை நிதர்சனப்படுத்தினார். சமூகசேவையே ஜீவியத்தின் சுகம் என்று நம்பினார். "அவர் தமக்காகக் கட்டிக்கொண்ட ஒவ்வொரு வீடும் தர்மசாலையாகத் திகழ்ந்தது" என்று மகாத்மாஜி தமது அநுதாபத்தைத் தெரிவிக்கையில் கூறியதை எவர்தான் ஆக்ஷேபிக்க முடியும்? ஆகவே அவரது வாழ்க்கை ஆச்சர்யமான ஜோதியுடன் சோபிக்கிறது! கரையேற விரும்புபவர்களுக்குக் கலங்கரை விளக்கு போல் வழிகாட்டுகிறது!

தமிழ் நூல்கள்

குழந்தைக்கட்டி	1	4
உலகரகசியம்	1	0
நவரத்னஸாகெட்	0	12
சரணாகதி சாஸ்திரம்	0	2
வர்த்தக மித்திரன்	1	8
ஸ்வராஜ்யம்	0	5
கிருஷ்ணவேணி	2	0

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை



சென்னை சர்க்காரின் புதிய தொழில் இலாகா கமிஷனர் மிஸ்டர் எப். ஆர். பார்ஸலி ஐ. ஸி. எஸ். (பி. பி.)

இந்தியாவில் சீனத் தலைவர்

★

சீனத்தலைவரான சியாங் கேய் ஷேக்கும், அவரது மனைவியும் இம்மாதம் 9-ந்தேதி மாலை புதியடில்லி வந்து சேர்ந்தனர். அவர்களது வருகை அதுவரை ரகஸ்யமாக வைக்கப்பட்டிருந்தது. வந்து சேர்ந்ததற்குப் பிறகே விஷயம் அறிவிக்கப்பட்டது.

சீனுவுக்கும் இந்தியாவிற்கும் பொதுவாக உள்ள பாதுகாப்பு பிரச்னைகளைக் குறித்து விவாதிப்பதற்காகவே அவர்கள் முக்கியமாக இங்கு வந்திருக்கின்றனர். இந்நாட்டில் அவர்கள் பல தினங்கள் தங்கியிருப்பர். சமீபத்தில் ஜெனரல் வேவல் சங்கிங்கில் நடத்திய விவாதத்தின் தொடர்ச்சியே இது என்று ஊகிக்கப்படுகிறது.

சீனுவில் முன்பு பிரிட்டிஷ் தூதராக இருந்த ஸர் ஆர்ச்சி பால்ட் கர்ரும் வந்திருக்கிறார்.

வரவேற்புப் பிரசங்கம்

வைஸ்ராய் நிர்வாகசபை மெம்பர்கள் இரவு வைஸ்ராய் மாளிகையில் தேத்தண்ணீர் அருந்துகையில் சியாங் கேயைச் சந்தித்தனர்.

சியாங் கேய் ஷேக் தம்பதிகளை வரவேற்பதற்காக வைஸ்ராய் மாளிகையில் மாலை நடந்த வைபவத்தில் மேதா வைஸ்ராய் பின்வருமறு குறிப்பிட்டார்.

மன்னர் பிரானின் பெயரால் நான் தங்களுக்கு நல்வரவு கூறுகிறேன். ஒரு உத்தமர், உத்தமி இவர்களைக் கௌரவிப்பதற்காக. இந்திய சர்க்காரின் நிர்வாக சபை மெம்பர்களும் இங்கு கூடியிருக்கின்றனர். இன்றைய சம்பவம் சரித்திரத்திலேயே மிகவும் முக்கியமானதாகும். இரண்டு பெரிய தேசங்களும் இதுவரை கொண்டாடி வந்துள்ள தோழமை இன்னும் பெருகுவதற்கு வழி தேடுவதற்காக இச்சந்திப்பு ஏற்பட்டிருக்கிறது. இவ்விரு நாட்டின் ஜனத்தொகையும் சேர்ந்து உலகில் மூன்றில் ஒரு பங்கிருக்கிறது.

சீனுவின் வீரமே எங்களுக்கு ஊக்கமளிக்கிறது. உங்களுடைய ராஜதந்திரிகளில் ஒருவர் கூறியது போல் ஆசியாவின் சுதந்தரப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்த பெருமை உங்கள் தேசத்துக்கே உரியது. இந்தப் போராட்டம் வெற்றிகரமாக நடந்து வருவதற்கு முக்கியக் காரணமாக இருப்பவர்கள் நீங்களே. எங்களாலியன்ற வரையில் நாங்கள் சீனுவுடன் ஒத்துழைப்போம்—அது எங்களுக்கு உதவி செய்வது போல்—என்று உங்களுக்கு உறுதி அளிக்கிறேன்."

சீனத்தலைவர் பதில்

சீன மக்களின் சார்பில் வந்தனம் தெரிவிக்கையில் சியாங் கேய் ஷேக் கூறியதாவது:—

உங்களையும், (வைஸ்ராயைப் பார்த்து) உங்களுடைய சர்க்காரைச் சேர்ந்த அதிகாரிகளையும், இந்தியத் தலைவர்களையும் நேரில் கண்டு பேசும் நோக்கத்துடனேயே நான் இங்கு வந்தேன். நம்மை ஆக்கிரமிப்பவர்கள் பேரில் ஒன்றுபட்டு பலமான நடவடிக்கை எடுக்க வழி காணவேண்டுமென்பதே என்னுடைய நோக்கம்.

பண்டித நேருவுடன் பேச்சு

மார்ஷல் சியாங் கேய் ஷேக் பண்டித ஜவஹர்லால் நேரு இருவரும் இம்மாதம் 10-ம் தேதி சந்தித்து சுமார் ஒன்றரை மணி நேரம் சம்பாஷித்தனர்.

ராஜீய நெருக்கடியைத் தீர்க்கும் வகையில் விவாதம் நடந்ததா என்று பத்திரிகை நிருபர்கள் பண்டித ஜவஹரைக் கேட்டபொழுது, அவர் சியாங் கேயின் விஜயத்தினல் யுத்தம் சம்பந்தமாக காங்கிரஸ் கொண்டிருக்கும் மனோபாவத்தில் எவ்வித மாறுதலும் ஏற்படுமென்று எண்ணுவதற்கில்லை யென்றும், ராஜீய விஷயங்களில் இந்தியருக்கு யோசனை கூறும் பொறுப்பை அவர் எடுத்துக் கொள்ளுவாரென எதிர் பார்ப்பது நியாயமாகாதென்றும் அவர் தெரிவித்தார்.

"ஜப்பானிய ஆக்ஷியாயினும் சரி, ஜெர்மன் ஆக்ஷியாயினும் சரி, எந்த அன்னிய ஆக்ஷியையும் இந்தியா ஏற்காது; இந்திய மக்களின் ஆக்ஷிதான் இந்தியாவிற்கு வேண்டும்" என்று 11ம் தேதி புதுடில்லி காந்தி மைதானத்தில் நடந்த மாபெரும் கூட்டத்தில் பேசுகையில் பண்டித நேரு கூறினர்.

"எந்த வல்லரசுக்கும் நாங்கள் தலைவணங்க மாட்டோம்; எத்தகைய ஆக்கிரமிப்பையும் எதிர்த்து நிற்போம்; எவ்விதப் பயமுறுத்தலுக்கும் அஞ்சோம்" என்றும் அவர் உரைத்தார்.

சியாங்கேய் ஷேக்கின் விஜயம் காரணமாக காங்கிரஸ் கொள்கையில் எவ்வித மாறுதலுமிராதென்று பண்டித ஜவஹர் திட்டமாக வெளியிட்டார்.

மறுநாள் மாலை சியாங்கையை பண்டித நேருவும் மௌலானா ஆஸாதும் கண்டு இரண்டுமணி நேரம் சம்பாஷித்தனர், இதற்கப்புறம் இதுவரை பண்டித நேருவும் சீனத்தலைவரும் நான்குவிசை சந்தித்துப் பேசினர்.

மாதர்வரவேற்பு

டில்லியில் தங்கியிருக்கும் ஸ்ரீமதி சியாங்கேய் ஷேக் இம்மாதம் 12-ந் தேதி முதல்முதலாகப்பொது வைபவமொன்றில் கலந்து கொண்டார். அகில இந்திய ஸ்திரீகள் மகாநாட்டினர் அவருக்கு அன்று ஒரு உபசாரம்



லேடி லின்லித்கோவுடன்

மார்ஷல் சியாங்கே ஷேக்கும் மே. த. லேடி லின்லித்கோவும் வைஸ்ராய் மாளிகைத் தோட்டத்தில் சம்பாஷித்துக்கொண்டே நடந்து போகின்றனர்.

நடத்தினர். ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிதர் தலைமை வகித்தார்.

ஸ்ரீமதி சியாங்கேய் ஷேக்கை வரவேற்கையில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் பின்கண்டபடி குறிப்பிட்டார்.

சுதந்திரத்திலும் சரி, சிநேகத்திலும் சரி இந்தியாவும் சீனுவும் ஒன்றுபட்டேயிருக்கும். இது இரு நாடுகளுக்கும் நன்மையானது; ஆசியாவுக்கும் நல்லது. சுதந்திரப் போராட்டத்தில் சீன மாதர் ஆழ்ந்த சிரத்தை கொண்டுள்ளதை நாங்கள் கவனித்து வந்திருக்கிறோம்.

யுத்தம் எங்கள் வாசலை அண்டிவிட்டதை நாங்கள் உணர்கிறோம். போர் புரிய வேண்டுமென்பதே எங்கள் விருப்பம்; ஆனால் ஏதாவதொன்றிற்காகத்தானே நாங்கள் போராட முடியும்? நாங்கள் சுதந்திரத்துக்காகப் போராட எங்களுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டும். இந்திய சரித்திரத்தில் வீரத்துக்குக் குறைவே இல்லை. ஆகவே அத்தகைய வீரத்தை இப்பொழுதும் காட்டுவதற்கு இடமிருக்க வேண்டும். சுதந்திர மக்களாகச் சண்டையிட்டு, எங்களைக் காத்துக் கொள்ள உரிமை வேண்டுமென்றே நாங்கள் கோருகிறோம். கிராம மக்களுடன் தொடர்பு கொள்ளவே நாங்கள் இப்பொழுது உழைத்து வருகிறோம்.

உபசாரத்துக்குப் பதிலளிக்கையில் ஸ்ரீமதி சியாங்கேய்ஷேக் பின் கண்ட விதம் கூறினர்:—

ஆசியாவின் பொருளாதார சமூக அமைப்புக்கு சீனுவும், இந்தியாவும் ஆதாரமாக இருக்கின்றன. உலகில் ஜனநாயகம் தழைப்பதற்காக இவ்விரு நாடுகளும் உழைத்து வருகின்றன.

எல்லைப்புற விஜயம்

சியாங்கேய்ஷேக் 13-ந் தேதி பகல் 1 மணிக்கு பெஷாவர் விமானக்கூடம் போய்ச் சேர்ந்தார். கவர்னரும், ஜில்லா அதிகாரியும், விமானக்கூட அதிகாரியும், பெஷாவர் டெபுடி கமிஷனரும் அவரை வரவேற்றனர்.

மாலையில் சியாங் கைபர் கணவாயிலுள்ள அரண்களைப் பார்வையிட்டார். அப்ரிதி ஜாதியினரின் உபசாரத்துக்குப் பதிலளிக்கையில் சியாங்கேய் சீன பாஷையில் பேசி அவர்களது மனமார்ந்த சகாயத்தைக் கோரினர்.

கல்கத்தாவுக்குப் புறப்பாடு

சியாங்கேஷேக் தம்பதிகள் 17-ம் தேதி கல்கத்தா புறப்பட்டுச் சென்றனர். அங்கு ஜனுப் ஜின்னுவைச் சந்தித்துப் பேசினர். மகாத்மாகாந்திஜியும் அவர்களைச் சந்திப்பார் என்று தெரிகிறது, மகாத்மாவும் கல்கத்தா புறப்பட்டுச் சென்றுர். பண்டித நேருவும் கல்கத்தா போய் விட்டார்.

தந்திக்குப் பதில்

சியாங்கேஷேக் தம்பதிகளை சென்னைக்கு வரவேண்டுமென்றுகோரி சென்னை வாசிகள் கூட்டம் கூட்டப்பட்டு வேண்டுகோள் அனுப்பப்பட்டதற்கு, அவர் அவகாசமின்மையால் வர இயலாது என்று ஸ்ரீ எஸ். சத்தியமூர்த்திக்கு அறிவித்துவிட்டார்.

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

இந்திரநாதன் ஸ்ரீ காந்தனைவிட வயதில் பெரியவன். ஸ்ரீ காந்தனுக்கு அவனுடைய சிநேகத்தை சம்பாதிக்க அதிக ஆவல். இந்திரனுக்கும் ஸ்ரீகாந்தனுக்கும் தொடர்பு ஏற்பட்டது. இவ்விருவர்களும் தங்களது இளமைப் பருவத்தை மிகவும் துணிகரமாகவும் நிர்ப்பயமாகவும் சாதித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கின்றனர். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தனுக்கு அவனது பழைய நண்பனை ஜமீன்தாரிடமிருந்து அழைப்புவருகிறது. அங்கு அவன் நடனம் செய்யும் பியாரியைச் சந்திக்கிறன். பியாரிக்குஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்புகிறன்: வழியில் ஒரு சந்யாஸியை அவன் அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறன். ஸ்ரீகாந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறள். பியாரி ஸ்ரீகாந்தனை தன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல, அங்கிருந்து சொஸ்தமான பின் அவன் கிளம்புகிறன். ஒரு நாள் விவாக சம்பந்தமாக ஒரு கடிதம் கிடைக்க, அதை எடுத்துக் கொண்டு அவன் கிளம்பி முடிவில் பியாரி வீட்டிற்குப் போய் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறன். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடைபெற்று கப்பலேறிக் கிளம்புகிறன். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறன். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிறன். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறன். அவர்கள் இருவருக்குமிடையே ரசமான சம்பாஷணை நடக்கிறது. சில தினங்களுக்கப்புறம் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனோநிலை வேறுபடுகிறது

எனக்குத் தகவல் சொல்லுவதற்காக ராஜலக்ஷ்மி அதே அலங்காரத்துடன் என் அறையில் நுழைந்தாள்.

நான் தாவி எழுந்து வலது கையை அவள் முன்பு நீட்டி தமாஷான குரலில் "அடி பாஷண்டரோஹிணி, உனக்குக் கோவிந்த லாலைத் தெரியாதா? (பங்கிம் சந்திரரின்விஷ விருக்ஷத்தில் இரண்டு பாத்திரங்கள்,) ஆஹா என் கையில் இப்பொழுது துப்பாக்கியாவது கத்தியாவது இருக்கவேண்டும்!" என்றேன்.

ராஜலக்ஷ்மி வரண்ட குரலில் "இருந்தால் என்ன செய்வாய்—கொலையா?" என்றுள்.

நான் சிரித்துக்கொண்டே "இல்லையம்மா பாயிஜி, எனக்கு அவ்வளவு நவாப் சாகசம் கிடையாது. மேலும் இந்த இருபது நூற்றுண்டுகளில் வாழ்க்கையில் ஏற்படும் ஆனந்தத்தின் மார்க்கத்தைத் தடைசெய்யும் கடும் சித்தம் படைத்த ராக்ஷசன் எவன் இருந்திருக்கிறன்? பாயிஜி பாயிஜி என்ற வார்த்தைக்கு நாட்டியக்காரி என்று பொருள். குல ராணியே! உன்னை ஆசீர்வாதம் செய்கிறேன். நீ வெகு காலம ஜீவித்திரு! உன்னுடைய அழகு மூன்று லோகங்களையும் ஜயிப்பதாக இருக்கட்டும்! உன் குரல் வீணையைப் பழிக்கட்டும்! உன்னுடைய இரண்டு பாதங்களின் நிருத்தியம் ஊர்வசியையும் திலோத்தமையையும் கர்வ பங்கம் செய்யட்டும்! நான் விலகி நின்றுகொண்டு உனக்கு ஜயகோஷம் செய்து தன்யனுகிறேன்" என்றேன்.

"இந்த வார்த்தைகளுக்கெல்லாம் என்ன அர்த்தம்?" என்று ராஜலக்ஷ்மி கேட்டாள்.

"அர்த்தம் அனர்த்தம்தான்! அது கிடக்கட்டும்,நான் இப்பொழுதே ஒரு வண்டியில் புறப்படுகிறேன். இப்பொழுது வங்காளிகளுக்குப் பிரயாகையைக் காட்டிலும் மேலான தீர்த்தம். உத்தியோகஸ்தானம் அதாவது பர்மா! இனிமேல் எப்பொழுது சந்தர்ப்பப்படுகிறதோ அப்பொழுது சந்திப்போம்."

"நான் எங்கே போயிருந்தேன். என்பதைக் கேட்க உனக்கு அவசியமென்று தோன்றவில்லையா?"

"இல்லை, அநேகமாக இல்லை."

"இந்த சாக்கு கிடைத்தது என்று நீ ஒரே அடியாகக் கிளம்புகிறயாக்கும்?"

"இந்த நிலைமையில் என்னல் ஒன்றும் சொல்ல முடியவில்லை. இந்தப் பெரும் சிக்கலில் இருந்து விடுபட்டுப் போனல் பிறகு முடியுமோ என்னமோ!"

ராஜலக்ஷ்மி சிறிது நேரம் மௌனமாக நின்று கொண்டிருந்து விட்டு "நீ என்ன உன் இஷ்டம் போல் என்னை அவமானம் செய்ய முடியுமோ?" என்று கேட்டாள்.

"இஷ்டம் போலா! ஒரு காலுமில்லை. தெரிந்தோ தெரியாமலோ, எப்பொழுதாவது லவலேசம் நான் தப்பாக நடந்து கொண்டிருந்தாலும் நீ அதற்காக என்னை மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்!"

"அப்படியானல் இன்றிரவே நீ புறப்படவேண்டுமா?"

"ஆமாம்!"

"ஒரு பிசகும் செய்யாத பொழுது நீ எனக்குத் தண்டனை விதிக்க அதிகாரம் இருக்கிறதா?"

"இல்லை, எள்ளளவும் கிடையாது. ஆனல் நான் போவதையே நீ தண்டனையாகக் கருதினல் எனக்கு நிச்சயம் அதிகாரமிருக்கிறது!"

அவள் உடனே பதில் சொல்லவில்லை. மௌனமாகச் சிறிது நேரம் என் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு "நான் எங்கே போயிருந்தேன், எதற்காகப் போயிருந்தேன், என்பதைக் கேட்க மாட்டாயா?" என்று கேட்டாள்.

"மாட்டேன்! என்னைக் கேட்டுக்கொண்டா போனய், திரும்பி வந்ததும் என்ன தகவல் என்று நான் கேட்பதற்கு? மேலும் அதைக் கேட்பதற்கு இது சமயமும் இல்லை, எனக்கு விருப்பமுமில்லை."

ராஜலக்ஷ்மி அடிபட்ட சர்ப்பம் போலச் சீறிநின்று "எனக்கும் இனிமேல் சொல்ல வேண்டும் என்ற விருப்பம் இல்லை. எங்காவது போவதற்கும் போகாததற்கும் உத்திரவு பெற நான் யாரிடமும் கட்டுப்படவில்லை. சரி போகவேண்டுமானல் போ!" என்று சொல்லி விட்டு அவளுடைய அழகாலும் அலங்காரத்தாலும் ஒரு அலையைக் கிளப்பி விட்டு விட்டு வேகமாக அறையை விட்டு வெளியே போய்விட்டாள்.

வண்டி கூப்பிடுவதற்காகப் போனேன்; ஒரு மணி நேரம் கழித்து வீட்டு வாசலில் வண்டி வந்து நிற்கும் சப்தத்தை கேட்டு பெட்டியைக் கையில் எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். ராஜலக்ஷ்மி வந்து பின்னல் நின்றுள்.

"இது என்ன குழந்தை விளையாட்டு என்று நீ நினைத்துக் கொண்டிருக்கிறயா? நீ என்னை இங்கே தனியாக விட்டு விட்டுப் போனல் வேலைக்காரர்கள் எல்லோரும் என்ன நினைப்பார்கள்? இவர்கள் முன்பு நான் முகத்தை காட்டும்படி நீ என்னை வைக்க மாட்டாயா?"

நான் திரும்பி நின்று கொண்டு "வேலைக்காரர்களுக்கு நீ பதில் சொல்லிக்கொள். எனக்கும்



சென்னை புஷ்பக் காட்சி விழா

தேனும் பேட்டையில் இவ்வருஷம் நடந்த புஷ்பக் காட்சியில் பரிசுகளை லேடி ஹோப் வழங்கினுர். ஸ்ரீ வி. ஆர். ராமநாதய்யர் தம்பதி, ஜஸ்டிஸ் மிஸ்டர் வாட்ஸ்வர்த், மிஸ்டர் ப்ளாட்ஸ் முதலியவர்களை படத்தில் காணலாம் (எச். எச். பி. எஸ்)

அவர்களுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை'' என்றேன்.

''இருக்கவேண்டாம். சரி திரும்பிப் போய் பங்குவுக்கு நான் என்ன ஜவாப் சொல்வேன்?''

''அவர் மேற்கே சுற்றுப் பிரயாணம் போய்விட்டார் என்று சொல்லேன்!''

''அதை யாராவது எங்கேயாவது நம்புவார்களா?''

''எந்தமாதிரி சொன்னுல் நம்புவார்களோ அந்த மாதிரிக் கற்பனை செய்து சொல்''

ராஜலக்ஷ்மி கணநேரம் மௌனமாக இருந்துவிட்டு ''நான் ஏதாவது ஒரு பிசகு செய்திருந்தால் தான் அதை நீ மன்னித்து விடக்கூடாதா? நீ என்னை மன்னிக்காவிட்டால் வேறு யார் மன்னிப்பார்கள்?'' என்ருள்.

''பியாரி, நீ எனக்கு ஏதோ அடிமை போலப் பேசுகிருய்? உன் வாயில் இதெல்லாம் வரக்கூடாது.''

இந்த அடிக்கு உடனே யாதொரு பதிலும் சொல்ல முடியாமல் ராஜலக்ஷ்மி முகம் சிவந்து போய் நின்றுகொண்டிருந்தாள். என்னை எப்படியாவது சமாதானப்படுத்த வேண்டும் என்று அவள் வெகு பாடுபட்டாள் என்று எனக்குத் தெரிந்தது; வெளியிலிருந்து வண்டிக்காரன் 'தாமதமாகிறது' என்று கத்தினுன்.

நான் மௌனமாக பெட்டியுடன் புறப்பட்டபொழுது ராஜலக்ஷ்மி தொப்பென்று என் காலடியில் உட்கார்ந்து கண்ணீர் அடைத்த குரலில் ''நான் உண்மையாகவே ஒரு பிசகும் செய்திருக்க முடியாது. அப்படிச் செய்திருந்தாலும் தண்டனை கொடுக்க வேண்டுமானுல் உன் கையாலேயே கொடு. ஆனுல் இந்த ஒரு வீட்டுக் கும்பல் முன்னிலையில் என் மானத்தை வாங்காதே. நீ இன்று எப்படியும் போய்த் தான் தீருவேன் என்ருயானுல் நான் யார் முன்னிலையிலும் இனிமேல் தலை தூக்க முடியாது!'' என்ருள்.

கையிலிருந்த பெட்டியை வைத்து விட்டு அருகிலிருந்த திண்ணை மேல் உட்கார்ந்து ''நல்லது இன்று கடைசி தடவையாக உனக்கும் எனக்கும் சமாதானம் ஏற்படுகிறது உன்னுடைய இன்றைய நடத்தையை மன்னிக்கிறேன். ஆனுல் நான் வெகுவாக யோசித்துப் பார்த்து விட்டேன். நாம் இருவரும் இனி சந்திப்பது என்பது நடைபெருது!'' என்றேன்.

ராஜலக்ஷ்மி வேதனை நிரம்பிய தன் முகத்தை என் முகத்தின் பக்கம் திருப்பி ''ஏன்?'' என்று கேட்டாள்.

''மனதிற்கேற்காத உண்மையை நீ தாங்குவாயா?''

அவள் தலையை அசைத்துத் தெளிவில்லாத குரலில் ''தாங்குவேன்!'' என்ருள்.

ஆனுல் ஒரு மனிதன் வேதனை எவ்வளவு இருந்தாலும் பொறுத்துக்கொண்டிருந்துவிட முடியும். வேதனையைக் கொடுப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமில்லை.

நான் வெகு நேரம் ஸ்தம்பித்துப் போய் யோசனையில் ஆழ்ந்திருந்தேன். ஆனுல் இன்று எந்தக் காரணத்தைக் கொண்டும் என் தீர்மானத்தைக் கைவிடக்கூடாது என்று ஸ்திரம் செய்து கொண்டேன். ஆகையால் கடைசியில் மெதுவாக ''லக்ஷ்மி, உன்னுடைய இன்றய நடத்தையை மன்னிப்பது என்பது வெகு கடினமானுலும் நான் மன்னித்து விடுகிறேன். ஆனுல் நீ இந்த ஆசையைக் கொஞ்சங்கூடவிட்டு விட முடியாது. உன்னுடைய பெருத்த பணம் அநேக உருவமும் குணங்களும் கொண்டது. பலர் பேரில் நீ எல்லையற்ற ஆட்சி பெற்றிருக்கிருய். வாழ்க்கையில் அவர்களைக் காட்டிலும் மேலாக விரும்பக்கூடிய வஸ்துக்கள் வேறெதுவும் இல்லை. நீ என்னைக் காதலிக்கலாம், என்னிடத்தில் சிரத்தை காட்டலாம், எனக்காகப் பல துன்பங்களை அனுபவித்திருக்கலாம்-ஆனுல் மோகத்தை உன்னுல் கொஞ்சங்கூட விட்டொழிக்க முடியாது!'' என்றேன்.

ராஜலக்ஷ்மி மிருதுவான குரலில் ''அதாவது நடு நடுவே நான் இந்த மாதிரி காரியத்தைச் செய்து கொண்டே இருப்பேன் என்கிருய்?'' என்ருள்

பதிலுக்கு நான் மௌனமாக இருந்து விட்டேன். அவளும் சிறிது நேரம் சும்மா இருந்துவிட்டு ''அப்புறம்'' என்ருள்.

''அதற்கப்புறம் ஒரு நாள் பொம்மை வீட்டைப்போல் எல்லாம் தகர்ந்து விழும். அன்று அந்த ஈனத்தன்மை ஏற்படுவதைக் காட்டிலும் இன்றே எனக்குக் கடைசி முறையாக நீ விடையளித்துப் போகச் சொல்வது மேல், உன்னிடம் நான் வேண்டுவது இது தான்.''

ராஜலக்ஷ்மி வெகுநேரம் தலை குனிந்து கொண்டு வாய்திறவாமல் உட்கார்ந்திருந்தாள். பிறகு அவள் தலை நிமிர்ந்தபொழுது அவள் கண்களில் கண்ணீர் தாரை தாரையாகப் பெருகியதைக் கண்டேன். அதை புடவையால் துடைத்துக் கொண்டு ''உனக்காக நான் ஒரு காலும் ஒன்றும் ஒருசிறுகாரியமும் செய்யமுயலக் கூடாதோ?'' என்ருள்.

தடையற்றுப் பெருகின அந்தக் கண்ணீர்ப் பெருக்கு என்னுடைய அடக்கி வைத்திருந்த உணர்ச்சியின் கரையை உடைத்து விட்டது. ஆனுல் நான் அதைக் கொஞ்சங்கூட வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை, சாந்தமாகவும் திடமாகவும் ''முடியாது. ஒரு நாளும் முடியாது.'' சுயமாக நீயே சிறியவளல்ல, சிறு காரியத்தை நீ உனக்கே செய்துகொள்ள முடியாது. பிறருக்குச் செய்து செய்து கொடுக்கவும் முடியாது. என்று சொல்லிவிட்டுச் சற்று நிறுத்தி மறுபடியும் ''ஆனுல் உலகத்தில் உன்னை ராஜலக்ஷ்மி என்ருல் அடையாளம் கண்டு கொள்ள மாட்டார்கள். பாட்னுவின் பிரசித்திபெற்ற பியாரி பாய்ஜி என்று தான் வழங்குவார்கள், அப்பொழுது வாழ்க்கையின் கணமுன் நான் எவ்வளவு சிறுமை கொண்டவனுகி விடுவேன் என்பதை உன்னுல் நினைத்துப் பார்க்கமுடியுமா? அதை நீ எப்படித் தடுப்பாய்? சொல், பார்ப்போம்?'' என்றேன்.

ராஜலக்ஷ்மி ஒரு நீண்ட பெருமூச்சுவிட்ட வண்ணம் ''ஆனுல் அதற்காக உண்மை எப்பொழுதாவது சிறுமைப்பட்டுப் போகுமா?'' என்ருள்.

''கடவுள் முன்னிலையில் ஆகாதுதான்! ஆனுல் வாழ்க்கைக்கு தவனிக்கக்கூடாத விஷயமே இல்லை, லக்ஷ்மி.''

''அப்படியானுல் ஊராரின் கண்களை எல்லாவற்றிற்கும் மேலாகக் கருதுவதா?''

''ஒரு முறையில் நீ சொல்லுவது சரி. அந்தப் பார்வை எப்பொழுதும்படுகிறதில்லை, வாழ்க்கையில் பத்து பேர் சேர்ந்து ஒன்றைப்பார்த்தால் அது கடவுளுடைய பார்வை போன்றது. ராஜலக்ஷ்மி அதை ஏற்றுக் கொள்ள மறுப்பது பிசகு''

''அந்த பயத்தில் நீ இந்த வாழ்நாள் பூராவும் என்னைக் கைவிட்டுவிட்டுப் போகவேண்டுமாக்கும்?''

''மறுபடி சந்திப்போம். நீ எங்கும் போகாவிட்டால் பர்மா போவதற்கு முன்பு சந்திப்போம்.''

ராஜலக்ஷ்மி வெகு வேகமாகத் தலையை ஆட்டிக் கண்ணீர் நிறைந்த குரலில் ''போகவேண்டுமானுல் போ! ஆனுல் நீ என்னை நன்ருக அறிந்து கொள்ளவில்லை. ஆனுல் என்னைக் காட்டிலும் அதிகமான பற்றுடையவர்கள் யாரும் உனக்குக்கிடையாது. என்னை நீ விட்டு விட்டுப் போவதென்பது, பத்து பேர் பார்வைக்காக, தர்மம் என்பதை நான் ஒப்புக்கொள்ளவே மாட்டேன்'' என்று சொல்லி வேகமாக வெளியே போய்விட்டாள்.

கடிகாரத்தை எடுத்துப் பார்த்தேன், அப்பொழுதும் சாவகாசம் இருந்தது. அப்பொழுதும் ஒரு வண்டியைப் பிடிக்கலாம். பேசாமல் பெட்டியை எடுத்துக் கொண்டு வேகமாகக் கீழே இறங்கிப்போய் வண்டியில் ஏறிக்கொண்டேன்.

இனும் கொடுப்பேன் என்ற ஆத்திரத்தில் வண்டிக்காரன் வெகு வேகமாக வண்டியை

ரூ. 60,000 பெருமானமுள்ள ஆபரணங்கள் வழங்கப்பட்டன

உலகின் எட்டாவது அதிசயம். அமெரிக்கன் நியூ கோல்டு எங்கள் சிருஷ்டி. அது இந்தியா பூராவும் பிரபல்யம் அடைந்துவிட்டது. அதற்கு அறிமுகமே தேவையில்லை. பத்திரிகைகளும், பொது மக்களும் அதை எங்கும் புகழ்கிருர்கள். அதன் கெமிகல் நிறம் எப்பொழுதும் தங்க நிறமாகவே இருக்கிறது. இந்தத் தங்கத்தைக்கொண்டு நீங்கள் சிறந்த ஆபரணங்களை செய்து கொள்ளலாம்.

இந்த அமெரிக்கன் நியூ கோல்டை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் ஒரு சாம்பிள் செட் விநியோகம் செய்ய நாங்கள்நிச்சயித்துள்ளோம்.

இந்த செட்டில் உண்மையான அமெரிக்கன் நியூகோல்டு 6 தோலாவும். ஒரு ஜதை புது மோஸ்தர் வளையல்களும் ஒரு ஜதை மூக்குத்திகளும் 2 பம்பாய் மோஸ்தர் மோதிரங்களும், ஒரு ஜதை தோடுகளும் இருக்கும்.

AMERICAN NEW GOLD WORKS, P.O.Box 54,(S.M.M.)Amritsar.

(B. P. S.)

ஆயுர்வேத வித்வான் B V. பண்டிட் அவர்களால் தயாரிக்கப்பட்ட

வியாதி விபரம் ஸ்டாம்புடன் எழுதுக) (உதவி வைத்தியர் Dr. P.S.C. மணி

சோல் ஏஜண்ட்ஸ்:-யுனைடேட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதருஸ்.

'ஒன்றை நினைக்கின்...'

★

ஸ்ரீ வி. ஸி. கோபாலரத்னம்

ஜகன் மோகன் நாயடு வருகிருர்

ஜக:—Good morning (குட் மார்னிங்) How are you? (எப்படி இருக்கிறீங்க?) What? (என்ன?) தெரிலே

(நாற்காலியை இழுத்துக் கொண்டே உட்காருகிருர்)

ஆத்:—Of course! ஆம்! Why not?... (தெரியாதென்ன?) ஹி! ஹி!! எங்கேந்து இப்போ?

ஜக:—ஸ்டேஷன் லேந்து நேரா...டிரெயின் அரை மணி முன்னதான் வந்தது... ...இல்லை நீங்க என்னை மறந்துட்டீங்க. சொன்னு தெரியும் பொய்யூர் ஜமீன்தார் ஏஜண்ட் இல்லையா நான். நீங்க அங்க டிஸ்டிரிக்ட் முன்ஸிபா இருக்கச்சே டிஸ்ரிக்ட் ஜட்ஜ் சர்வோத்தமராவ் கோர்ட்டிலே அந்த பெரிய Adoption case (ஸ்விகார வழக்கு) நான் நடத்திண்டு இருந்தேனே.

ஆத்:—ஆமா மாம்; அதான் Remember (ஞாபகம்) பண்ண Try (முயற்சி) பண்ணீண்டிருந்தேன். அந்த கேஸ் Finish (முடிவு) ஆச்சா இல்லையா இன்னும்?

ஜக:—ஆச்சு! ஆச்சு! கடைசி வரைக்கும் அனுகூலமாய் இருந்தார் ஜட்ஜ்...Judgment reserve (தீர்ப்பு ரிஸர்வ்) பண்ணிட்டு போய் அடுத்த நாளே 1500 பக்கம் டைப் அடிச்ச Judgement (தீர்ப்பு) படிச்சாரு. 6-மாசம் நடந்த கேஸு 112 Witnesses evidence......(சாக்ஷி வாக்கு மூலம்) Big big leaders from Madras argued for three weeks (சென்னையிலிருந்து பெரிய பெரியவா வந்து 3 வாரம் பேசினு!) அதென்னுங்க! எப்படி Possible? (முடியும்) ...போவட்டும்...அப்பீல் கோர்ட்டு இருக்குது...அதெப்பத்தி ஒரு கதைகூட உண்டு. அதை இப்ப வாணும். அப்பரம் சொல்றேன். நேத்து இராவுக்குதான் நானும் ஜமீந்தாரும் பேசிகிட்டு இருக்கச்சொல்ல நம்ப old (பழைய) நாஜிர் சுந்தரப்பிள்ளை சொல்லிச்சி. நீங்க மதராஸ்லே ப்ராக்டிஸ் பண்ணிகிட்டுஇறங்கோன்னு, அட்ரஸ் குடுடா பாவீன்னு, அப்பவே எழுதி வாங்கிகின்னு அச்சுகட்டிகினு அவசரம் அவசரமா ஓடிவந்து ஜங்ஷன்லே டிரெயினைப் பிடிச்சேன். அப்பீலுக்கு ஒங்களைத்தான் எங்கேஜ் பண்ணனும்னு ஜமீந்தார் சொல்லீட்டாரு. அதுவும் நீங்க அங்கே இருக்கச்சே அந்த ஊர் வக்கீல்களெல்லாம் கதறவடிச்சீங்களே, மறக்குமா எங்களுக்கு? ஒரு வேளை எதிர்கட்சிக்காரர் வந்து Retainer (முன் பணம்) கொடுத்துடு வாங்களோன்னு பயந்தார் ஜமீந்தாரு...நல்ல வேளையா......

ஆத்:—வரதாச்சாரி, டைரியைப் பாரு...யாரனு நமக்கு Retainer (முன் பணம்) அனுப்பிச்சிருக்காளான்னு.

வரத:-(பார்ப்பதுபோல் செய்து) ஆமாம். நேத்து சாயங்காலம் தான் ரிஜிஸ்டர்ட் போஸ்ட்லே 5000 ரூபா நோட்டா வந்து இருக்குது! நாம் இன்னும் Accept (சம்மதம்) பண்ணிக்கலே.

ஜக:— அதைத் திருப்பி அனுப்பிச்சுடுங்க. நான் இதோ wire (தந்தி) அனுப்பி விடரேன்... 10,000 Retainer (முன் பணம்) கொடுக்கணும்னு. By the way (அதிருக்கட்டும்) ஒரு accident (விபத்து) ஆய்போச்சி, டிரெயின்லேந்து எறங்கி வந்தேனு...ஒரு டாக்ஸி வெச்சுண்டு நேற இங்க ஓட்டச் சொன்னேன். வழியிலே மாடர்ன் ஹோட்டல்லே ஒரு நிமிஷம் எறங்கி பல் வெளிக்கிகிண்டு சோட்டா சாப்டுட்டுவந்து பாத்தா டாக்ஸி காணும் Casepapers (கேஸ் கட்டுகள்) Cash box (பணப்பெட்டி) வண்டிலேயே இருக்குது. சாப்ட டிபனுக்குக்கொடுக்கக்கூட சில்லரை இல்லை.

ஆத்:—பெட்டிலே ரொம்ப Money (பணம்) இருந்துதோ?

ஜக:— Oh! No! (இல்லை) Very much (ரொம்ப ஜாஸ்தியில்லை)...இன்னிக்கெல்லாம் இருந்தா ஒரு Thousand chips (ஆயிரம் ரூபா) இருக்கும் I dont mind the money (எனக்கு பணத்தைப்பற்றி அக்கரையில்லை) போனு போவுது... Papers (கட்டுகள்) பத்தி தான் I am worried (எனக்கு விசாரம்)

ஆத்:—டிரைவர் நிச்சயமா ஆப்பிடுவான்; கார் நம்பர் என்ன தெரியுமா?

ஜக:—அது தெரிந்தா என்ன கஷ்டம்.

ஆத்:—Then what to do? (அப்புறம் என்ன பண்ணரது?)

ஜக:—Money (பணம்) பத்தி Trouble (உபத்திரவம்) இல்லை. ஒரு Wire (தந்தி) கொடுத்தா ஜமீந்தார் கிட்டேந்து எவ்வளவோனு வந்துடும். இன்னொரு செட்டு Papers (கட்டு) வரத்துக்கு ஏற்பாடு பண்ணனுமே, அதான் கஷ்டம்.

ஆத்:—அது பெரிய Difficulty (கஷ்டம்) ஆச்சே.

ஜக:—சரி, இதோ ஒடனே பணத்துக்கு Wire (தந்தி) சேஞ்சூடரேன். Police help (போலீஸ் உதவி) லே Papers (கட்டுகள்) இரண்டு நாளைக்குள்ளே ஆப்படாத போரதா! ஆனு Papers (கட்டு) விஷயமா தந்தி அடிக்கறதுலே எனக்கு இஷ்டமில்லை. ஜமீந்தார் காப்ரா ஆய்பூடுவார். வேணும்னு நானே நேராபோய் ஒருவாரத்துலே Complete set (புதுகட்டுகள் பூராவும்) புதுசா கொணுந்துடலாம்.

ஆத்:—அதுக்கு Time (அவகாசம்) இருக்குதா?

ஜக:—வேண்டிய Time (அவகாசம்) Judgment Copy (தீர்ப்புப்பிரதி) வந்து 2 நாள் தானே ஆச்சு!

ஆத்:—என்ன daring? (தைர்யம்) ஸார், ரொம்ப caring (துணிச்சல்) அந்த டிரைவராவது அடையாளம் தெரியுமா...

ஜக:—சொல்லரதுக்கில்லை. ஆனு ஒடனே போலீஸுக்கு கம்ப்ளைண்ட் பண்ணி வைச்சூடணும்.

ஆத்:—ஆமாம். இது உடனே செய்துடணும்.

ஜக:—மறுபடியும் ராத்திரி வந்து பார்க்கரேன் ஒங்களை. எப்ப வருவீங்க? ஒன்பதுக்கா? சரி. (திரும்பிவந்து) By the by (ஒரு விஷயம்) அடடா மறந்தே, மறந்துட்டேனே...ஒரு பத்துரூபா இருந்தா கொடுங்கோ...Telegram (தந்தி) அடிக்கக் கூட Money (பணம்) இல்லை...கையிலே காலணா காசுகூட இல்லாமே திண்டாட்டமா போச்சு பாருங்க! ஹி! ஹி!! ஹி!!!

ஆத்:—ஆடே டே. How unfortunate (என்ன துரருஷ்டம்) என் கையிலே இந்த சமயத்திலே Loose change (சில்லரை) கொஞ்சம்கூட இல்லையே!

தூங்கியெழுந்தது முதற்கொண்டே வக்கீல் ஸ்ரீ ஆத்மாராம ராவுக்கு ஆரம்பித்தது தொந்திரவு: பாவம்! எடுத்ததெல்லாம் சங்கடம் தான்! வேலைக்கார நாதமுனியுடன் முதலில் தகராறு: அவரிடம் வேலை செய்தது போதும் என்று அவன் கிளம்புகிறன்: அடுத்தபடி தர்மபத்தினி காட்டும் கோபம்: குமாஸ்தா வரதாச்சாரியும் கக்ஷிக்கார செட்டியாரும் வக்கீலை எக்கச்சக்கமான நிலைமையில் வீழ்த்துகின்றனர்! அது வக்கீலைப் பார்க்க வந்த தேசசேவிகைகளுக்கு அநுகூலமாகிறது: ஸ்திரீகளிடம் பொய் சொல்லித் தப்பப் பார்க்கிறர்: விட்டால் தானே தப்ப முடியும்! முடிவு ஓரே விபரீதம்தான். முதலுக்கே மோசம் வருகிறது. கடனுக வாங்கி வந்த கைகடிகாரமும் கையைவிட்டுப் போய்விடுகிறது. அதைக் கடன்கொடுத்த சாவுகாரிடமிருந்து ஒளிகிறர் ஸ்ரீமான் ராவ். இந்த சந்தர்ப்பத்தில் ஜகன் மோகன் நாயுடு வந்து, பெரிய பேச்சு பேசி, வக்கீல் கையிலிருந்த சில்லரைச் சொச்சத்தையும் ஸ்வீகரித்துக்கொண்டு போய்விடுகிறர். குஞ்சிதபாதமய்யர் வரும் போது வக்கீல் ரொம்ப தடபுடல் பண்ணுகிறர்; ஆர்ப்பாட்டத்திற்குக் குறைவில்லை!

ஸ்டேஷனுக்கு ஓட்டிக்கொண்டு போனுன். ஆனுல் அதே நிமிஷம மேற்கத்திய வண்டி. பிளாட்பாரத்தை விட்டு வெளியே போய்விட்டது. அறை மணிக்கப்புறம் ஒரு வண்டி கல்கத்தாவுக்குப் போவதாகக் கேள்விப்பட்டேன். அதே நல்லது என்று திர்மானித்தேன். கிராமத்துப் பக்கம் போய் வெகு நாளாகிறது. அந்தக் காட்டில் போய் லீவின் பாக்கி நாட்களைக் கழிக்கலாம் என்று நினைத்தேன்.

எனவே மேற்கே போவதற்குப் பதிலாகக் கிழக்கே போகும் வண்டிக்கு டிக்கட் வாங்கிக்கொண்டு அறை மணிக்குப் பிறகு காசியை விட்டுப் புறப்பட்டேன்.

வெகு நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் பிற்பகல் வேளையில் கிராமத்திற்குப் போனேன். எங்கள் வீடு அப்பொழுது எனக்கு வேண்டியவர்கள், அவர்களுக்கு வேண்டியவர்கள் எல்லோராலும் நிறைந்திருந்தது. வீட்டில் மூட்டையை வைக்கக்கூட இடமில்லை. நான் எதிர்பாராமல் அங்கே வந்ததையும் அங்கே வசிக்கப் போகும் உத்தேசத்தையும் கேட்டு ஆனந்தத்தால் முகம் விழுந்து போய் அவர்கள் "ஆஹா! எவ்வளவு நேர்த்தி? எவ்வளவு சந்தோஷமான செய்தி! இந்தத் தடவை கலியாணம் செய்துகொண்டு சம்சாரி ஆகிவிடு ஸ்ரீகாந்தா! நாங்கள் கண் குளிரப் பார்க்கிறோம்!" என்றார்கள்.

"அதற்காகத் தான் வந்திருக்கிறேன். அதிருக்கட்டும், இப்பொழுது எனது தாயாரின் அறையைக் காலி செய்து கொடுங்கள், கைகால்களை அலம்பிக்கொண்டு கொஞ்சம் படுத்துக்கொள்கிறேன்" என்றேன்.

என்னுடைய தகப்பனாரின் அத்தை மகள் ஒருவள் புருஷனுடனும் குழந்தைகளுடனும், அங்கே கொஞ்ச நாளாக வசித்துக் கொண்டிருந்தாள். அவள் வந்து "அது நன்றாக இல்லையே!" என்றாள்.

"சரி, சரி, அப்படியானுல் நான வெளி அறையில் இருக்கிறேன்" என்றேன்.

அங்கே போய்ப் பார்த்தேன். ஒரு மூலையில் சுண்ணும்பும் ஒரு மூலையில் சல்லியும் குவிந்து கிடந்தன.

கடைசியில் எனக்கிருந்த சிரமத்தில் எங்காவது கொஞ்சம் படுத்துக்கொண்டால் போதும் போலாகிவிட்டது. பர்மாவில் உடம்பு அசௌகரியமடைந்ததிலிருந்து இன்னும் சரியாக குணமாகவில்லை. உள்ளுக்குள்ளேயே பலஹீனம் இருந்து கொண்டு இருந்தது. மாலையில் தலைவலி காய்ச்சல் வந்துவிட்டது.

ரங்கா திதி வந்து "அது உஷ்ணத்தால் ஏற்பட்டது. சாப்பிட்டுவிட்டுப் படுத்துக்கொண்டால் சரியாகப் போய்விடும்" என்றாள்.

ஆனுல் எனக்குச் சாப்பிட இஷ்டமில்லை.

"இல்லை, ரங்காதிதி, உங்களைப் போல இந்த மலேரியா பிரதேசத்திலிருப்பவனல்ல நான். தேவையில்லாமல் சாப்பிட்டுவிட்டால் உடம்புக்கு ஆகாது. இன்று எனக்கு ஏகாதசிதான்.

இரவு பகல் கழிந்தது. மறு நாள கழிந்தது. மூன்றும் நாளும் கழிந்தது. ஆனுல் காய்ச்சல் குறையவில்லை. அது மேலும் மேலும் அதிகரிப்பதைக் கண்டு நான கலவரமடைந்து போனேன். கோவிந்த டாக்டர் ஒவ்வொரு வேளையும் வர ஆரம்பித்தார். நாடி பார்த்து, நாக்கைப் பார்த்து, வயிற்றைத்தட்டிப்பார்த்து, நல்ல நல்ல ருசியான மருந்துகளைக்கொடுத்துப் பணம் வாங்க ஆரம்பித்தார். ஆனுல் ஒரு வாரமாயிற்று. தகப்பனுருடைய மாமா வந்து! "இப்படியிருக்கக்கூடாது, அப்பா நான் சொல்லுகிறது என்னவென்றால் அங்கே 'தகவல் அனுப்பவேண்டும்' உன் அத்தை வரவேண்டும். ஜுரம் எப்படிப்பட்டதென்றால்—" என்று அவர் மேலும் சொல்லிமுடிக்காததைக் கண்டே அவருக்கு அதிருப்திதான் என்று கண்டேன்.

அந்த மாதிரி நிலையில் நாலைந்து நாள் சென்றன. ஜுரம் கொஞ்சங்கூடக்குறையவில்லை.

அன்றுகாலை கோவிந்த டாக்டர் வழக்கம் போல மருந்து கொடுத்துவிட்டுச் செலவுக்குக் கேட்டார். படுத்துக்கொண்டே கை நீட்டி, பெட்டியைத் திறந்தேன். பணப்பையைக்காணும் இல்லையென்று நிச்சயமானதும் எழுந்து உட்கார்ந்தேன். பெட்டியைக் குப்புறக் கவிழ்த்துத் தேடினேன். கிடைக்கவில்லை. கோவிந்த டாக்டர் விஷயத்தை ஊகித்துப் பயந்துபோய் அடிக்கடிக் கேள்வி கேட்டார்—ஏதாவது கிடைத்ததா, இல்லையா என்று.

"உண்மையில் ஒன்றும் கிடைக்கவில்லையே!" என்றேன்.

ஆனுல் அவருடைய ஔஷதத்தின் பணம் என்னுல் கொடுக்க முடியாமல் போனபோது அவருக்கு விஷயத்தைப் பூராவையும் சொன்னேன். ஸ்தம்பித்தது போல அவர்சிறிது நேரம் நின்று பிறகு "எவ்வளவு இருந்தது?" என்று கேட்டார்.

"கொஞ்சம் தான்!" என்றேன்.

"சாவியைக் கொஞ்சம் ஜாக்கிரதையாக வைக்கவேண்டும் பாபு, கிடக்கிறது நீங்கள் என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். உடம்புகுணமாகட்டும், பிறகு பார்க்கலாம் என்று சொல்லி விட்டுப் புறப்பட்டார்.

"இந்த வார்த்தை யார் சொல்லப் போகிறார்கள்?" என்றேன்.

"நல்லது பார்ப்போம்" என்றார் டாக்டர்.

அந்த கிராமத்தில் நம்பிக்கையின் பேரில் கொடுக்க வாங்கல் செய்ய இடமில்லை. ரூபாயைப் பற்றி சொல்வானேன்? கால் ரூபாய் கேட்டால் கூடத் தமாஷ் செய்வார்கள். ஏனென்றால் அவ்வளவு அறியாதவர்கள் அவர்கள். ஆகையால் நான் அந்த முயற்சியைச் செய்யவில்லை. இந்த விஷயத்தை ராஜலக்ஷ்மிக்கு அறிவிப்பதில்லை என்று முதலிலிருந்து திர்மானித்திருந்தேன். கொஞ்சம் குணம் அடைந்த பிறகு ஏதாவது செய்து அப்பாவுக்காவது எழுதிப் பணம் வரவழைக்கலாம் என்று எண்ணி இருந்தேன். ஆனுல் அந்தச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

நிலைமையைச் சுருக்கமாகத் தெரிவித்து ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுதலாம. ஆனுல் மனதிலிருந்த அவமானமான நிலைமையில் அதைச் செய்ய என்னுல் முடியவில்லை. அப்படி இரண்டு நாள் கழிந்தது. அதற்கு மேல் ஓட்ட முடியவில்லை. வெகுவாக யோசித்தபிறகு வேறொன்றும் வழி தோன்றாமல் கடைசியாகக் கொஞ்சம் ரூபாய்க்காக ராஜலக்ஷ்மிக்கு நிலைமை பூராவையும் தெரிவித்து இரண்டு கடிதங்கள் எழுதி பாட்னாவுக்கு ஒன்றும் கல்கத்தாவிற்குஒன்றும் அனுப்பினேன். அவள் பணம் அனுப்பி வைப்பாள் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. ஆனுல் அன்று காலை முதல் கவலையுடன் தபால்காரனை ஜன்னலண்டை எதிர் பார்த்துக் கொண்டு இருந்தேன்.

தபால்காரன் வருகிற நேரம் தவறி விட்டது. அன்று அதற்கு மேல் அந்த ஆசை கொள்ள இடமில்லை என்று எண்ணித் திரும்பிப் படுத்துக் கொள்ள ஆரம்பித்ததும் தூரத்தில் வண்டிச் சப்தம் கேட்டது. எழுந்து உட்கார்ந்தேன். வண்டி வாசலுக்கெதிரே வந்து நின்றது. வண்டிக்காரன் பக்கத்தில் ரதன் உட்கார்ந்திருந்தான். அவன் கீழே இறங்கிக் கதவுகளைத் திறந்து விட்டதும் என் கண்களில்பட்ட தோற்றம் உண்மை என்று என்னுல் நம்ப முடியவில்லை. பட்டப் பகலில் அந்தக் கிராமத்தெருவில் ராஜலக்ஷ்மி வந்து நிற்கக்கூடும் என்று நான் எண்ணக்கூட முடியவில்லை.

"பாபுஜீ இதோ இருக்கிறார்!" என்றான் ரதன்.

ராஜலக்ஷ்மி ஒரு தடவை என் பக்கம் பார்த்தாள்.

"வண்டியிருக்க வேண்டுமா? குதிரையை அவிழ்த்து விடட்டுமா?" என்று கேட்டான் வண்டிக்காரன்.

"சற்று இரு" என்று அவனிடம்சொல்லிவிட்டு ராஜலக்ஷ்மி கலங்காமல் காலடியெடுத்து வைதது என் அறைக்குள் வந்து நுழைந்தாள். நமஸ்காரம்செய்து என பாத தூளியைத் தலையில் ஏற்று, நெற்றியையும் வயிற்றையும் தொட்டுப் பார்த்து "ஏழு மணி வண்டிக்குப் புறபபட முடியுமா? குதிரைகளை அவிழ்த்துப் போடச் சொல்லட்டுமா?" என்றாள்.

நான் மதி மயங்கினவன்போல அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

"இரண்டு நாளாகத்தான் ஜுரம் விட்டிருக்கிறது, ஆனுல் இன்றே நீ கூட்டிக் கொண்டு போக விரும்புகிறாயா?" என்றேன்.

"இன்றில்லாவிட்டால் வேண்டாம். இரவில் போய் ஒரு காரியமும் இல்லை. பனியைத் தாங்க முடிந்தால் அதிகாலையிலேயே புறப்படலாம்."

அப்பொழுது தான் எனக்கு நினைவு திரும்பிற்று.

"என்ன தைரியத்துடன் இந்த கிராமத்திற்கு, இந்த வீட்டுக்குள் வந்தாய்? இங்கு யாரும் உன்னை அடையாளம் கண்டு பிடிக்கமுடியாது என்று எண்ணுகிறாய்?

ராஜலக்ஷ்மி வெகு சாவதானமாக, "நன்றாக முடியும்! நான் பிறந்து வளர்ந்த இந்த ஊரில் என்னை அடையாளம் கண்டு பிடிக்கமாட்டார்களா? பார்ப்பவர்கள் உடனே கண்டு கொள்வார்கள்" என்றாள்.

"பின்?"

"நான் என்ன சொல்லட்டும். என் தலை எழுதது. இல்லாவிட்டால் நீ ஏன் இங்கே வந்து உடம்பு அசௌகரியமாகப்படுத்துக்கொள்ளவேண்டும்?"

"எதற்காக வந்தாய்? பணம் தானே கேட்டிருந்தேன், அதை அனுப்பிவிட்டால் போதாதா?"

"அது எங்காவது முடியுமா? இவ்வளவு அசௌகரியம் என்று கேள்விப்பட்ட பிறகு பணத்தை மட்டும் அனுப்பிவிட்டுச் சும்மா இருக்க முடியுமா?"

"நீ நிம்மதியாக இருக்காவிட்டால், எனக்கு இப்பொழுது பெருத்த கவலையை ஏற்படுத்திவிட்டாயே! இப்பொழுது எல்லோரும் வந்து விடுவார்கள். நீ உன்முகத்தை அவர்களுக்கு எப்படிக் காண்பிப்பாய்? நான் தான் எப்படி வந்தவர்களுக்கு சவாப்பு சொல்லுவேன்?"

இந்தக் கேள்விக்குப் பதிலாக அவள் தன் நெற்றியைத் தொட்டு, "என்ன பதில் சொல்

ஸங்கீத சிந்தாமணி ... ரூ. 3
திராவிட கானம் ... ரூ. 3
ஸங்கீத சில்லரைக்கோவை ... ரூ. 3

முழு விபரமான கேட்லாக் இனும். முன் பணமாக ரூ. 6. மணியார்டர் செய்தால், ஷை மூன்று புஸ்தகங்களையும் வேறுவிதச் செலவின்றி ரயிலில் அனுப்பிவைக்கப்படும்.

எம். எஸ். ராமுலு & கோ.,
286, எஸ்ப்ளனேட் :: மதராஸ்

டாக்டர்களும், நர்ஸுகளும் ஜாம்-பெக் சிபார்சு செய்து உபயோகிக்கின்றனர்

பிரபல கிருமிநாச சரும மெழுகு

அறை நூற்றாண்டுகளுக்கு மேலாக உலகப் பரசித்தி பெற்றது. வெட்டுக்காயம் ரணங்களுக்கு ஜாம்-பெக் உன்னத நிவாரணியாகும். தேமல், ரணம், விஷப்புண், குழிப்புண், கால் ரணம், மூலம் முதலியவற்றிற்கு டாக்டர்களாலும், நர்ஸுகளாலும் சிபாரசு செய்யப்படுகின்றது. இதன் அரிய மூலிகை சத்துக்கள் வலி, வீக்கத்தைக்குறைத்து, சீழ்வடிதலை நிறுத்தும். தழும்பின்றி குணப்படுத்தும். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1 அல்லது 2—4. ஜாம்-பெக் ஸோப் ரூ. 1. ஜாம்-பெக் பவுடர் ரூ 1. ஏஜண்டுகள்: மெஸர்ஸ் தாதா அண்டு கம்பேனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது

வது? என் அதிருஷ்டம்" என்றாள்.

அவளுடைய அலட்சியத்தையும் உதாசீனத்தையும் பொறுக்க முடியாமல் நான் "அதிர்ஷ்டம் இருக்கட்டும், உனக்கு வெட்கமாக இருக்காதா? இங்கே எப்படி முகத்தைக் காட்டுவாய்?" என்றேன்.

ராஜலக்ஷ்மி அதே உதாசீனத்துடன் "லஜ்ஜை ஏதாவது கொஞ்சமிருந்தால் அதெல்லாம் உனக்குத்தான்" என்றாள்.

அதற்குப் பின் என்ன சொல்ல இருக்கிறது? என்ன கேட்கத் தான் இருக்கிறது? கண்களை மூடிக் கொண்டு மௌனமாகப் படுத்துக்கொண்டிருந்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு "பங்குவின் கலியாணம் யாதொரு தடையுமின்றி நடைபெற்றதா?" என்று கேட்டேன்.

"நடை பெற்றது!" என்றாள் ராஜலக்ஷ்மி.

"இப்பொழுது எங்கிருந்து வருகிறாய்? கல்கத்தாவிலிருந்தா?"

"இல்லை. பாட்னுவிலிருந்து. அங்கேதான் உன்கடிதம் கிடைத்தது."

"என்னை எங்கே கூட்டிக் கொண்டு போகப் போகிறாய், பாட்னுவுக்கா?"

ராஜலக்ஷ்மி சிறிது யோசித்து "ஒருதரம் நீ அங்கே வரவேண்டியதுதான். முதலில் கல்கத்தா போய் உடம்பைப் பார்த்துக் கொண்டு. பிறகு-" என்று இழுத்தாள்.

"அதற்குப் பிறகு நான் ஏன் பாட்னுவுக்குவர வேண்டும்?"

"தான சாசனம் அங்கேதான் ரிஜிஸ்டர் ஆக வேண்டும். எழுதித் தயாராக வைத்து விட்டு வந்திருக்கிறேன் ஆனுல் உன்னுடைய அனுமதியின்றி அது நடைபெறக்கூடாது."

நான் ஆச்சரியமடைந்தவனுய் "எதற்கு தானசாசனம்? யாருக்கு என்ன கொடுக்கிறாய்?" என்றேன்.

"பாட்னு வீடு ஒன்றை பங்குவுக்குக் கொடுக்கிறேன். காசியிலிருக்கும் வீட்டைக் குருவுக்குக் கொடுப்பதாய் எண்ணி இருக்கிறேன். பாக்கிக் கம்பெனி காகிதங்கள் நகை நட்டு வகையராவை என் இஷ்டப்படி ஒரு வகையாக ஏற்பாடு செய்து விட்டு வந்திருக்கிறேன். இப்பொழுது நீ எப்படிச் சொல்லுகிறாயோ—"

நான் அளவற்ற ஆச்சரியமடைந்து "அப்படியானுல் நீ உனக்கு ஒன்றுமே வைத்துக் கொள்ள வில்லையா? பங்கு உன்னை சம்ரட்சிக்காவிட்டால்? இப்பொழுது அவன் சம்சாரமே இருக்கிறது; கடைசியில் அவன் உன் வயிற்றுக்குக் கூடக் கொடுக்கா விட்டால்?" என்றேன்.

"நான் அதைத் தானே கோருகிறேன்! தானம் செய்வது எதற்காக? கடைசியில் தானம் கொடுத்ததைக் கொண்டு பிழைப்பதற்காகவா? நீ சொல்லுவது மிகவும் அழகாக இருக்கிறது!"

என்னுடைய பொருமையை அதற்கு மேலும் அடக்கிக் கொள்ள முடியாமல் கோபக் குரலில் "அரிச்சந்திரனைப்போல இந்தத் துர்ப்புத்தி உனக்கு யாரால் ஏற்பட்டது? எப்படிச் சாப்பிடுவது? வயது காலத்தில் யார் மென்னியில் போய் உட்காருவது?" என்று கேட்டேன்.

"நீ கோபித்துக் கொள்ளாதே படுத்துக்கொள். எனக்கு இந்தப் புத்தியைக் கொடுத்தவர்கள் சாப்பாட்டிற்கும் கொடுப்பார்கள். நான் ஆயிரம்வருஷம் ஜீவித்திருந்தாலும் யாருடைய கழுத்தின் மேலும் சுமையாக இருக்க மாட்டேன்! நீ அநாவசியமாக மூளையைக் குழப்பிக் கொள்ளாதே, நிம்மதியாகப் படுத்துக் கொள்!"

நான் ஸ்திமிதமடைந்து படுத்துக் கொண்டேன். திறந்த ஜன்னல் வழியாக அஸ்தமன சூரிய கிரணங்களால் விசித்திரமாக வேலை செய்யப்பட்ட ஆகாயம் கண்ணில் பட்டது. கனவில் ஆழ்ந்தவன்போல கண் கொட்டாமல் அதையே பார்த்துக் கொண்டிருந்த பொழுது 'இந்த மாதிரியான அபூர்வமான சோபையும் சௌந்தரியமும் அகில உலகத்தையும் அழகுபடுத்துகிறது. மூன்று உலகங்களிலும் இது இருக்கும் பொழுது நோய், துக்கம், இல்லாமை, ஹிம்ஸை, துவேஷம்—எதுவுமில்லை,' என்று தோன்றிற்று.

அந்த பேச்சற்ற நிலைமையில் இருவரும் மூழ்கி எவ்வளவு நேரம் கழித்தோம் என்பது தெரியாது! வாசலில் யாரோ பேசும் சப்தம் கேட்டு இருவரும் திடுக்கிட்டுப் போனோம். ராஜலக்ஷ்மி படுக்கையிலிருந்து எழுந்திருப்பதற்கு முன்பே, கோவிந்த டாக்டர், டாகுர் தா (தகப்பனாரின் மாமன்) வுடன் உள்ளே நுழைந்தார்.

ஆனுல் அவர்கள் எங்கள் மேல் பார்வை விழுந்தவுடன் திடுக்கிட்டு நின்றுவிட்டார்கள். யாரோ கல்கத்தாவிலிருந்து வண்டியில் வந்திறங்கி என்னுடன் இருக்கிறார்கள் என்று மத்தியானம் தூங்கும்பொழுதே டாகுர் தாவுக்குத் தகவல் எட்டியிருக்க வேண்டும். ஆனுல் அவள் பெண்ணுய் இருக்கக்கூடுமென்று அவர்கள் கற்பனை கூடச் செய்து பார்த்திருக்கமாட்டார்கள். அதனுல் தானே என்னமோ அது வரையில் வீட்டிலிருந்த பெண்கள்கூட யாரும் வெளியே வரவில்லை.

டாகுர் தா மிகவும் உலகம் அறிந்தவர், கெட்டிக்காரர், அவர் சிறிது நேரம் ஒரே பார்வையாக ராஜலக்ஷ்மியினுடைய குனிந்த முகத்தைப் பார்த்து "பெண் யாரப்பா, ஸ்ரீகாந்தா? எனக்குக்கூடத் தெரியும்போல இருக்கிறதே!" என்றார்

டாக்டர் பாபுவும் கூடவே "நான்கூட எங்கேயோ பார்த்திருக்கிறேன்!" என்றார்.

நான் அவரைப் பார்வையாகப் பார்த்த பொழுது, ராஜலக்ஷ்மியினுடைய முகம் பூராவும் இருள் போலக் கருத்திருந்தது. ஒரே நிமிஷம் ஏதோ ஒன்று என் உள்ளத்தில் 'ஸ்ரீகாந்தா, எல்லாம் துறந்த இந்தப் பெண் உனக்காக இந்தத் துக்கத்தை வேண்டுமென்று வரவழைத்துக் கொண்டாள்' என்றது.

ஒரு தடவை என் உடம்பு பூராவும் சிலிர்த்தது. இன்று உண்மை சொல்லிக் காரியமில்லை. பொய் சொல்லித்தான் தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் என்று எண்ணினேன்.

மறு நிமிஷம் அவளுடைய கை மேல் ஒரு தரம் தட்டிவிட்டு "நீ புருஷனுக்குச்சேவைசெய்ய வந்திருக்கிறாய், உனக்கென்ன வெட்கம், ராஜலக்ஷ்மி! டாகுர்தா டாக்டர் பாபு இருவர்களுக்கும் நமஸ்காரம் செய்!" என்றேன்.

கணநேரம் இருவருடைய கண்களும் சந்தித்தன. அதற்குப் பிறகு அவள் எழுந்துபோய் இருவருக்கும் நமஸ்காரம் செய்தாள்,

(இரண்டாம் பாகம் முற்றிற்று.)

காட்லாகும், விலை விவரங்களும் கேட்போருக்கு அனுப்பப்படும்.
தி ஈஸ்டர்ன் லைட் காஸ்டிங் கம்பெனி லிமிடெட்.
12, மிஷன்ரோ, கல்கத்தா.
சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள் :
ஸவுத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி லிமிடெட்.
தபால் பெட்டி நெ. 37, மதராஸ்.

41 வருட அனுபவம் உள்ளது.
இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்.
தாது புஷ்டிக்கி நிகறற்றது

பழநி ஆர். எம். கே. தங்க மாத்திரை.

ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம்
இந்தப் பெயர் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

தாது புஷ்டிக்கி இதற்கு நிகரான மருந்து ஒன்றுமே யில்லை. தாதைக்கட்டி, ஆண்மைக் குறைவை நீக்கி நரம்புகளுக்கு பலத்தைக் கொடுத்து உங்கள் மனக் கவலையை நீக்கி, தமபதிகளை மகிழ்விக்கச் செய்யும். லாகிரி சேராதது. இதை ஆண், பெண் சகலரும் சாப்பிடலாம். நாத, விந்தில், கருவமைக்கும் சக்தியையும் உண்டாக்கும்.

100–வேளை தங்க மாத்திரையும் அனுபானம் மகாமன்மத காமகேசரி சாலாமிசிரி அல்வா 100-உருண்டையும் } ரூ. 10
25-நாள் 50-வேளை ஷை மருந்துகள் ,, ரூ. 5
(தபால் செலவு வேறு)

வைத்திய ஆசிரியர், ஆர். எம். கே. வேலுசாமி,
சித்த வைத்திய சாலை, பழநி. PALNI (S. I. R.)

பிராஞ்சுகள் : 16, திருவல்லிக்கேணி ஹை ரோட், மதராஸ்.
68, செட்டியார் தெரு, கொழும்பு.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

கர்மமே பலவந்த மாயெ தல்லி!
காயாரோஹண ஜாயா!

அனுபல்லவி

நிர்மல மகு நாகபுரமுன நெலகொன்ன
நீலாயதாக்ஷி! ஸகல லோக ஸாக்ஷி!

சரணம்

1. தரனு தனிகுல கோரி நா
பரிதாபமு தீர்ப்பலேரைரி
ஸரகுன நே பயலுதேரி வச்சி
பரம பாவனி! நீ ஸன்னிதி ஜேரி நா

2. வாரிதி மதி கர்விஞ்சி யீ-
வஸுதகு தாரானெஞ்சி நின்னு
ஸாரெகு கனி தல வஞ்சி யுண்டு
தீர தனமு கலுகு நினு பொடகாஞ்சி நா

3. காஸாஸ லேனி நாமதிகி நீ
கருணயே தனமனி பல்கி நின்-
டாஸதோ வச்சி ஸன்னிதிகி நிஜ-
தாஸுடைன ஸ்ரீ த்யாகராஜுனிகி

II

நிர்மலமுஅகு	—பரிசுத்தமான
நாகபுரமுன	—நாகப்பட்டணம் என்ற திவ்ய க்ஷேத்திரத்தில்
நெலகொன்ன	—கோயில் கொண்டு விளங்கும்
நீலாயதாக்ஷி!	—நீலாயதாக்ஷி என்று பெயர் கொண்டுள்ள தேவியே!
ஸகல லோகஸாக்ஷி!	—ஸகல உலகங்களுக்கும் காரணமாய் விளங்கு பவளே
காயா ரோஹணஜாயே!	—காயாரோஹணர் என்ற பெயர்கொண்டு விளங் கும் பரமசிவனின் நாயகியே!
தல்லி!	—தாயே!
கர்மமே பலவந்தமு ஆயே	—என். கர்மவினையே பலவந்தமாக குறுக்கிட்டு நின்று உன் கிருபை கிட்டாவண்ணம் செய்து விட்டதே
பரம பாவனி!	—மிகுந்த பரிசுத்தமானவளே
தரனு	—இப்பூமியின் கண்
தனிகுலகோரி	—பிரபுக்களை அண்டி அவர்கள்
நா பரிதாபமு	—என் கஷ்டங்களை
தீர்ப்பலேருஜரியனி.	—தீர்க்கமுடியாதவர்களானுர்கள் என்று அறிந்து
ஸரகுண	—வேகமாக
நேபயலுதேரிவச்சி	—நான் புறப்பட்டு வந்து
நீ ஸன்னிதி ஜேரி	—உன் ஸன்னதி வந்தடைந்தும்
நாகர்மமே பலவந்தமுஆய	—என் கர்மவினை பலவந்தமாக குறுக்கிட்டு நின்று உன் கிருபை கிட்டாவண்ணம் செய்துவிட்டது.
வாரிதி	—சமுத்திரம்
மதிகர்விஞ்சி	—மனதில் தன்னைவிட காம்பீர்யம் எவருமில்லை யென்று கர்வங்கொண்டு
யீவஸுதகு	—இவ்வுலகிற்கு
தா ரானு எஞ்சி	—தான் வர நினைத்து (புறப்பட்டு வந்து)
நின்னு	—மிகுந்த காம்பீர்யத்துடன் விளங்கும் உன்னை
ஸாரெகு கனி	—அடிக்கடி பார்த்து
தலவஞ்சியுண்டு	—தன் கர்வம் ஒழிந்து தலை குனிந்து நிற்கும் வண் ணம் செய்த
தீரதனமுகலுகு	—கம்பீர ஸ்வபாவம் வாய்ந்த
நினுபொடகாஞ்சி	—உன்னை நன்றாகத் தரிசித்தும்
நா கர்மமே பலவந்தமாயே	—என் கர்மவினை குறுக்கிட்டு நின்று உன் கிருபை கிட்டாவண்ணம் செய்துவிட்டது
காஸாஸலேனி	—பொருளின் மீது ஆசையில்லாத
நா மதிகி	—என் மனதிற்கு
நீ கருணயே	—உன் கருணை கடாக்ஷமே

உங்களுக்கு
மலச்சிக்கலோ, அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய் துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

22 காரட், டி. சி. என்.
ரோல்ட்கோல்ட் வளையல்கள்
அசல் தங்க வளையல்களைப்போல் எப்பொழுதும் நிறம் மாருமல் இருக்கும்.



5 வருஷம் உத்திரவாதமுள்ளது. சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் சையிஸ் வரையில் ஒரே விலை தான். வளையல் ஜதை 1-க்கு ரூ. 6. வி. பி. செலவு: 1 ஜதை முதல் 6 ஜதைகள் வரை அணு 8. விலாசம்:-
டி. சி. நாகலிங்கப்பா & Co
பார்க் டவுன் போஸ்ட், மதராஸ்.

தனமு அனி	—பெருத்த பொக்கிஷமென்று
பல்கி	—உண்மையாகச் சொல்லி மகிழ்ந்து
நிண்டு ஆஸதோ	—உன்னை தரிசிக்க மிகுந்த ஆவலுடன்
ஸன்னிதிகி வச்சி	—உன் சன்னிதானம் புறப்பட்டு வந்துள்ள
நிஜதாஸுடைன	—உன் உண்மைத் தொண்டனுகிய
ஸ்ரீத்யாகராஜுனிகி	—த்யாகராஜன் என்று பெயர் கொண்ட எனக்கு
கர்மமே பலவந்த மாயே	—என் கர்மவினை பலவந்தம் செய்து உன் கிருபை கிடைக்காவண்ணம் செய்துவிட்டது.

III

ஒரு சமயம் ஸ்வாமிகள் பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று, அங்கங்குள்ள தெய்வங்களைத் தரிசித்து வந்தார். அச் சந்தர்ப்பத்தில் 'நாகைக் காரோணம்' என்று சொல்லப்படும் நாகைப் பட்டிணத்திற்கும் விஜயம் செய்து அங்கு கோயில் கொண்டுள்ள 'நீலாயதாக்ஷி' அம்மனை தரிசித்துத் துதித்த கீர்த்தனமிது. இந்தக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் பராசக்தியான அந்த தேவியின் மஹிமைகளை வர்ணித்துத் துதித்து, தன் பூர்வ கர்ம வினைகளைப் போக்கி யருளுமாறு தேவியை ப்ரார்த்திக்கிறார்.

கர்மமே பலவந்த மாயே:—பராசக்தியான 'நீலாய தாக்ஷி' அம்மனைத் தரிசித்து, மெய் மறந்து நின்ற தருணத்தில், ஸ்வாமிகளுக்கு சில இடையூறுகள் நேர்ந்து இவ்விதம் கூறியிருக்கவேண்டும் என்பது சிலர் கருத்து. ஸ்வாமிகள் திருப்பதி வெங்கடாசலபதியைத் தரிசனம் செய்யச் சென்ற தருணத்தில், ஸன்னிதி முன் திரையிடப்பட்டிருந்தது. அதைக் கண்டு தன் பூர்வ கர்மவினை திரையாக வந்து பகவத் தரிசனம் கிடைக்காத வண்ணம் மறைத்து விட்டது என்று தன்னைத் தானே நொந்து கொண்டு 'தெரதீயகராதா' என்ற கீர்த்தனம் பாடியுள்ளார். தங்களுக்கு எவ்வித சங்கடம் உண்டானுலும் மஹான்கள் அவைகளைத் தங்கள் வினைப் பயன் என்று கருதுவார்களே யொழிய பிறரை நிந்திக்க மாட்டார்கள். நாகைப்பட்டணத்திலும் ஸ்வாமிகளுக்கு தன்னைத் தான் நொந்து கொள்ளக் கூடியதான் இத்தகைய ஸந்தர்ப்பம் நேர்ந்துள்ளதாக ஊஹிக்கப்படுகிறது. அல்லது, தாயுமான ஸ்வாமிகள்

என்னே நான் பிறந்துழல வந்த வாறிங்
கெனக் கெனவோர் செயலிலையே யேழையேன் பான்
முன்னே செய்வினை யெனவும் பின்னே வந்து
மூளும் வினை யெனவும் வர முறையே னெந்தாய் என்ற பாடலில்

கூறி பகவானை பிரார்த்திப்பது போன்றே ஸ்வாமிகளும் தேவியிடம் முறையிட்டுக்கொள்கிருர் என்று கொள்வதும் பொருந்தும்.

காயாரோஹண ஜாயே:—சிவபெருமான் 'புண்டரீக மஹரிஷி'யை அனுக்ரஹித்து அவருக்கு சரீரத்துடன் முக்தி யளித்தருளியதால் 'காயாரோஹணேச்வரர்' என்ற பெயர்கொண்டு விளங்குவதாக ஸ்தல புராணம் கூறுகிறது. 'ஆதி புராணேச்வரர்' என்ற மற்றொரு பெயரும் அங்கு கோயில் கொண்டு விளங்கும் பரசிவத்துக்கு உண்டாம்.

நிர்மல மகு நாகபுரமுன:—நாகைப் பட்டிணம் மிகுந்த பரிசுத்தமான க்ஷேத்திரம். ஸப்த விடங்கஸ்தலங்களில் ஒன்றாகும். 'நீலாயதாக்ஷி' அம்பாளின் ஸன்னிதி விசேஷமானது.

ஸகல லோக ஸாக்ஷி:—பராசக்தியைத் தவிற வேறு யாராலும் மெய்யன்பர்களைக் காத்து ரக்ஷிக்க இயலாதென்றும், ஸகல உயிர்களுக்கும் அபயமளித்து ரக்ஷிக்கும் தன்மை கொண்டவள் அப்பரா சக்திதானென்றும் ஆதிசங்கரர்,

த்வதன்ய: பாணிப்யாம் அபயவரதோ தைவத கண:
த்வமேகா நைவாஸி ப்ரகடித பராபீத்ய பினயா |
பயாத் த்ராதும் தாதும் பலமபிச வாஞ்சாஸமதிகம்
சரண்யே லோகானும் தவஹி சரணுவேவ நிபுணௌ || (ஸௌந்தர்யலஹரி)

மேலே கண்ட ச்லோகத்தால் தெரிவித்துள்ளார். இவ்வுண்மையையே ஸ்வாமிகளும் குறிப்பிடுகிருர்

தரனு தனிகுல:—எல்லாம் வல்ல பராசக்தியின் அருளைப் பெற வழி தேடாமல், தனவந்தர்களை அண்டிப் பிழைப்பதால் யாது பிரயோசனம் ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார். இதே போன்ற அபிப்பிராயத்தை

காசாய நீசம் கமனீய வாசாமோசாபல ஸ்வாதமுசா நயாசே |
தயாகுசேல தனதத் குசேலே ஸ்திதே குசேலே ச்ரிதமா குசேலே ||

என்ற ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் அருளிய ச்லோகத்திலும் காணலாகும்.

வாரிதி மதி:—"ஸுந்தரி நினுவர்ணிம்ப" என்ற கீர்த்தனத்தின் சரணத்தில், நிலுவரமகு நீ கம்பீர முகனி ஜல ராஜு ஜடவேஷுடாயே' என்று வேருெருவிதமான கல்பனையுடன் சொல்லப்படுவது கவனிக்கத் தக்கது.

காஸாஸலேனி:—'ருகலுபதிவேலுன்ன' 'காஸிச்சேதே' 'நிதிசாலஸுகமா' என்ற கீர்த்தனங்களில் ஸ்வாமிகள் திரவிய ஆசையில்லாதவர் என்றும், பக்தியாகிற பொக்கிஷத்தையே விரும்புபவர் என்ற உண்மை விளக்கப்பட்டுள்ளது.

உங்கள்
அபிமானம் பெற்ற கடை
வெள்ளி சாமான்கள்
* சமீபத்திய மோஸ்தர்
* ரகம்
* விலைக்கு உத்திரவாதம்.
ஜி. ஸ்ரீராமுலுசெட்டி & ஸன்
184, சைனு பஜார், மதராஸ்.
போன் : 3268.

நரஸூஸ் காபியைப் போன்ற புத்துயிரளிக்கும் பானம் வேறொன்றுமில்லை

கடுமையான வேலைக்கோ, விளையாட்டுக்கோ பிறகு உங்கள் களைப்பைப்போக்கி ஊக்கமளிக்கும் பானம்.

எந்தத் தூரத்திலும் எவ்வளவு வேண்டுமானுலும் இந்தியா, பர்மா, சிலோனில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும். மற்ற விவரங்களுக்கு மேற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெட் ஆபீஸ்: சேலம்.
MNCK-II-TM

நஞ்சன்கூட பல்பொடி
பல வியாதிகளைத் தடுக்கவும், குணப்படுத்தவும்
ஜீரசம் கூலாயில்
வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள் கவனிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்
சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ்
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

பாத்ருடுவின் "பாலசஞ்சீவினி"
குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டிகளை குணப்படுத்தும்
Dr பிள்ளா பாபய்ய பாத்ருடு & Bros.,
11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர், போன் 86257. :: திருச்சி பிராஞ்சு: 81, ஆண்டார் தெரு, தெப்பக்குளம்.

IV

ராகம் ஸாவேரி மிச்ரசாபு

(15-வது மேள ஜன்யம். ஆ. ஸரிமபதஸ் அவ. சம்பூர்ணம்.)

பல்லவி

1. ; ஸா ரி	மா ; மா ;	பா தபபம	தா பா தா ;
கர் . .	ம மே	ப ல . . .	வந் . த
; மா ப ம	ப த ப த பா ;	தபா தமா	கா ரி ரி ;
மா . .	. . . . யே	தல் . . .	. . வி
2. ; ஸா ரி	மா ; மா ;	பா தபபம	தா பா தா ;
கர் .	ம மே	ப ல . . .	வந் . த
; ம ப த நி	பா ; தா ;	மப தநிதம	காரி ரி ;
மா . . .	. யே	தல்	. . வி
3. ; ஸ்ா ரி	மா ; மா ;	பா தபபம	தா பா தா ;
கர்	ம மே	ப ல . . .	வந் த
; ம ப த ஸ்	, ரி ஸ் நி தா ;	மப தநிதம	காரி ரி ;
மா . . .	. . . யே	தல்	. . வி
; ஸா ரி	கா ஸா ரி ஸா	ஸரி . ஸநிதா	ஸாரி மபதா
கா .	யா . ரோ .	ஹ . ன . .	ஜா . . .
பா ; .	; ; ; ஸ ரி	மபத ஸ்ாரி	ஸ்நிதா தபமா
யே ; .	. .	. . . . .	. . . . . .

க ரி

. . (கர்மமே பல வந்த)

அனுபல்லவி

1. ; பா ;	த ப மா த ப தா	ஸ்ா ஸ்ா ;	ஸ்ா ; ஸ்ா ;
நிர்	ம . . ல . .	ம கு	நா க
; பா . தா	ஸ் ரி க்ா ஸ்ா ரி	ஸ்ாரி ஸ்நித	தா பா தா ;
பு ர	மு . . . ன	நெ . ல . .	கொன் . ன
2. ; பா த நி	த ப த ம த ப தா	பத ஸ்நிதா	ஸ்ா ; ஸ்ா ;
நிர் . .	ம . . . ல . .	ம . கு . .	நா க
; தா க்ா	க் ரி க் ரி ஸா ;	ஸ்ா, ஸ்ாரி	ஸ்நி பா தா ;
பு ர	மு . . . ன	நெ ல .	கொன் . . ன
1. ; மா பா	தா ரி ஸ்ா ;	ரிஸ்நி தபா	தா பா தா ;
நீ .	லா . ய	தா	. . க்ஷி
; மா மா	ப த நி தா பா	பா, தபம	கா ஸா ரி ;
ஸ க	ல . . லோ ,	க . . .	ஸா . க்ஷி
2. ; பா தா	க் ரி க் ரி ஸ்ா	ஸ்நி ரிஸ்நித	தா பா , தா ;
நீ .	லா . . . ய	தா	. . . க்ஷி
; மா மா	பதஸ்ா ஸ்நிதப	மபத நிபா	மபதப பதபம
ஸ க	ல , . லோ . . .	க	ஸா . . . க்ஷி . . .

க ரி

. . (கர்மமே பல வந்த)

சரணம்

1. ; பா தா	பா ; ; ப ம	பா ; மா	தா பா தா ;
த ர	னு த .	னி .	கு . ல
; மா ;	பா த நி பா	தப பாதா	தபமா காரி
கோ	ரி . . .	ன . . .	நா . . . .
2. மா பா தநி	பா ; ; தா	பா, தபம	தா பா தா ;
. த ர .	னு த	னி . .	கு . ல
; மா ;	பா ; த ஸா, ரி	ஸ்நி தா ;	தபமா காரி
கோ	ரி . . .	ன . .	நா . . . .
ரி ஸா ரி	கா ஸா ரி ஸா	ரி ஸா, ரி	ஸநிதா தா ;
. ப ரி	தா . . ப .	மு . .	தீர் . . ப்ப
ஸா ரி ம ப	த ப தா த ப மா	கா ; ரி	ரி ; ஸா ;
லே . ரை .	. . . . ரி . .	ய .	னி .
; பா தா	த ப மா த ப தா	ஸ்ா ; ;	ஸ்ா ; ஸ்ா ;
ஸ ர	கு . . ன . .	நே .	ப . ய
; பா தா	ஸ் ரி க்ா ஸ்ா ரி	ஸ்ா ; ரி	ஸ்நி பா தா ;
ஆ. .	தே . . . ரி	வச் .	. . . சி
; மா பா	தா ரி ஸ்ா ரி	ஸ்நி பா ;	தா பா தா ;
ப ர	ம . பா .	வ. .	னி . நீ
; மா ;	ப த நி தா பா	பா, தபம	கா ஸா ரி ;
ஸ ன்	. . . னி தி	ஜே . . .	ரி . நா

(கர்மமே பல வந்த)

(ஸங்கீத வித்வான் உமையாள்புரம் எஸ். வெங்கடராமையர் இக் கீர்த்தனத்தின் வர்ணமெட்டை உதவினுர்.)

ஜம்மியின் லிவர்க்யூர் மூலம் புனர்ஜன்மம்

ஜம்மியின் லிவர் க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலேக்கட்டி நோய்களே குணப்படுத்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத்தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36ஆ காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்.

1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

மற்றும்:-பம்பாய், கல்கத்தா, லக்ஷ்மணபுரி, பெங்களூர், திருச்சிராப்பள்ளி.

1 மணியில் வாலிபம்!

ரமணவிலாசினி

வடிகா

காம சக்தியை விருத்தி செய்து, துரித ஸ்கலிதத்தை நிறுத்தி, எல்லோருக்கும் சிற்றின்பத்தில் திருப்தியைத்தரும் பரம ஔஷதம். டப்பி ரூ. 1.

மதன மஞ்சரி பார்மஸி,

184, சைளுபஜார் ரோட், மதராஸ்

அமிர்தாஞ்சன்

போலிகள் எச்சரிக்கை

"சுதேஹமித்திரன்"

எல்லாவித நோய்களேயும் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

பம்பாய் - சென்னே - கல்கத்தா.



கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,

7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.



நவநாகரீகம்

★

வம்பு

★

காசினி எழுதியது

* * * 'அப்புறம் அவாத்திலே நீ ரொம்ப நாழிகை இருந்தாயா? சண்டை எப்படி முடிஞ்சுது? 'ராஜி ஆனுளா இல்லேயா?" என்று நளினுதேவி மாலினியைக் கேட்டாள்.

'இரண்டு பேரும் விக்கி, விக்கி அழ ஆரம்பித்தார்கள். சரி, இனிமேல் எப்படியோ சமாதானம் ஆய்விடும்; நமக்கேன் வம்பு என்று வந்து விட்டேன்!' என்றுள் மாலினி.

'அதுதான் நானும் வந்து விட்டேன். சுத்தப் பச்சக் குழந்தை தனமாக இப்படி மனஸ்தாபப் பட்டுக் கொள்ளுவார்களோ? வயசாகலேயா என்ன?' என்றுள் நளினுதேவி.

'இது உங்களுக்கு இருவருக்கும் மட்டும் தெரிந்த ஒரு 'ரகசியமாக இருந்தால், இப்படி எங்கள் நடுவில் பேசினது ரொம்பவும் தப்புக் காரியம்!'—என்று லேடி சுந்திராசாரி சொல்லிக் கொண்டிருக்கும் போதே:— 'ஒத்தருக்கு மட்டும் தெரிந்தால் ரக்சியம்; இருவருக்குத் தெரிந்தால் அனர்த்தம் என்பது உங்களுக்குத் தெரியாதோ? மேலும் இது எனக்கும் தெரியும்!' என்று சுலோசனு சொன்னுள்.

'அதுனலே இதை இன்னமே ரகசியமாக வைக்க முடியாது என்கிருயா?' என்று லேடி சுந்திராசாரி வெடுக்கென்று கேட்டாள்.

சுலோசனுவின் முகம் கோபத்தால் சிவந்தது. இது ஏதடா வம்புவார்த்தை வளரப்போரதே என்று 'யாரு எதுக்காக அழுதார்கள்?' என்று கேட்டேன்.

'அதுவா? கேட்டால் சிரிப்புத்தான் வரும். ராதையும், குஞ்சுவும் ரொம்பவும் சிநேகமாக இருந்தாளா, ஒரு நாளைக்கு குஞ்சு ஆத்துக்கு வரேன் என்று சொல்லி விட்டு, ராதை வரவில்லேயாம். மறு நாள் சம்பு குஞ்சுவைப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்த போது, ராதை தான் புதிதாகப் பிடித்திருக்கும் சிநேகிதி பிரேமாவுடன் ஷாபிங் போய் விட்டதே, அவள் குஞ்சு வீட்டுக்கு வராததுக்குக் காரணம் என்பதை விளக்கினுளாம்—!' என்று மாலினி சாரமாகச் சொல்லிக் கொண்டே இருக்கும் போது:—'இது என்ன ராமாயண்மா? சுருக்கிச் சொல்லேன்!' என்றுள் லேடி சுந்திராசாரி.

'அதுதான் குஞ்சு 'நான் பிரேமாவுக்கு சமமாயேனு; அவள் லக்ஷாதிகாரியின்பொண்; பெரிய உத்தியோகஸ்தன்பெண்டாட்டி. ராதை என்னே இனிமே லக்ஷியம் பண்ணுவாளோ!' என்ருளாம். இதை சம்பு சிநேகிதி வேணி ராதைக்குச் சொன்னுளாம். அவள் எப்படி குஞ்சு என்னைப்பத்தி இப்படி மதிக்கலாம் என்று சில நிஷ்டூரமான வார்த்தைகள் சொன்னுளாம், இப்படி சிநேகிதர் மூலம் ஒருவள் சொன்னதை மற்றவள் கேள்விப்பட்டு கண்ட இடத்தில்கூட முகத்தைத் திருப்பிக் கொண்டிருந்தார்கள். கடைசியில் நேத்தைக்கு லேடி சின்னேயா வீட்டில் போயிருந்தபோது லேடி சின்னேயாவின் பெண் இவர்களே இப்படி அசட்டுத்தனமாக மனஸ்தாபப்பட்டுக் கொள்ளலாமா என்று ராஜி ஆக்கினுள்!' என்றுள் மாலினி.

'என்னடாப்பா என்றான்னு பார்த்தேன்! நன்னு இப்படி இங்கெ சொன்னதை அங்கே சொல்லி, ஸ்திரீ நாரதர்களாகத் திரிந்தீர்கள்! வீட்டிலே அடைவறிந்து வேலே செய்தால் விரல் மடக்க நேரம் இருக்காது! இப்படி வம்பு பேசிக்கொண்டு திரிவதே தொழிலாகப் போச்சு! எங்க நாளிலே நாங்கள் எங்கள் அலுவலே கவனித்துக்கொண்டு சிவனேனு இருக்கலேயோ!' என்றுள் என் அத்தை.

வம்பு பேசுவது எந்தக் காலத்திலும் இருக்கத்தான் செய்தது; இப்படி அற்ப காரணங்களில் இருந்துதான் மனஸ்தாபம் ஏற்பட்டது; படுகிறது; படப்போகிறது. இது மனித சுபாவம் என்று மாலினியும் நளினு தேவியும் சொன்னுர்கள். இந்த அளவுக்கு முன்பு கிடையாது; இந்த நாளில் இப்படி வம்பு பேசும் குணம் அதிகமாக இருக்கிறது. இது சரியான பொழுது போக்கில்லாமல் சினிமா, ஷாபிங், விஸிடிங் என்று அடிக்கடி வெளியில் சென்று யோசனே இல்லாமல் பேசுவதினுல் ஏற்படுகிறது; நவநாகரீக வாழ்க்கையின் பலன்களில் இதுவும் ஒன்று என்று என் அத்தை சாதித்தாள். உன் அபிப்பிராயம் என்ன?

இங்கிலாந்து காமன்ஸ் சபை அக்ராஸனுதிபதி காப்டன் பிட்ஸ்ராய் தாம் விவாகம் செய்துகொண்டு 50 வருஷகாலம் பூர்த்தியானதைப் பாராட்டி பலர் அவருக்குக் கடிதங்கள் எழுதினர். பிட்ஸ்ராய் தம்பதிகள் வந்த கடிதங்களேப் படிக்கின்றனர் 1891-ல் இவர்கள் விவாகம் நடந்தது. காப்டன் பிட்ஸ்ராய்க்கு இப்போது வயது 72 ஆகிறது. (இ. என், பி.)

ஒரு புடவை

சுலோசனு ஒரு புதிய புடவை கட்டிக்கொண்டு எங்கள் கிளப்புக்கு வந்திருந்தாள்: ஒரு வித ஊதா வர்ணமாக இருந்தது; ஊதாவும் சிகப்பும் கலந்த மாதிரியில் இருந்தது. நடுவில் மெல்லிய சரிகைக் கோடுகள் போட்டிருந்தன. அகல் சரிகைப் பட்டி போட்ட தலேப்பு; கரை என்று வேருகப் போடவில்லே, புடவை ஒரு நாசூக்குத் தோற்றத்துடன் விளங்கிற்று.

'இதை இப்படிக் கரை வைத்துத் தைக்காமல் கட்டிக் கொண்டு வந்துவிட்டீர்களே!' என்று பங்கஜம் கேட்டாள்.

'கரை வைத்துத் தைப்பதற்குள் அவசரம் தாங்க முடியவில்லேபோலிருக்கு! கட்டிக் கொண்டு வந்துவிட்டாள்!' என்று மற்றெரு சிநேகிதி சொன்னுள்.

'உங்களுக்கு புதிய பாஷன் தெரியாதுபோலிருக்கு! அது தான் இப்படிச் சொல்லுகிறீர்கள்!' என்றுள் மாலினி.

'புதிய பாஷன் என்ன?' என்று பங்கஜம் கேட்டாள்,

'கரையே இல்லாமல் புடவை கட்டிக்கொள்ளுவது புதிய பாஷன்களில் ஒன்று. முந்தி எல்லாம் ஒரு கையில் வளேயலும், மற்றெரு கையில் கை கடிகாரமும் போட்டுக் கொள்ளுவது பாஷனுக இருந்ததா? கை கடியாரம் போட்டுக்கொள்ளுவது இப்போ அவ்வளவு பாஷன் இல்லே!' என்று நான் சொன்னேன்.

'அப்படியா? நிஜமாவா? கரைப் புடவை பாஷனில்லேயா?' என்று பங்கஜம் கேட்டாள்.

கரைப் புடவை அநாகரிகம் என்று நினேச்சு விடாதே! இதுவும் ஒரு பாஷன் என்று தான் சொன்னேன். நேத்திக்கு கறுப்பில் சுமாருக்கு அரை முழ அகலத்துக்கு சரிகைக் கரை போட்டிருந்த ஒரு புடவை பார்த்தேன். அகலக் கரைதான். இதுவும் ஒரு பாஷன் தான்!' என்றேன்.

'ஆமாம்! நானும் பார்த்தேன். ரொம்பவும் அழகாக இருக்கே என்று விலேயைக் கேட்டேன். தூக்கி வாரிப் போட்டது!' என்று நகைத்த வண்ணம் நளினு தேவி சொன்னுள்.

'புடவை எத்தனே கஜம் புடவை? என்ன விலே சொன்னுள்?' என்று பங்கஜம் கேட்டாள்.

'ஆறு கஜம் புடவை தான். நூற்றி இருபது ரூபாய்கள் விலே என்றுன். சரிதான் என்று பேசாமல் வந்து விட்டேன். புடவை என்னமோ ரொம்பவும் அழகாகத்தான் இருந்தது!' என்றுள் நளினுதேவி.

பாக்யங்களுள்

சிறந்ததும், பூஷணங்களுள் முதன்மையானதுமான கூந்தலேக் காலதாமதமின்றி கேசவர்த்தினியைக்கொண்டு பெறுங்கள்.

மூக்கையும் மோவாய்க்கட்டையையும் மாற்றமுடியாது. ஆனுல் கூந்தலேயோ வித விதமாயும் விசித்திரமாயும் பலவாறு ஜோடிக்கலாம்.

கூந்தலே ஜோடிக்கு முன்னர் கேசவர்த்தினியின் உதவியால் அபரிமிதமான கூந்தலேப் பெறுங்கள். கறுத்து அடர்ந்த கூந்தலினுல் முக அழகையும், கேசவர்த்தினியினுல் கூந்தலேயும் அழகு படுத்திக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலே: காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது. விலே அணு 12. மேற்செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலே.

ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்

சித்திரமும் சிருங்காரமும்

★

சென்ற வருஷம் உயர்தர நடிப்புத்திறமை காட்டியதற்காக எவருக்குத் தங்கபதுமை வழங்கப்படும்? அக்கௌரவத்திற்கு உரிமைபெற எவர்களது பெயர்கள் சிபார்சுசெய்யப்பட்டிருக்கின்றன? இவர்களது விவரத்தை இவ்வார இதழில் காணலாம். "பேகோ பேகோவுக்குத் தெற்கே"—"ராயல் ஆகாய விமானப்படையில் ஒரு அமெரிக்கர்"

"பேகோ, பேகோ"

விஸ்தாரமான பஸிபிக் மஹா சமுத்திரம். கண்ணுக்கெட்டும் தூரம்வரை நீல நிறம்: கடல் ஆர்ப்பாட்டமின்றி அமைதியாக இருக்கிறது: ஒரு கப்பல் மெல்ல மிதந்து போகிறது; அதில் காணப்படுபவை பிரேதங்கள்தான்! பிணங்கள் இதில் கிடக்கக்காரணமென்ன? அதில் பிரயாணம் பண்ணியவர்கள் எங்கே போய்விட்டனர்?

பேகோ பேகோ என்ற இடத்திற்குப் போய் முத்துச்சிப்பிகளைப் பொறுக்கி வரத் துணிந்த சில தீரர்கள் கதியையே அக்கப்பல் சுட்டிக்காட்டியது.

1880-ம் வருஷம்! "லாபெயா" என்ற கப்பல் சிங்கப்பூரை விட்டுக் கிளம்பிற்று: விபரீத அலுவலை முன்னிட்டு வேடிக்கையாகப் புறப்பட்டனர் சிலர்: அவர்களுக்குத்தான் என்ன துணிச்சல்? என்ன மனோதிடம்? கப்பலின் தலைவன் லார்ஸன்: பச்சாத்தாபமற்றவன். வில்லியம்ஸ் அவனுக் கடுத்தபடி அதிகாரம் வஹிப்பவன்: அவனுக்கு உதவியானவர்கள் போஸ்டர், கிரைம்ஸ் என்ற இருவர்.

மனுவேல் பெர்ரோஎன்பவன் போர்த்துகீஸிய மாலுமி: மனோவா என்ற தீவில் முத்துச்சிற்பிகள் கண்டெடுக்கலாம் என்ற ஆசை கட்டி அவன் கப்பலில் அவர்களை இட்டுச் சென்றான்: இதே ஆசை காரணமாக சிங்கப்பூர் ஹோட்டலில் இருந்து வந்த ரூபி டேலரும் புறப்பட்டாள்: மூரித்தாலும் இத் தீர புருஷர்களுடன் தான் மரிப்பது என்ற திடம் அவளுக்கும்.

மனோவா தீவைக் கப்பல் அடைந்ததும் லார்ஸன் பெர்ரோவை சமுத்திரத்தில் தள்ளி மீனுக்கு இரையாக்குகிறான்: ரூபியின் உள்ளம் கொதிக்கிறது. கப்பல் கரையை அடைந்ததும் அங்கிருந்த நாகரீகமற்ற ஜாதியார் இவர்களை வரவேற்றனர். தீவுக் கதிபதியின் புத்ரனான கெஹனேயும் வந்தவர்களுள் ஒருவன்: அவன் காதலி மலிகாவும் கூட வந்தாள். லார்ஸன் உடனே அவர்களுக்குத்தான் கொண்டு வந்த சாமான்களை பழக்கி திருப்தி செய்தான்: ஆனால் கெஹனேயின் திருஷ்டியில் ரூபி விழுந்ததுதான் தாமதம், அவனுக்கு மலியாவின் ஞாபகம் மறந்து விடுகிறது! இதனால் அத்தீவில் இருப்பவர்களைத் தன் வசப்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பம் வாய்த்ததாக லார்ஸன் எண்ணினான்.

அன்றிரவு அதிதிகளுக்கு தடபுடலாக விருந்து? அதிபதியும் பிரசன்னமாயிருந்தார். அப்போது அத்தீவில் சில வருஷகாலமாகத் தங்கி வந்த லிண்ட்ஸேயும் வந்தான்: இவர்கள் வருகையால் கெடுதி தான் ஏற்படும் என்பதை அவன் உடனே கண்டு கொண்டான்,

மறுநாள் லார்ஸன் முத்து அகப்படும் ஸ்தலத்தைப் பார்வையிட்டான்: ஜலத்தின் கீழ் அவை இருந்ததால் அவற்றைப் பொறுக்குவது கஷ்டமாகிறது, பிறகு சிலருடைய உதவியை அவன் நாடினான். இவர்கள் ஒருவர் பின் ஒருவராக இந்தக் காரியத்தில் இறங்கியதும் இறக்கின்றனர்: தீவு முழுதும் ஒரே பீதியும் கலவரமும்! இந்த சந்தர்ப்பத்தில் கெஹனே ரூபியுடன் காதல் பேசிக் கொண்டும், அவளை மணக்க ஏற்பாடு பண்ணிக் கொண்டும் இருந்தான். கடைசியில் ரூபி அவனை மணக்க சம்மதித்தாள்: உல்லாசமாக ரூபியுடன் புறப்படுமுன் முத்து பொறுக்குவதற்குத் தடை விதித்தான் கெஹனே: ஆனால் லார்ஸன் அங்கு சிலருக்கு சாராயத்தைக் கொடுத்து அவர்களைத்தன் வேலையை செய்யும்படி ஏவுகிறான். மது மயக்கம் தெளிந்ததும் அவர்கள் லார்ஸனை எதிர்த்தனர். லார்ஸன் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டான்.



பிரசித்த ஹிந்தி கவியும் பம்பாய் டாக்கியைச் சேர்ந்தவருமான ஸ்ரீ ப்ரதீபருக்கும், மிஸ் பத்ராவுக்கும் பந்த்ராவில் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது. (பி. என். கே.)

ஜோன் பென்னட்டும் ஹென்றி பாண்டாவும்.

இதற்கப்புறம் ஒரே கலாட்டா: எங்கு பார்த்தாலும் கொலை: கெஹனேயின் தகப்பனும் இறந்தான். இந்த நிலைமையில் தான் கெஹனேயும் ரூபியும் திரும்பி வந்தனர். இதனால் கெஹனே மஹத்தான கோபம் பூண்டு குற்றவாளிகளைத் தண்டிக்கப் பிரதிக்ஞை செய்தான்: இதற்காகத் தன் படையையும் திரட்டினான். இந்த சந்தர்ப்பத்தில் தன் காதலுக்கு இடையூறாக வந்த ரூபியைக் கொல்ல மலியா துணிந்து, கத்தியை எடுக்கும்போது அது நழுவி விழுந்துவிட்டது. அவ்வளவுதான்! ரூபி யாவற்றையும் உணர்ந்துகொண்டாள்! கெஹனே கூப்பிடு தூரத்திலிருக்கையில் மலியாவிடம் தான் கெஹனேயைக் காதலிக்கவில்லை என்று ரூபி கூறிவிடுகிறாள்: ரூபி படகில் ஏறிப் புறப்படுவதையும் அவன் தடுக்கவில்லை: மலியாவும் தனக்காக ரூபி செய்த தியாகத்தைப் பாராட்டுகிறாள்.

லார்ஸன் தனது கப்பல் வந்தடைந்து சாராயப்புட்டிகளை தீவுவாசிகள் மீது எறிய உத்திரவிட்டான்: இது காரணமாக அநேகர் உயிர் இழந்தனர்.

கெஹனே இந்த சமயத்தில் புத்தி சாதுர்யமாக ஒரு ஏற்பாடு செய்தான்: அதாவது சிலரை கடலில் நீந்திப்போய் படகில் ஏறி லார்ஸனையும் அவனது சகாக்களையும் திடீரென்று தாக்கும்படி உத்திரவிட்டான். பிறகு நேர்ந்த சச்சரவில் கெஹனேயைச் சுட்டுத்தள்ள லார்ஸன் குறி கொண்டிருந்ததை கண்ட ரூபி, இருவருக்குமிடையே பாய்ந்து நின்றாள்! குண்டு ரூபியைத்தாக்கியது: மறு க்ஷணம் அவள் உயிர் இழந்தாள்.

இதற்கப்புறம் கெஹனே ஒரு நிமிஷம் கூட தாமதிக்கவில்லை: கப்பலுக்குள் தன் ஆட்களுடன் பாய்ந்து, அதில் இருந்த துராத்மாக்களைக்கொன்று கட்டிப்போட்டான். கப்பலையும் சமுத்திரத்தில் மிதக்க விட்டுவிட்டான். இனி திரும்ப மாட்டார்கள் என்பது அவனுக்குத்தெரியும்! யாவும் தீர்ந்து அமைதி நிலவியவுடன் கெஹனே மலியாவை மணந்துகொண்டான்.

இது "பெகோ பெகோவுக்குத் தெற்கே" என்ற ஆங்கிலப் படத்தின் கதை. யுனைடட் ஆர்டிஸ்ட்ஸ் கம்பெனியார் படம். இதைத் தயாரித்தவர் எட்வர்ட் ஸ்மால்: உயர்தர படங்களை சிருஷ்டிப்பதில் கைதேர்ந்த நிபுணர். இதில் ஜான் ஹால், விக்டர் மக்லக்ளான், பிரான்ஸிஸ் பார்மர், ஜினிலாக்கர்ட் முதலியோர் நடிக்கின்றனர். சிறுவர்களையும் பெரியவர்களையும் மகிழ்விக்கச் செய்யும் படம் இது. இந்தப்படம் நகரில் நியூ எல்பின்ஸ்டனில் விரைவில் காட்டப்படும்.

* * * *

"ஆகாயப் படையில் அமெரிக்கர்"

இருபதாம் நூற்றுண்டு பாக்ஸ் கம்பெனியார் தயாரித்திருக்கும் மிக உயர்ந்தபடம் "எ யாங்க் இன் தி ஆர். ஏ. எப்." (A yank in the R. A. F.) என்பது: "யாங்க்" என்பது அமெரிக்கரைக் குறிக்கும் பதமாகும். இந்தப் படத்தில் டைரோன் பவர் நடிக்கிறார். அவருடன் கூட இருப்பவர் பெட்டி கிராபிள், டைரோன் பவரின் நடிப்புக்கு அலாதி மதிப்புண்டு. அவர் நடிக்கும் படம் என்றால் அதற்குத் தனிப்பட்ட கௌரவம் உண்டு.

யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பெல்லாம் பிரிட்டனிலிருந்து அநேகர் ஸ்விட்ஸர்லாந்துக்குப் போய் ஆல்ப்ஸ் மலைமீது படிந்திருக்கும் பனிக்கட்டிகளின் மீது சரிந்து விளையாடுவது வழக்கம். வெஞ்ஜன் என்னுமிடத்தில் இதேமாதிரி சிலர் உல்லாசமாகக் காலங்கழிப்பதைப் படத்தில் பார்க்கலாம்.

டிம் பெக்கர் என்ற அமெரிக்க விமான ஓட்டிக்கு ஆச்சர்யகரமானதும் பிரமிப்பூட்டுவதுமான காரியங்களைச் செய்வதில்தான் அதிக விருப்பம். ஆகவே அவன் ஒரு வெடி குண்டு விமானத்தில் லண்டனுக்குப் பறந்து செல்கிறான். அங்கு விமானப்படையெடுப்பு காரணமாக ஒரு ஹோட்டலுக்குள் அவன் நுழைகிறான், கரோல் ப்ரவுன் என்ற அழகிய யுவதியை அங்கு அவன் சந்திக்கிறான். அவள் பாட்டுகள் அவனை மகிழ்விக்கச் செய்கின்றன: ஆனால் கடைசியில் அவனை நம்ப முடியாதென்ற காரணம் காட்டி கரோல் அவனை விட்டுப் பிரிகிறாள்.

மறுபடியும் டிம் கரோலிடம் காதலைத் தெரிவிக்கிறான்: ராயல் ஆகாய விமானப் படையில் சேர்ந்து யோக்யதை நிரூபித்தால்தான், தான் மணக்க முடியும் என்கிறாள் கரோல். அவன் அவ்வாறே செய்கிறான். பயிற்சி பெறுவது அவனுக்கு வெறுப்பாக இருக்கிறது. கரோல் நடனத்தைக் கண்டிருந்த மற்ற இரு விமான ஓட்டிகள் மார்லியும் பில்பியும் அவள் விஷயத்தில் மிகுந்த சிரத்தை கொள்கின்றனர்.

மார்லியின் படையில் டிம் சேருகிறான். பெர்லின் மீது முதல் விசை பறந்தபோது துண்டுப் பிரசுரங்களை மட்டுமே போட்டுவிட்டு வந்தது. அவனுக்கு திருப்திதரவில்லை, திரும்பி வந்ததும் தான் குறித்த தினத்தன்று கரோலைச் சந்திக்க அவன் மறக்கிறான். அவளுக்கு கோபம் அதிகரிக்கிறது. கடைசியில் மார்லியின் அழைப்பை ஏற்று அவனுடன் அவனது வீட்டுக்குப் போகிறாள். அங்கு அவன் தனது காதலைத் தெரிவித்தபோது அதை அவள் திரஸ்கரிக்கிறாள்.

இந்த நிலைமையில் ஹாலந்து மீது ஜெர்மனி படையெடுக்கிறது. டிம், மார்லி, பில்பி ஆகிய மூவரும் விமானத்தில் புறப்படுகின்றனர். பில்பி சுடப்பட்டு இறக்கிறான்: டிம் இருந்த விமானம் சேதமடைந்தாயினும் இங்கிலாந்து பக்கம் திரும்பி வருகிறது. ஹாலந்தில் இங்கிலீஷ் கால்வாய்க் கருகில் விமானத்திலிருந்து டிம்மும் மார்லியும் கீழே இறங்க நேரிடுகிறது: அங்கிருந்த சில ஜெர்மன் ஸோல்ஜர்களிடமிருந்து தப்பி ஒரு சிறு செம்படவன் படகில் கால்வாயைக் கடக்க அவர்கள் ஏற்பாடு பண்ணுகின்றனர். ஒரு விமானம் துரத்தி வந்து குண்டு போட்டது காரணமாக மார்லிக்குக் காயம் ஏற்படுகிறது. இங்கிலாந்து கடற்கரையோரத்தில் அவர்கள் ஓய்ந்து போய் அவஸ்தைப்படுகின்றனர். மார்லி லண்டன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிறான். ஒரு வெடிகுண்டு விமானத்தில் போய் யுத்தம் புரியும் கடமை டிம்மிடம் விடப்படுகிறது.

புறப்படுவதற்கு முன் மார்லியைப் பார்க்க, டிம் ஆஸ்பத்திரிக்குப் போகிறான். அங்கு நர்ஸாக விருந்த கரோல் மார்லியை முத்தமிடுவதைப்பார்த்து, இனி நம்பிக்கையில்லை என்ற எண்ணத்துடன் டிம் கிளம்புகிறான்.

பின்பு டங்கர்க்கில் ராயல் விமானப்படையில் சேர்ந்த டிம், தான் எத்தகையவன் என்பதை நிரூபிக்கிறான்: கரோலுக்குத் தனது சக்தியைக்காட்டும் சந்தர்ப்பம் அவனுக்கு வாய்க்கிறது: கரோலுக்கும் அவனிடம் ப்ரீதி ஏற்படுகிறது: பிறகு இருவரும் மணக்கின்றனர்.

இந்தப்படத்தில் சிறந்த நடிகர்கள் தங்களது திறமையைக் காட்டியது ஒருபுறமிருக்க, படத்தைத் தயாரித்தவர்களும் தங்களது திறமை எதற்கும் குறைந்ததில்லை என்பதை நிரூபித்திருக்கின்றனர். சிறந்த காட்சிகள்: பிரமிக்கத்தக்க ஜோடிப்புகள்: யுத்தக்காட்சிகளைப் பார்க்கும்போது பிரமிப்பு ஏற்படுகிறது. இந்தப்படமும் சீக்கிரத்தில் நகரில் காட்டப்படும்.

* * * *

உயர்ந்த கௌரவம்

பேசும் படக்கலை, சாஸ்திரம் இவற்றை உத்தேசித்து நடந்து வரும் அகாடமியார் பிரதி வருஷமும் அளிக்கும் "ஆஸ்கார்" என்ற கௌரவத்தை பெட்டி டேவிஸ் என்ற பிரபல நடிகை இரு முறை ஸ்வீகரித்திருக்கிறார். கடந்து போன வருஷத்தில் எவருடைய நடிப்பு உன்னதமாகக் கருதப்படுகிறதோ அவருக்கு இந்த கௌரவம் அளிக்கப்படுகிறது. மூன்றும்

(28-ம் பக்கம் பார்க்க)



பம்பாயில் ஸ்திரீகளும் "ஹாக்கி" ஆடுகின்றனர். ஸ்திரீகள் ஹாக்கி லீக்கின் ஆட்டப்போட்டியில் "ப்ராக்டர் லேடீஸ்" கோஷ்டியும் கலந்து கொண்டன. —(ஜி. எஸ். ஏ.)

கடற்கரை மோஹினி

★

ஒரு வேவுகார கதை

★

டிங்கியின் பார்வை அவனது காதலியின் முகத்தின் மீது திரும்பியது. என்ன ஆச்சரியம்! அன்பையும் இன்பத்தையும் வருஷித்த அதில் கொடிய பெண் புலியின்ஆக்ரோஷம்தென் பட்டது: பின்பு என்ன நடந்தது? முடிவு என்ன ஆகியது? அந்த ஸ்திரீ பெண் புலியாக மாறக் காரணமென்ன? கதையைப் படித்தால் விஷயம் பூராவும் தெளிவாகும்.

★

லெப்டினன்ட் டிங்கி இருபதுபிராயம் நிரம்பாத இளைஞன். எனினும் அவனுக்கு ராணுவ அதிகாரிகளால் ஒரு பொறுப்பான உத்தியோகம் அளிக்கப்பட்டிருந்தது. அதற்குக் காரணம் விமானம் ஓட்டுவதில் அவன் காட்டிய திறமையே.

அவன் புரிய வேண்டிய யுத்த கால சேவை இதுதான். இங்கிலாந்தின் கிழக்கு எல்லையில் 60 மைல்கள் விஸ்தீர்ணமுள்ள கடற்கரையில் அவன் ஒவ்வொரு இரவின் முற்பகுதியில் காவல் புரிய வேண்டியது: தினமும் அவன் இருட்டும் சமயத்தில் கடற்கரையிலுள்ள விமான நிலயத்திலிருந்து தன்னுடைய விமானத்துடன் கிளம்பி அறுபது மைல்களுக்கு அப்பாலுள்ள அடுத்த நிலையத்துக்கு ஓட்டிச் செல்வான், கடற்கரையோரமாய் பறந்து ரோந்து புரிந்த அவனது கடமை எதிரி கப்பல்கள், விமானங்கள் ஏதேனும் வருகின்றனவா என்று கவனிப்பதேயாம்.

டிங்கி தன்னுடைய வேலையில் மிகவும் உஷாராக இருந்தான். அவனது சேவையை மேலதிகாரிகள் மெச்சினர், விமானம் ஓட்டுவதில் அவன் காட்டிய சாமர்த்தியத்தையும் காவல் புரிவதில் அவன் காட்டிய சுறுசுறுப்பையும் அறிந்தவர்கள் அவனுக்கு சீக்கிரத்தில் உத்தியோக உயர்வும் கிட்டும் என்று எதிர் பார்த்தனர்.

எனினும் எதிர் பாராத சம்பவம் ஒன்று குறுக்கிட்டது. அது அவனுக்கு பெரிய கேட்டை விளைவித்திருக்கும்: அதிர்ஷ்டவசமாய் அவன் கடைசியில் விழித்துக்கொண்டு தனது தவறை உணர்ந்துகொண்டான். இல்லாவிடில் அவனுக்கு அபகீர்த்தியும் அவமானமும் ஏற்பட்டிருக்கும்.

ஒரு நாள் சாயந்திரம் அவன் தன்னுடைய விமானத்தில் வழக்கம் போல் ரோந்து சுற்றப் புறப்பட்டான். பாதி தூரத்தில் ஏதோ யந்திரக்கோளாறு ஏற்பட்டதினால் அவன் விமானத்தை கீழே இறக்க வேண்டி நேரிட்டது. கடற்கரைக்கு அருகாமையிலுள்ள ஒரு தனி இடத்தில் இறங்கின. அவன் தனது விமானத்தை விட்டுவிட்டுச் சுற்று முற்றும் நோக்கினான்.

நிர்மானுஷ்யமாயிருந்த அந்தப் பிரதேசத்தில் ஒரு சிறு தோட்டம் காணப்பட்டது. அதன் மத்தியில் ஒரு வெண்மையான கட்டிடம் இருந்தது டிங்கியின் நாட்டத்தில் பட்டது.

மனித சஞ்சாரமற்ற அந்தப் பக்கத்தில் இருந்த அத்தனி வீட்டில் யார் வசிக்கக்கூடும் என்று அதிசயித்த அவன் அங்கே சென்று விசாரிப்பது என்று தீர்மானித்தான். உடனே அவன் தோட்டத்துக்குள் நுழைந்து வீட்டின் வாசலை யடைந்தான்.

உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்தது. வெளியே சந்திரிகையின் இனிமையையும் மெல்லிய கடற்காற்றின் இன்பத்தையும் அனுபவித்து நின்ற அவ் விளம்புருஷன் அழகே உருவெடுத்தாற்போல் தோன்றிய ஒரு மடந்தை தன் முன் தோன்றியதை உணர்ந்தான்.

அவ்வடிவழகியின் எழிலை தனது கண்களால் பருகினான் விமான வீரன். அவளும் அவனை நோக்கியவண்ணம் அசைவற்று நின்றாள்.

தான் திடீரென்று அங்குவந்ததின் காரணத்தைக்கூறி டிங்கி தன்னை அவளுக்கு அறிமுகப் படுத்திக்கொண்ட பின் "நீங்கள் இங்கே தனிமையாய் இருப்பது போல் தெரிகிறது. யுத்தகாலத்தில் கடற்கரை யோரமாய் இப்படி வசிப்பது அபாயகரமானது. தகுந்த துணையின்றி இருக்கலாமா?" என்றான்.

கலகலவென்று ஒலித்த அவளது சிரிப்பு அவன் செவியில் வீணைகானம் போல் இருந்தது. "லண்டனின் ஆரவாரத்தை சகிக்கமுடியாமல் நான் இங்கு வந்தேன். ஏகாந்தத்தின் இனிமையை நான் இங்கு முற்றிலும் அனுபவிக்கிறேன், அபாயத்தைப்பற்றி எனக்கு அக்கரையில்லை. மேலும் கல்களைப் போன்ற வீரர் காவல் இருக்கும் பொழுது எதிரி யாரும் இந்தப் பக்கம் தலைகாட்டமாட்டான்" என்றாள்.

பின்னர் அவள் டிங்கியை சிற்றுண்டி அருந்த அழைத்தாள். அந்த இளமங்கையின் வேண்டுகோளை அவன் மறுப்பானா? தேனைப்பருக விரும்பாத வண்டும் உண்டோ?

ஒரு மணிக்குப்பின் அவன் தனது விமானத்தை சரிப் படுத்திக்கொண்டு புறப்பட்டான். அவனால் கண்டுபிடிக்கப் பட்ட மடமயிலாள் அவனை எளிதில் விட்டுவிடக் கூடியவளன்று. அவன் மீது அவள் கொண்ட பிரேமை அஸாதாரணமன்று என்பது அவள் அவனிடம் நடந்துகொண்டதிலிருந்து புலப்பட்டது, அவன் மறு நாள் சாயந்திரம் அவ்விடம் வருவதாக வாக்களித்த பின்னர் தான் அவள் அவனுக்கு விடை கொடுக்க சம்மதித்தாள்.

அவன் தன் வார்த்தையில் தவறவில்லை. கடற்கரையில் வசித்த கட்டழகியின் வீட்டருகே அவனது விமானம் இறங்கியது. அதிலிருந்து வந்த அவன் அவளுடன் பொழுது போக்காக நேரத்தை கழிக்கலானான். அவள் கொடுத்த உணவு வகைகளை அருந்தினான். அவளது பேச்சால் மயங்கினான். தனது கடமையை மறந்து அவளுடன் குலாவ ஆரம்பித்தான்.

நாட்கள் பல சென்றன, டிங்கி கடற்கரையில் விமான ரோந்து புரிவதாக பெயரேயன்றி அது உண்மையான விஷயமன்று. தான் காவல் புரியவேண்டிய பொழுதின் பெரும்பாகத்தை அவன் கடலோரத்தில் வசித்த வனிதாமணியுடன் கழித்தான். அப்படிச் செய்வதால் தனது நாட்டுக்கு ஏற்படக் கூடிய அபாயத்தை அவன் உணரவில்லை. தனது அஜாக்கிரதையின் காரணத்தால் எதிரிகளது கப்பல்களும் விமானங்களும் அப்பிரதேசத்தில் திருட்டுத்தனமாய் வரக்கூடும் என்பதைப் பற்றி அவனுக்கு துளிக்கூட சிந்தனை இல்லை.

அவனது உத்தியோகத்திலும் அவனது நடவடிக்கைகளிலும் மிகுந்த அக்கரையை காட்டினாள் அவனுக்கு புதிதாய் ஏற்பட்ட காதலி. அதுமட்டுமன்று. அந்தப் பிரதேசத்தின் காவல் விஷயமாய் ராணுவ அதிகாரிகளால் ஏற்படுத்தப்பட்ட திட்டத்தைப் பற்றிய பூராவிவரங்களையும் அவளுக்கு அவன் தெரிவித்து விட்டான். காமத்தால் மதியிழந்த அவனது பேதமை தான் என்னே!

அன்றிரவு வெகுநேரம் கழிந்துவிட்டது. காதலர்கள் இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிய மனமில்லாமல் தயங்கினர். ஆனால் இன்னும் தாமதம் செய்வது பிசகு என்று எண்ணிய விமானவீரன் தன்னுடைய அன்பைக் கொள்ளைகொண்டு விட்ட கட்டழகியை நோக்கி, "கண்மணி! எனக்கு விடை கொடு! நேரம் ஆகிவிட்டது. நான் புறப்படவேண்டும்" என்றான்.

"இன்னும் கொஞ்சநேரம் இங்கே இருக்கக்கூடாதா?" என்று கொஞ்சினாள் அந்தக் காதலி.

"என்னுயுள் முழுவதையுமே உன்னருகே கழிக்க நான் சித்தமாயிருக்கிறேன். ஆனால் என்ன செய்வது? என் உத்தியோகம் அதற்கு இடங்கொடுக்கவில்லையே!" என்றுவருந்தினான். இளங் காதலன் பிரிவினால் சோர்ந்து விழுபவள் போல் தோன்றிய பெண்மணியை டிங்கி எடுத்து அணைத்துக் கொண்டான். அவளை ஒரு சோபாவில் உட்காரவைத்து அவள் கரங்களை அன்புடன் பற்றினான். அச்சமயம் அவனது கரம் ஸோபாவின் மூலையில் வைக்கப்பட்டிருந்த ஒரு வஸ்துவின்மீது பட்டது. அது என்னவென்பது அவனுக்கு அந்த வினாடியில் தெரிந்துவிட்டது. அது குண்டுகளுடன் நிரம்பிய துப்பாக்கி.

அதே சமயம் அவனது பார்வை அவனது காதலியின் முகத்தின்மீது திரும்பியது. என்ன ஆச்சரியம்! அன்பையும் இன்பத்தையும் வருஷித்த அதில்கொடிய பெண் புலியின் ஆக்ரோஷம் தென்பட்டது. தன்னைக் கொல்ல நினைக்கும் சத்துருவின் நோக்கே அது என்பதை அவன் உணர்ந்துகொண்டான்.

மறு வினாடி அவன் சடேரென்று எழுந்தான். தன்னை விடாமல் பற்றிய பெண் புலியை தள்ளிவிட்டு வெளியே ஓடினான். விமானத்தில் ஏறிக்கொண்டு அதை உயர முடுக்கினான்.

'டப், டப்' என்று குண்டுகள் சப்தித்தன. அவனை மயக்கி மரணயாத்திரைக்கு அனுப்ப நினைத்த பெண் பேய் அவனைத் துரத்திக்கொண்டு வெளியே ஓடிவந்து அவனைச் சுட்டு வீழ்த்த முயன்றாள். ஆனால் குண்டுகள் அவன்மீது படவில்லை.

அதே சமயத்தில் அருகாமையிலிருந்து ஒரு விமானம் பறப்பது அவனுக்கு புலப்பட்டது. உடனே அவன் அந்தத் துரத்திக்கொண்டு சென்றான். நல்ல வேளையாய் அவன் விமானத்தில் போருக்குரிய சாதனங்கள் இருந்தன. எதிரி விமானம் சமுத்திரத்தில் வீழ்த்தப்பட்டது. ஆனால் டிங்கியின் விமானமும் விபத்துக்குள்ளாகியது. அது சமுத்திரத்தில் விழுந்ததால் அவன் காயங்களுடன் தப்பினான். இல்லாவிடில் அவன் உயிர் துறந்திருப்பான் என்பதில் ஐயமில்லை.

அறியாமையாலும், யெளவனத்தின் சபலத்தாலும் தனதுகடமையில் தவறிய டிங்கி கழிவிரக்கங்கொண்டான். கடற்கரையில் அவனுக்கு காக்ஷியளித்த மோகினி உண்மையில் ஒரு ஜெர்மன் வேவுகாரியே என்பது அவனுக்குப் பின்னர் தெரிய வந்தது. அவனது காதலியாய் நடித்து அவனிடமிருந்து கிரகித்துக்கொண்ட விஷயங்களை அவள் ஜெர்மன் வேவு அதிகாரிகளுக்கு ரகசியமாய் அனுப்பிவந்தாள் என்பதைத் அவன் உணர்ந்தபின் அவன் அடைந்த வருத்தம் இவ்வளவு அவ்வளவு அன்று. அவனது மேலதிகாரிகள் அவனை மன்னித்துவிட்டனர்: எனினும் அவன் தனது தவறுதலை நினைக்கும்பொழுது அவன் பட்ட வேதனையின் கடுமையை எப்படி கூறுவது.

அன்றிரவு அவனுக்கு ஏற்பட்ட அனுபவத்துக்குப்பின் அவன் கடற்கரை மோஹினியை சந்திக்கவில்லை. அவள் மாயமாய் மறைந்துவிட்டாள். இனி அவள் அவனுக்கு அகப்படக்கூடியவளன்று.

சந்தோஷமான குழந்தைப் பருவம்

குழந்தைப் பருவம் சந்தோஷமாக இருந்தால் ஆரோக்யமான குழந்தையாகத்தானிருக்கவேண்டும். ஆரோக்யமுள்ள குழந்தைகள் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கும். மலம்தவறாமல் வெளிப் படுவதே ஆரோக்யத்திற்கு அடையாளமாகும்.



Ba-Ba Water

(பா - பா வாடர்)

குழந்தைகளது அமிர்தம். எங்கும் விற்கப்படுவது.

பா-பா வாடர்

மான்யுபாக்சரிங் கம்பெனி,

ஹைதராபாத், (தக்காணம்)

B W 3

(26-ம் பக்கத் தொடர்ச்சி)

விசையும் இவருக்கு இதைக் கொடுக்க சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. சென்ற வருஷம் "லிட்டில் பாக்ஸஸ்" என்ற படத்தில் இவர் திறமையாக நடித்திருப்பதே இதற்குக் காரணமாம். "ஸஸ்பிஷன் படத்தில் நடித்த ஜோன் பாண்டேன், "ப்ளாஸம்ஸ் இன் தி டஸ்ட்" என்பதில் தோன்றிய க்ரீர் கார்ஸன், "ஹோால்ட் பேக் தி டான்" என்ற படத்தில் நடித்த ஒலிவியாடி ஹாவிலந்து, "பால் அப்பையர்" என்பதில் தோன்றிய பார்பாரா ஸ்டான் விக், "ஸார்ஜண்ட் யார்க்" என்ற படத்தில் நடித்த காரிகூப்பர் "பென்னிஸிரனேட்"டில் தோன்றிய காரி கிராண்ட், "ஆல் தட் மணி கேன் பய்" என்பதில் வரும் வால்டர் ஹஸ்டன், "ஹியர் கம்ஸ் மிஸ்டர் ஜோர்டன்" என்பதில் பங்கெடுத்துக் கொண்ட ராபர்ட் மங்கோமரி, "ஸிடிஸன் கேன்" என்பதில் நடிக்கும் ஆர்ஸன் வெல்ஸ்— இவர்களும் அந்தந்தப் படத்தில் சிறப்பாக நடித்திருப்பதற்கு இக் கௌரவத்திற்கு அருகதை வாய்ந்தவர்கள் என்று சிபார்சு பண்ணப்பட்டிருக்கிறது. சினிமாத் தொழிலில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கானவர் இந்தத் தேர்தலில் கலந்து கொள்வார்கள். போட்டியில் முதல் நிற்பவருக்கு இம்மாதம் 26-ம் தேதி கௌரவத்தின் அறிகுறியான தங்கப் பதுமை வழங்கப்படும். அச்சமயம் மிஸ்டர் வெண்டல் வில்கி பிரசன்னமாயிருப்பார்.

* * * *

யுத்த முயற்சி பற்றிய படங்கள்

"பல கஷ்டங்களுக்கிடையே, இந்தியாவைப் பற்றியும், இந்திய யுத்த முயற்சிகளைப் பற்றியும் சிறு சலனப் படங்கள் சென்ற வருஷம் தயாரிக்கப்பட்டுள்ளன.

"இது விஷயமாக இந்தியாவில் ஒரு வருஷ வேலை செய்து விட்டுத் திரும்பிய மிஸ்டர் அலெக்ஸாண்டர் ஷாவைக் கண்டு நான் பேசினேன். இவரால் அங்கு ஆரம்பித்துவைக்கப் பட்ட படம் பிடிக்கும் கோஷ்டியார் 25 படங்கள் பிடித்திருக்கிறார்களாம். இவற்றில் சில, சிங்கப்பூர், கெய்ரோ, ஸிட்னி ஆகிய இவ்விடங்களில காட்டப் பட்டனவாம். இந்தியர்களுக்கு காட்டுவதற்காக ஆங்கிலம், வங்காளம, தமிழ், தெலுங்கு, மராத்திபுஷ்டு, ஆகிய ஆறு பாஷைகளில் படங்கள் பிடிக்க வேண்டியிருக்கிறது. உலகத்திலேயே மிக்ச்சிறந்த டெக்னிக் வேலை தெரிந்த சிலர், இந்தியாவில் உள்ளனர் என்று மிஸ்டர் ஷா தெரிவித்தார்.

இந்தியாவைப் பற்றியும், அதன் யுத்த முயற்சியைப் பற்றியுமுள்ள டாக்குமெண்டரி படங்கள் நாடெங்கும காட்டப் படுகின்றன" என்று "டெய்லி டெலிக்ராப்" சினிமா நிருபர் எழுதுகிறார்.

* * * *

சுமத்ராவில் ஜப்பானிய படை

சுமத்ராவின் தென் கிழக்கு பாகத்திலுள்ள பலம் பாங்கிற்கு அருகில் ஜப்பானிய பாரசூட் படைகள் இறங்கிவிட்டன.

* * * *

டோவர் கடற்போர்

டோவர் கடற்போரில் ஜெர்மன் யுத்தகப்பல்களை எதிர்க்க 600 பிரிட்டிஷ் விமானங்கள் அனுப்பப்பட்டன. இவைகளில் 300 குண்டு வீச்சு விமானங்கள். 300 சண்டை போடக்கூடியவை என அதிகாரிகள் கூறுகின்றனர்.

* * * *

ரூ. 5,000 வெகுமதி

24 மணி நேரத்தில் யௌவனமாகலாம்.

சோர்வு, களைப்பு முதலியவற்றால் அவதிப்பட்டு, நவீன வாழ்க்கையின் இன்பங்களை அனுபவிக்க முடியாமல் அவதிப்பட்டாலும், அகால வயது, வீர்யக்குறைவு, குறைவான ஜீவசக்தி, மந்தம், ரத்தமின்மை, பித்தம், ரத்தக் கொதிப்பு மனச்சோர்வு, பசியின்மை ஞாபக மறதி, தூக்கமின்மை முதலிய சங்கடங்களிருந்தாலும், விடமின் ஔஷதமான "எவர்ஷைன்" உபயோகியுங்கள். சமீபத்திய சாஸ்திரீய ஆராய்ச்சியின் வெற்றி. 24 முதல் 48 மணிக்குள், வீர்யம், வன்மை ஆச்சரிய வகையில் அதிகரிப்பதுடன், பலம், ஆரோகயம் ஒரு வாரத்திற்குள் 100 மடங்கு அதிகரிக்கும். முகத்தில் ஏற்படும் பிரகாசத்தை பிரதி தினமும் கவனித்து வாருங்கள். வாரா வாரம் எடையை கவனித்து எடை அதிகரித்திருப்பதை கவனியுங்கள். "எவர்ஷைன்" வன்மை, வீர்யத்தை அளித்து 25 வயதுள்ளவராகச் செய்வதைப்பாருங்கள். ஸ்விட்ஜர்லாந்தில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு பரீக்ஷித்த பின் இப்பொழுது இந்தியாவில் கிடைக்கிறது.

விடமின் ஏ. பி. வி. டி. & இ. அடங்கியதும் யௌவனம், வன்மை, வீர்யம் அளிக்கத்தக்கதுமான "எவர்ஷைன்" தயாரிப்பிற்கு புரொபஸர் ஏ. பி. டேவிஸ், பலநாள் ஆராய்ச்சிக்குப் பின் "எவர்ஷைன்" தயாரிப்பிற்கு ஒரு புது முறை ஏற்படுத்தியுள்ளார் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இது மருந்தல்ல. இயற்கை உணவாகும். எக்காலத்தும், எந்த வயதிலும் ஆண், பெண் அனைவரும் உபயோகிக்கலாம். முகத்தோற்றம் அபிவிருத்தியடையும். உங்களுக்கு ஏற்படும் பௌருஷத்தை கண்டு அனைவரும் பிரமிப்பார்கள். வசீகரமில்லாமலும், முகம் சருக்கத்துடனுள்ள ஸ்திரீகள் இதன் உபயோகத்தால் பள்ளி மாணவிகளுக்குள்ள புது சோபையைப் பெறுவார்கள். "எவர்ஷைன்" உபயோகிக்கும் ஒவ்வொரு ஆண், பெண்ணிற்கும் சந்தோஷமான நாட்கள் ஆரம்பமாகும். இம்மருந்தை இந்தியாவில் பிரபலப்படுத்த விலை ரூ. 3 என நிர்ணயித்துள்ளோம். இந்த விலை சில காலம்தான. பின்பு இதன் விலை ரூ. 15. இம்மாதிரியான அதிசயம் வாழ்க்கையில் ஒரு முறைதான் சம்பவிக்கும். இன்றே ஆர்டர் செய்யுங்கள். நாளை தாமதமாகிவிடலாம்.

குறிப்பு:—எமது அற்புத தயாரிப்பு பலனில்லையென நிரூபிக்கும் எந்த வைத்யர் அல்லது பொது மக்களுக்கு ரூ. 5,000/- ரொக்க வெகுமதியளிக்கப்படும். கடிதங்கள் ஆங்கிலத்திலேயே இருக்கவேண்டும்.

கிடைக்குமிடம் :

THE ROYAL CHAMBER OF SCIENCE.,

P. O Box No.82, (SW) CALCUTTA.

சுத்த சவரன்

தங்கத்திலிருந்து

வீகம்ஸி நகைகள் செய்கிறார்கள்

VEECUMSEE

CHABILDOSS & SONS

JEWELLERS & DIAMOND MERCHANTS

ESTABLISHED: 1893

CHINA BAZAAR ROAD, MADRAS

அட்டைப் படம்

பெட்டிக்ராபிளும் டைரோன்பவரும், இருபதாம் நூற்றாண்டு பாக்ஸ் கம்பெனியாரின் "எ யாங்க் இன் தி ஆர். எ. எப்" என்ற படத்தில் நடிக்கும் காட்சி.

ரூ. 50,000 மதிக்கப்பெற்ற நகைகள்.

பொது மக்களுக்கு அளிக்கப்படுகின்றன



"லண்டன் நியூ கோல்டால்" இப்பொழுது புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டவை. இதை உலகத்தின் எட்டாவது அதிசயம் என்றே சொல்லலாம். இது இப்பொழுது இந்தியா முழுவதும் பிரபலமாகிவிட்டதால், இதை இன்னும் பிரபலப்படுத்தவேண்டிய அவசியமுமில்லை. பொதுமக்களும, பத்திரிகைகளும் இதையே அதிகமாகப் புகழ்கிறார்கள். இந்த கெமிகல் தங்கத்தின் நிறம் மாறாமலிருப்பதால் இதிலிருந்து நல்ல நகைகள் செய்யலாம்.

இதை பிரபலப்படுத்துவதற்காக இப்பொழுது 6 தோல "லண்டன் நியூ கோல்ட்" 2ஜதை வளையல்கள் 2 ஜதை தோடுகள் 2 மோதிரங்கள் மிகவும் அழகாகச் செய்யப்பட்டதுமான நகைகள் சாம்பிளாக அனுப்பப்படும் இந்த குறைந்த கட்டணம் சில நாட்களுக்குத் தான். உடனே எழுதவும்.

இலவசம்:—விவரங்கள் அடங்கிய படங்களுடன் கூடிய காட்லாக் இனும்

London Commercial Co.,

(EAB) Post Box 165 (S M M) LAHORE (India)

இனம்! இனம்!! இனம்!!!

'திருவாசகத்தின் பெருமை' என்ற புத்தகம், விலாசம் தெரிவிப்பவர்களுக்கு இனம்.

ஒற்றுமை ஆபீஸ்,

தியாகராய நகர் : : மதராஸ்.

IMMEDIATE VASHIKARAN

On contract basis we undertake to influence or subjugate like spellbound any one or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps SANTI ASRAM, Dacca (Bengal)

நான் சாதரணமாக எல்லாத்துக்கும் செக்கு கொடுக்கறது வழக்கம். செக்கு வேணும்னு கொடுக்கறேன்.

ஜக:—செக்கா ஆ! அது ஏக Delay (தாமதம்) ஆகும் சார். எனக்கு அந்த Bother (தொந்திரவு) வாணும். வீட்டில் ஏதாவது 4, 5, ரூபாயாவது இருக்கும் பாருங்கோ?

ஆத்:—(மேஜையைத் திறந்து தடவி, அங்கு மிங்கும் தேடுவதுபோல் பாசாங்கு செய்து, கடைசியில் ஜேபியிலிருந்து இரண்டு ரூபாயை எடுத்து) இருக்கரதெல்லாம் இந்த இரண்டு ரூபாய்தான்...இது எந்த மூலைக்கு ஓங்களுக்கு......

ஜக:—What apity என்ன கஷ்டம் (ரூபாயை அவன் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டு)...ஸரி...ஸரி...இதுலே பாதினய ஏவினு ஒரு மணிக்குள் 1000 ரூபா கொண்டுவந்துடாதா?...நானும் வரேன்... Night (ராத்திரி) வந்து பார்க்கரேன் Good bye (போய் வரேன்) (போகிறான்)

ஆத்:—ஓங்க ஜாகை எங்கே?...இங்கயே சாப்பாட்டுக்கு வாங்களேன்...ஓங்களோடு போலீஸ் ஸ்டேஷனுக்கு க்ளார்க்கை வாணு அனுப்பட்டுமா!... என்ன அவசரக்காரர் பறக்கரூரே...

வரதா:—காலங்கார்த்தாலே 1000 ரூபாயைப் பறி கொடுத்தவன் பறக்காத ஊறுவானு?

ஆத்:—இவரெ எங்கேயோ பாத்தமாதிரி இருக்கே!...

வர:—ஆனு ஆள் தெரியாதையா இத்தனைநாழிபேசினுரே. ஆனு சேலம் ஜில்லா பேர் வழியா எனக்குத தோனலே?

ஆத்:—இந்த fellows (ஆசாமியை) எங்க வேணுமானுலும் பாக்கலாம்.

வரத:—சொல்ல மறந்துபூட்டேனே... நேத்து சாயங்காலம் திவானபஹதூர் கணபதி அய்யர் வீட்டிலேந்து உங்களைக் கூப்பிட ஆள்வந்தான். Tanjore murder Case appeal (தஞ்சாவூர் கொலை வழக்கில் அப்பீல்) பண்றதுக்கு உங்களை ஐயர் வரச் சொன்னுர். நீங்க க்ளப்லேந்து வரலே. நான் போய் சொன்னதும் ரொம்ப கோவமா பேசினுர். ஏகத்தாரா. வாய்க்கு வந்தமாதிரியல்லாம் வார்த்தையே விட்டுட்டார்...

ஆத்ம:—What did he say? (என்ன சொன்னுர் அவர்?) என்ன ஸார்,...சொல்லுங்கோ.

வரதா:—ரொம்ப விகாரமானவார்த்தையல்லாம் வந்துடுத்து, ஜூனியர்கள் அஜாக்ரதை. மரியாதை தெரியரதில்லே. பணத்துக்கு மட்டும் ஆசை. வேலை தெரியாது அப்படி அப்படி...

ஆத்ம:—ஆஹா! 'அப்படியா?......அந்த கிழவருக்கு அவ்வளவு இறுமாப்பா: இருக்கட்டும், காண்பிக்கிறேன் ஒரு நாளைக்கு.' இவரை காக்காய் பிடிச்சுண்டு இவரண்டை தொங்கரத்துக்கு நான் என்ன இவர் பிள்ளையா, மாப்பிள்ளையா, அல்லது சம்பளக்காரனு? இல்லே, இல்லே, இவர் மாத்திரமில்லே எல்லா ஸீனியரும் அப்படிதான்...வர பீஸெல்லாம் வாங்கி பை நிறைய போட்டுண்டு வேலை எல்லாம் ஜூனியர் மேலே போட்றது...... இந்த Nonsense (அபத்தம்) எல்லாம் என்னண்டை முடியாது. ஒரு நாள் இல்லாப்போனு ஒரு நாள் ஒரே உதை ஒதச்சி எல்லாத்தையும் ஒழிச்சு தொலைச்சுடரேன் பாத்துக்கோ.

வரதா:—சரிதான்...அப்பீல்லே Client (கக்ஷிக்காரன்) கதி என்னுவாரது! அவன் Complaint (புகார்) பண்ணினு?...

ஆத்ம:—அவன் கிடக்கிறுன்! He be hanged.

வரதா:—அதுக்கு சந்தேகமில்லே...... அதுவும் இங்கே வந்தா வேறென்ன கிடைக்க போறது அவனுக்கு......!

மெள்ள குஞ்சிதபாதமய்யர் வருகிறுர்

குஞ்சி:—ஸார் நீங்கதானே ஆத்மாராமராவ்?

ஆத்ம:—ஆமாம்? நான்தான். என்ன விசேஷம்?

குஞ்சி:—கொஞ்சம் Private business (ரகஸ்ய ஜோலி) ஆ வந்திருக்கேன்.

ஆத்ம:—அப்படி ரொம்ப Urgent (அவசரம்) ஆனு இப்பவே வந்துட்டேன்... கொஞ்சம் பொறுக்கலாம்னு இதோ என் கிளார்க்கோட கொஞ்ச சில்லரை business finish (வேலையை முடிவு) பண்ணிண்டு வந்துடரேன்? என்ன?

குஞ்சி:—மெதுவா ஆகட்டும்! Dont hurry on my account. (எனக்காக அவசரம் வேண்டாம்) நான் வெயிட் பண்ணறேன், இன்னிக்கி இதான் கடைசி house (வீடு) நான் போகப்போரது.

ஆத்மா:—Thank you (ரொம்ப வந்தனம்) இதோ ஆய்போச்சு. அந்த bundle (கட்டு) இந்த Teapoy (டீபாய்) மேலே வெச்சுடுங்கோ.

குஞ்சி:—பாதகமில்லே! எங்கிட்டவே இருக்கட்டும். இது ஒரு பளுவா.........

Moreover they are confidential papers (தவிரவும் அவை ரகஸ்ய கட்டுகள்)

ஆத்மா:—Very Good (ரொம்ப நல்லது) Look here, Clerk (க்ளார்க், இங்கே பார்!) ஜல்தி! அவர் வெயிட் பண்ராரே தெரியலே!

வரதா:—Yes sir! (ஆமாம், ஸார்). இதோ வந்தேன்.

ஆத்ம:—Short—hand Clerk (ஷார்ட் ஹாண்ட் குமாஸ்தா) எங்கே ஸார்? அவன் ஏன் இன்னும் வரலே?

வரதா;-தெரியலேயே...அடே நாதமுனி அந்த Fellow (பயல்) வும் லீவில் போயிருக்கான். இப்ப வந்துடுவார்னு நெனைக்கிறேன்.

ஆத்ம:—Nonsense (அபத்தம்). அதுவரைக்கும் என்னுலே வெயிட் பண்ண முடியுமா? சரி சரி. நீதான் எழுதிக்கணும் கூடியவரைக்கும்...எங்கே... ஆகட்டும் ...Look sharp (சீக்கிரம் நடக்கட்டும்.)

வரதா!—(கையில் நோட் புஸ்தகமும் பென்சிலும் எடுத்து) Ready Sir (தயார் ஸார்!)

ஆத்ம:—அதிருக்கட்டும்! அந்த நகரி ஜமீன்தார் கிட்டேந்து Reply Telegram (பதில் தந்தி) வந்துதா?

வரதா:—இன்னும் ஒண்ணும் காணும்.

ஆத்ம:—ஆனு இந்த Wire (தந்தி) இப்பவே express (எக்ஸ்பிரஸ்)லே அனுப்பு. Take down...(எழுதிக்கோ) other side pressing offering retainer 5000 if your retainer not recived before six will accept engagement opposite side wire immedietly. (எதிர்க்கக்ஷி தொந்திரவு செய்கிறுர்கள், முன் பணம் 5000 ரூபா. உங்கள் முன் பணம் 6-மணிக்குள் வராவிட்டால் எதிர்க்கக்ஷிக்கு ஒப்புக்கொள்வேன் உடனே தந்தி.) ஆச்சா! அந்த fellow (பயல்)க்கு புரியுமோல்லியோ இது.

வரதா:—இதிலென்ன கஷ்டம்; எதிர் ஸைட்டிலே 5000 ரூபாய் Retainer (முன் பணம்) கொடுக்கறேங்கரா. ஓங்க தொகையே உடனே தந்தி மூலம் அனுப்பாப்போனு எதிர் ஸைடுக்கு Appear (ஆஜர்) ஆவோம்னு அடிக்கிறோம்!

ஆத்ம:—எனக்கே புரிஞ்சு போச்சே, இன்னமே பயமில்லே. ஹ, ஹா ஹா; மேலே எழுது;

வரதா;—Ready Sir! (தயார் ஸார்!)

(தொடரும்)

ஜானகியின் மறுமணம்

(6-ம் பக்க தொடர்ச்சி)

எவனுவது அவளுக்காகவே அவளை கல்யாணம் செய்து கொள்ள வருகிறுனு என்று பார்க்க ஆசைப்பட்டார்.

"ஆனல் எப்படி...?" முதலியார் பேச கர்ணம் இடம் கொடுக்கவில்லை.

"ஆனுல் ஒரு விஷயத்தில் சந்தோஷம். நான் ஜானகியை அவள் இரண்டு வேலி நிலத்திற்காக கலயாணம் பண்ணிக் கொள்ள ஆசைப்படுவதாக நினைப்பீர்கள். ஆனுல் அப்படியில்லை. அவளுக்கு சொத்து இருந்தாலும் சொத்து இல்லாவிட்டாலும் எனக்குக் கவலையில்லை, அவளை ரொம்ப நாளாக கவனித்து வருகிறேன். அவளுடைய தங்கமான குணத்திற்காகவே நான் கல்யாணம் பண்ணிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உங்களுக்கு ஒருவித தடையுமில்லையே"

"எனக்கு சம்மதம் தான் ஆனுல் ஜானகி சம்மதிக்க வேண்டாமா?"

"நீங்கள் சொன்னுல் அவள் மாட்டேன் என்பாளா? இன்னும் எத்தனை நாள் உங்கள் மனைவியிடம் அவள் கஷ்டப்பட வேண்டும்?" என்றுன் கர்ணன்.

"ஊரிலிருக்கிறவர்கள் விதவா விவாகம் என்றுல் சம்மதிப்பார்களா?"

"அதைப்பற்றி கவலைப்பட வேண்டாம். அவனவன் வீட்டு காரியத்தை அவனவன் பார்த்து கொள்ளுகிறுன்! இதில் இன்னொருத்தன் பேச்சு என்ன இருககு? மேலும் இந்தியாவில் எத்தனை பால்ய விதவைகள் இருக்கிறுர்கள்? அவர்களுக்கு விமோசனமே கிடையாதா என்று என் மனசை உறுத்திக் கொண்டிருந்தது. எது செய்யவும் முதலில் ஒருவர் துணிய வேண்டும். நான் அதுமாதிரி செய்து உலகத்திற்கு காண்பிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்" என்றுன்.

"அப்படியானுல் சரி, நாளைக்கே ஒருவருக்கும் தெரியாமல் காதுங் காது வைத்தாப்பலே ஜானகியை கல்யாணம் செய்து கொடுக்க தயார்தான்" என்றுர் முதலியார்.

* * * *

கல்யாணமான அடுத்த நாள் கர்ணம் "நான் என்ன சொல்லுகிறேன் என்றுல் நிலமோ விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. நம் ஜானகி நிலம் இரண்டு வேலியையும் விற்று பணத்தை பாங்கில் போட்டால் நல்ல வட்டி வரும்" என்றுன் கர்ணன.

"நிலமா? எ[illegible] நிலம்?"! என்றுர் முதலியா[illegible]

"என்ன அப்படி கேட்கிறேள் அவள் ஓரகத்தி இரண்டு வேலி நிலம் எழுதி வைத்துவிட்டு போகவில்லையா?

"என்ன உளருகிறீர்! நீர் கூடத்தான் ஜானகிக்கு நிலம் ஒன்றும் வரவில்லை என்று ஊரார் சொல்லிக்கொண்டிருக்கிறுர்கள் என்று சொன்னீர்களே"

"எனக்கு ஒன்றும் புரியவில்லையே" என்றுன் கர்ணம் திடுக்கிட்டு "பட்டணத்திலேயிருந்து தான் சமாசாரம் வந்து விட்டதே. காட்டு மன்னர் குடிக்கு வக்கீல் எழுதியிருந்த கடிதம் தப்பி தவறி ராஜமன்னுர் குடிக்கு வந்துவிட்டது. காட்டு மன்னுர் குடியிலும் என் பேருள்ள ஒரு முதலியார் இருக்கிறுர். அவர் பெண் ஜானகியும் பால்யத்திலேயே விதவையாய் போனவளாம். ஆனுல் எனக்கு மட்டும் ஒரு விஷயம்புரியவில்லை. எனக்கு வக்கீலிடமிருந்து கடிதம் வருவதற்கு நாலு மணிக்கு முந்தியே ஊரிலிருக்கிற எல்லோருக்கும், ஏன் உமக்கும் கூட, ஜானகிக்கு சொத்து ஒன்றும் வரவில்லை என்று எப்படி தெரிந்தது என்று எனக்குதெரியவில்லை" என்றுர் முதலியார்.

கர்ணத்தின் முகம் சுண்டியது ஆனுல் அடுத்த நிமிஷம் பிரகாசமடைந்து "இந்த இரண்டு வேலி ஒரு பெரிய விஷயமில்லை. இது மாதிரி எத்தனையோ இரண்டு வேலிகள் ஆதிர்ஷ்டமிருந்தால் வாங்கிவிடலாம். ஆனுல் எனக்கு ஜானகி கிடைத்ததே எனக்கு வரப்போகிற அதிர்ஷ்டத்திற்கு அறிகுறி" என்று நினைத்தான் கர்ணம்.

சென்னை சிறுவர் சகாய சங்கத்தின் 16-ம் ஆண்டு விழாக் கொண்டாட்டத்தில் கனம் லேடி ஹோப் தலைமை வகித்துப் பேசும் போது எடுத்த படம். (பி. பி. பி.)

மயிலை பி. எஸ். ஹைஸ்கூல் உபாத்தியாயரும் சென்னை உபாத்தியாயர் சங்க காரியதரிசியுமான ஸ்ரீ டி. எ. பால சுந்தரமய்யர், பட்டமடை ஹைஸ்கூல் ஹெட் மாஸ்டர் பதவியை யேற்க புறப்படுமுன் மேற்படி சங்கத்தார் அவருக்கு உபசாரம் நடத்தினர். (பி. பி. பி.)